விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-4591)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை (07.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 353

## உரிமைகளை வென்றெடுப்பதே கூட்டமைப்பின் நோக்கம்



கனடா உயர்ஸ்தானிகரிடம் மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது உரிமைகளை வென்றெடுக்க எந்த அரசு துணைபுரிகின்றதோ அந்த அரசுடன் பயணித்து எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதே தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் நோக்கம் 23☛

## நீதிமன்ற தீர்ப்பின்படி புதிய அரசை ஸ்தாபிக்கலாம்

### ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்புடன் பெரும்பான்மையை நிரூபித்து, புதிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப் 23☛



## கட்சியிலிருந்து விலக்க நடவடிக்கை

### சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாநாட்டுக்கு வருமாறு கட்சி சம்மேளனத்திற்கு அழைப்பு கிடைக்கப்பெறாமையினாலேயே வருகை தரவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். 23☛

## பாராளுமன்றம் கலைப்பு தொடர்பான

# வர்த்தமானி அறிவித்தலுக்கு

# நாளைவரை இடைக்காலத் தடை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவில் பாராளுமன்றைக் கலைக்குமாறு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நாளை 8ஆம் திகதிவரை உயர் நீதிமன்றம் நீடித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



277 கோடி பெறுமதியான

## ஹெரோயின்

### பேருவளையில் மீட்பு

(பேருவளை)

277 கோடிரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் பேருவளை கடல்பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(விரிவான செய்தி 16ஆம் பக்கம்)

## இரணைமடுவுக்கு ஜனாதிபதி மைத்திரி இன்று விஜயம்?

(கிளிநொச்சி)

இன்று ஜனாதிபதி இரணைமடுவுக்கு விஜயம் மேற்கொள்ள வுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிளிநொச்சி இரணைமடு குளத்தின் வான் 23☛

## ஜனாதிபதியே தீர்வினை வழங்க வேண்டும் - சஜித்

(கொழும்பு)

ஒட்டுமொத்த நாடும் ஸ்தம்பிதமடைந்துள்ளமைக்கான தீர்வினை ஜனாதிபதி மைத்திரியே வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் பிரேமதாச தெரிவித்துள்ளார். ஜனாதிபதியினால், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட வர்த்தமானிக்கு எதிரான இடைக்காலத் தடையுத்தரவு மீதான விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் நீதிமன்றத்தை முழு 23☛

## 19ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை பாராளுமன்றம் ஊடாக சீர்செய்யத் தயார்

### ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை

(கொழும்பு)

19ஆவது திருத்தச்சட்டத்தில் நடைமுறை ரீதியிலான குறைபாடுகள் காணப்படுமாயின் அதன் கருப்பொருள் மற்றும் அதனூடாக ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக ரீதியிலான விடயங்களை பாதுகாத்து - பலப்படுத்தி அரசியல் ரீதியில் பிரச்சினைக்குரிய விடயங்களுக்கான திருத்தங்களை பாராளுமன்ற நடைமுறைக்கமைய மேற்கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அர்ப்பணிப்புடன் இருக்கின்றார்.

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று மாலை விடுத்த சிறப்பு ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 23☛

## கிணற்றில் விழுந்த வயோதிபர் பலி

### கரணவாயில் சம்பவம்

(கரணவாய்)

பாதுகாப்பற்ற வீட்டு கிணற்றில் விழுந்த வயோதிபர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

நேற்று வியாழக்கிழமை காலை கரணவாய் மத்தி. 24☛

## தேவையான நேரத்தில் பலத்தை காட்டுவோம்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

தேவையான நேரத்தில் தனது பலத்தை காட்ட தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொது தேர்தலை கோரி பெவதி 23☛

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சரியான முடிவை எடுப்பார்

### வெளிநாட்டு இராஜதந்திரிகள் நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பிற்கு இணங்க செயற்பட்டு சரியான முடிவை எடுப்பார் என ரணில் விக்கிரமசிங்கவுடனான 23☛

நடப்பு ஆண்டு காலப்பகுதியில்

## 430 கிலோகிராம் ஹெரோயின் மீட்பு


### 37,304 பேர் கைது

(கொழும்பு)

இந்த ஆண்டின் கடந்த காலப்பகுதியில் சுமார் 5,166 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய சுமார் 430 கிலோ கிராம் 23☛

### கம்பியால் கால்கள் கட்டப்பட்ட நிலையில்

## மன்னார் மனித புதைகுழியில் எச்சங்கள் நேற்று மீட்பு



(மன்னார்)

கால்கள் இரும்புக் கம்பியால் கட்டப்பட்ட நிலையில் கொலை செய்து புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் வகையில் மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து மனித எச்சங்கள் 23☛

மகாராஜா பொதிகள் சேவை
Parcel.lk
சிக்கனப் பொதிகள் சேவை
GTV Express SRI LANKA
aramex
1Kgக்கான கட்டணம்
ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்

| | |
|---|---|
| நோர்வே சுவிஸ்சர்லாந்து | 900/- |
| அமெரிக்கா கனடா | 1000/- |
| ஜேர்மனி | 650/- |
| இங்கிலாந்து | 600/- |
| போர்த்துக்கல் ஸ்பெயின் சுவீடன் பெல்ஜியம் நெதர்லாந்து பிரான்ஸ் இத்தாலி போலந்து ஆஸ்திரியா டென்மார்க் பின்லாந்து | 750/- |

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338<br>021 4925024 | 021 4930099 | 024 4930200<br>076 6908961 | 021 4930330 |

(C-4625)

# நஞ்சு அருந்திவிட்டு பொலிஸ் நிலையத்துக்கு சென்ற யுவதி

## நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

(கரணவாய்)

நஞ்சு அருந்திவிட்டு பொலிஸ் முறைப்பாட்டு பிரிவுக்கு சென்ற யுவதி ஒருவர் மயங்கி சாய்ந்த சம்பவம் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

நேற்று வியாழக்கிழமை மதியம் கரவெட்டி பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் நெல்லியடி பொலிஸ் நிலைய முறைப்பாட்டு பிரிவுக்கு சென்றுள்ளார்.

அங்கு முறைப்பாடு பதிவு செய்வதற்காக இருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் தான் கொண்டு வந்த மூன்று பக்க கடிதம் ஒன்றை கொடுத்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர் அதனை வாசிக்க முற்பட்ட போது அவ் யுவதி மயங்கி சரிந்து விழுந்துள்ளார்.

அவரை பொலிஸ உத்தியோகத்தர் அங்கிருந்த அவசர அம்புலன்ஸ் நோக்கி தூக்கி சென்றபோது வாயல்இருந்து நுரை வெளியேறியதுடன் நஞ்சு திரவ மணமும் வீசியுள்ளது.

இதனையடுத்து அவசர அம்புலன்ஸ் மூலம் அவ் யுவதி பருதத்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுளளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-3,60)


40 வருட சேவை
**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே. இல.: 077 662 9137

**ஆண்டு 2019**
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 2.00 மணி வரை

**9, 10, O/L**

ஆரம்பம் : 08.12.2018 சனிக்கிழமை
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 2.00 மணி வரை

- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
- மாதாந்த பரீட்சைகள்
- அனுமதிகள் முன்கூட்டியே
- Day Class மிக விரைவில்

(இ-4607)



**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

**வட மாகாண அலுவலக பணியாளர்**
+பிரிவு I பிரதி சனி
9.30 → 2.30 மணிவரை
+பிரிவு II பிரதி ஞாயிறு
12.30 → 5.00 மணிவரை

**அதிபர் சேவை**
பிரதி ஞாயிறு
9.30 → 3.30 மணிவரை

**SLAS, SLEAS**
பிரதி ஞாயிறு
9.00 → 3.00 மணிவரை

**ஆசிரியர் தெரிவு**
ஞாயிறு
9.00 → 2.00

076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
(C-4632)



**முன்பள்ளி ஆசிரியருக்கான**
**வேலைவாய்ப்பு**

தோணிக்கல் நம்பிக்கையின் வாசல் முன்பள்ளிக்கான ஆசிரியர் தெரிவு

**தகைமைகள்:-** க.பொ.த சா/த, உயர்தரம்,முன்பள்ளி டிப்ளோமா சித்தியடைந்த பெண் பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 15.12.2018**

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**
நிர்வாகி, நம்பிக்கையின் வாசல் 74, பார்க்குழி வீதி, தோணிக்கல், வவுனியா.
தொடர்பு: 077 075 7316
(C-4622)


# மரண அறிவித்தல்



## திருமதி கௌசலா இராகவன்

### (ஆசிரியை - உடுவில் மான்ஸ் ம.வி)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌசலா இராகவன் கடந்த 04.12.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசா - பவளமலர் தம்பதிகளின் அன்பு மகளும் நடராசசுந்தரம் - றோஸ்லின் ஜெயமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும் இராகவனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வட மாகாணம்) அன்பு மனைவியும் துஷாகரன், ஜெயதாரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜித்தா (ஆசிரியை - நீர்/தோப்பு றோ.க.த.ம), சுகிர்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராகுலன் (லண்டன்), ரகுநாத் (பிரதி அதிபர் - யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ரமணன் (நெதர்லாந்து), மேனகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - உடுவில்) ஆகியோரின் மைத்துனியும் டெவின் சந்தோஷ், றொபினா நித்திக்கா, ஸ்பிநோஸ், பியன், விதுர்ஷனா, பிரணவன், சஷானா, கௌதமன், தனேஸ்வர், கார்த்திகன், ஹரிஸ், அபிநாவ், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.12.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4628)

8/7, ஆர்க் வீதி,
உடுவில்.

தகவல்:- குடும்பத்தினர்
077 336 4337, 077 116 3338






வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(7808)


## மாந்தை கிழக்கு பிரதேச சபை 2019 ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

மாந்தை கிழக்கு பிரதேச சபை 2019 ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்ட வழங்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள் அங்கிகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 10.12.2018 தொடக்கம் 24.12.2018 வரை விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்ப படிவக்கட்டணம் ரூபா 50.00ம் விண்ணப்ப பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00ம் செலுத்த வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 26.12.2018ஆம் திகதிவரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

### தொகுதிகள் - தொகுதி A பொருட்கள் வழங்குதல் (பொது)
### தொகுதி B சேவை / வேலை

| தொ.இல | பொருட்கள் வழங்குதல் |
|---|---|
| 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம், இரும்பு) |
| 03 | கணணிகள், கணணியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய டோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| 04 | யன்னல் திரைச்சேலைகள் சீருடை மற்றும் துணிவகைகள் |
| 05 | கட்டட இரும்புப்பொருட்கள் பெயின்ட் மற்றும் காட்வெயார் பொருட்கள் |
| 06 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| 07 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்ப்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடையு பொருட்கள் |
| 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள் விம், ஹாபிக் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| 11 | தோல் உற்பத்திப் பொருட்கள், கம் சப்பாத்துக்கள் |
| 12 | எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள் |
| 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| 14 | இரும்புப் பொருட்கள் |
| 15 | கற்கள், மண் வகைகள் |
| 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| 17 | அலங்காரப் பொருட்கள் |
| 18 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| 19 | உணவு, சிற்றுண்டி வகை |

| தொ.இல | சேவைகள் / வேலைகள் விபரம் |
|---|---|
| 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் |
| 02 | தளபாடங்கள் திருத்தம் |
| 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் காற்று குளிராக்கி, தொலைநகல், நிழற்படப் பிரதி இயந்திரம், கணணி, கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம், |
| 04 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மின் முறுக்கலும் |
| 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள் ஏனையவை |
| 06 | கட்டட அமைப்பும் திருத்த வேலைகளும் |
| 07 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| 08 | இறப்பர் முத்திரைகள் தயாரித்து வழங்குதல் |
| 09 | சகலவித வாகனத் திருத்தமும் மின்சார வேலை வாகன உட்பாகம் சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| 10 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| 11 | வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

**நிபந்தனைகள்**

01 வழங்கல்கள்/சேவைகள் 2019ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02 திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகளை நிராகரிக்கும் உரிமை தலைவருக்குண்டு
03 பதவிற்காய் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தலைவருக்குண்டு.
04 ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளுக்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான படிவங்களில் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
05 மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்
*பிரதேச சபை*
*மாந்தை கிழக்கு.*

(C-4630)

# அரசியல் நெருக்கடிக்கு பொதுத் தேர்தலே தீர்வு!

## மகிந்த அணி உறுதி



(கொழும்பு)
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு பொதுத்தேர்தல் ஒன்றின் மூலமே தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை கலைத்து ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றது.

பிரதம நீதியரசர் உள்ளிட்ட 7 பேர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு வருகை தந்த டளஸ் அழகப்பெரும, நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினையை நிறைவேற்றதிகாரத்தின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியாது. அவற்றை தீர்க்க பொதுத்தேர்தலுக்கு செல்வதே சிறந்த தீர்வு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக

# எந்தவொரு காட்டிக்கொடுப்புக்கும் ஐ.தே.கவினர் தயாராகவே உள்ளனர்

## மகிந்த யாப்பா குற்றச்சாட்டு



(கொழும்பு)
ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்காக எந்தவொரு காட்டிக் கொடுப்பினையும் செய்ய ஐக்கிய தேசியக் கட்சியினர் தயாராகவே உள்ளனர் என அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதரகங்களுக்கு சென்று மண்டியிட்டு ஆதரவு கோருகின்றனர்.

எந்தவொரு காட்டிக்கொடுப்பையும் செய்வதற்கு அவர்கள் தயாராகவே இருக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலைக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையே பொறுப்புக் கூறவேண்டும். ஆட்சிக்காக அனைத்துக் காட்டிக்கொடுப்புகளையும் அவரும் அவரது சகாக்களும் செய்துவருகின்றனர். உலக வரலாற்றிலேயே நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு முரணாக, ஜனநாயகத்துக்கு எதிராக இலங்கையில் சபை அமர்வு நடத்தப்பட்டுவருகின்றது.

மக்களின் பணம் வீண் விரயமாக்கப்படுகின்றது. எனவே, ஸ்திரமான அரசு அமைந்த பின்னர் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும். அதற்காக குழுவொன்று அமைக்கப்படும்.

சபாநாயகர் உட்பட இந்த ஜனநாயக விரோத- நிலையியற்கட்டளைகளை அப்பட்டமாக மீறும் வகையிலான செயற்பட்ட அனைத்து அதிகாரிகளும்பொறுப்புகூற வேண்டிவரும்" என மகிந்த யாப்பா தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதியின் குடியுரிமையை பறிக்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது-சு.க.



(கொழும்பு)
ஜனாதிபதியின் குடியுரிமையை பறிக்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக குற்றப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டு, அவரது குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் தொடர்ச்சியாக கருத்து வெளியிட்டு வருகின்றன.

இந் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தற்போது மக்கள் விடுதலை முன்னணியும் ஐ.தே.கவுடன் இணைந்து தவறாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வின் போது மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஜனாதிபதியின் குடியுரிமையையும் பறிக்க முடியும் என தெரிவித்திருந்தார்.

அவர்கள் நினைப்பவற்றையெல்லாம் அவ்வாறு இலகுவாகச் செய்துவிட முடியாது. அதற்கான பலமும் யாருக்கும் கிடையாது.

அடுத்த பிரதமர் நியமனம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் எந்த தீர்மானமோ அல்லது கலந்துரையாடல்களோ இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

பிரதமரை நீக்கும் அல்லது நியமிக்கும் அதிகாரம் நிறைவேற்றதிகாரம்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமே காணப்படுகின்றது. எனவே அது குறித்து நாம் தீர்மானிக்கவோ கருத்து தெரிவிக்கவோ முடியாது" என தெரிவித்துள்ளார். (இ-7)

# வவு. பழைய பேருந்து நிலையம் இன்று முதல் மீளவும் திறப்பு

(பனிக்கன்குளம்)
வவுனியா வர்த்தகர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் ஒழுங்கமைப்பில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயுடன் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக இன்று முதல் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் சகல பேருந்துகளும் வந்து செல்வதற்கு காலை ஆளுநர்தலைமையில்யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் குறித்து வவுனியா வர்த்தகர் சங்கத்தலைவர் எஸ். சுஜன் மேலும் தெரிவிக்கும்போது,

வவுனியா பழைய பேருந்து நிலையத்தினை மீளத் திறப்பது குறித்து இதன் போது முடிவு எட்டப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்தை மீளத்திறப்பது குறித்து அனைத்து தரப்பினரிடமும் இணக்கம் ஏற்பட்டுள்ளதுடன் இதனையடுத்து இன்று முதல் இதை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளுநர் முடிவு மேற்கொண்டு தொடர்புபட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் இன்றைய தினத்திலிருந்து சகல பேருந்து சேவைகளும் பழைய பேருந்து நிலையத்தினூடாக வந்து செல்வதற்கு ஆளுநர் தலைமையில் இன்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இணக்கம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர் சங்கத்தின் தலைவர் எஸ்.சுஜன் தெரிவித்துள்ளார்.

பழைய பேருந்து நிலையத்தினை மீளத்திறந்து சகல பேருந்துகளும் பழைய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்வதற்கு இணக்கம் ஏற்பட்டு வடக்கு மாகாண ஆளுநரினால் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281-250)

# மகிந்த குடும்பத்திற்காகவே 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது-ஜோன்



(கொழும்பு)
அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் விரைவாக கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தம். பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் அரசியலில் பிரவேசிக்கக்கூடாது என்பதற்காகவும், ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து பாராளுமன்றத்தில் அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற காரணத்திற்காகவும் மிகவும் சூட்சுமமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 ஆவது அரசியலமைப்பினை ஐக்கிய தேசியக் கட்சியினர் தமக்கு சாதகமாக இயற்றி தொடர்ந்து பாராளுமன்றத்தில் அதிகாரம் செலுத்தி நிறைவேற்று அதிகாரத்தை பலவீனப்படுத்த உருவாக்கினர். இதன் காரணமாக ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களின் பிரதிபலிப்பே இன்றைய அரசியல் நெருக்கடி அரசியலமைப்பிற்கு பொருள் கோடல் செய்வதால் தொடர்ந்த நெருக்கடி நிலைமை தொடர்ந்த வண்ணமே காணப்படும்.

இதற்குப் பொதுத் தேர்தல் ஊடாகவே தீர்வு காண முடியும் எனத் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதிக்கு ஏற்ற விதமாக நடந்து கொள்வது பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாம்

## சந்திம வீரக்கொடி கூறுகிறார்



(கொழும்பு)
ஜனாதிபதிக்கு ஏற்ற விதமாக பிரதமர் ஒருவர் நியமிக்கப்படவில்லை எனின் நாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்ல முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு ஏற்ற விதமாக பிரதமர் ஒருவரை முன்வைப்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசியல் சிக்கலுக்கு அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்வு ஒன்றிற்கு வர வேண்டும்என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்திய கடல் எல்லைக்குள் இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)
இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 5 பேரை இந்தியக் கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை சென்னை துறைமுகத்தில் வைத்து விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பொங்கி எழுந்தார் புஜாரா

## சரிவிலிருந்து மீண்டது இந்தியா



பிரமாதமான சதம் அடித்து இந்தியாவை தூக்கி நிறுத்திய புஜாரா

அடிலெய்ட் டெஸ்டில் துடுப்பாட்டத்தில் ஜொலித்த புஜாரா சதம் கடந்து கைகொடுக்க, சரிவிலிருந்து மீண்ட இந்திய அணி 250 ஓட்டங்களை எட்டியது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் நேற்று அடிலெய்டில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். ரோகித் சர்மா மீண்டும் டெஸ்ட் அணிக்கு திரும்பினார்.

**சரிந்த 'ரொப்'**

இந்திய அணிக்கு முரளி விஜய், லோகேஷ் ராகுல் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. ஸ்டார்க், ஹேசல்வுட் இருவரும் பவுன்சர்களாக வீசி மிரட்டினர். ஸ்டார்க் வீசிய முதல் ஓவரில் 2 ஓட்டங்கள் எடுத்த ராகுல், அடுத்து ஹேசல்வுட் 'வேகத்தில்' ஆட்டமிழந்தார். ஹேசல்வுட் ஓவரில் இப் போட்டியின் முதல் பவுண்டரி அடித்த முரளி விஜய் (11) நிலைக்கவில்லை.

**ஹோலி ஏமாற்றம்**

பெரிய எதிர்பார்ப்புடன் வந்த ஹோலி 3 ஓட்டங்களுடன், கவாஜாவின் 'சுப்பர்' பிடியால் விரைவில் திரும்பினார். இம் மைதானத்தில் ஒற்றை இலக்க ஓட்டங்களில் இவர் ஆட்டமிழந்தது இதுதான் முதன் முறை. ஹேசல்வுட் பந்தில் பவுண்டரி அடித்தார் புஜாரா. மறுபக்கம் லயன் பந்தை சிக்சருக்கு விரட்டி ஆறுதல் கொடுத்தார் ரகானே. கடைசியில் இவரும் 13 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, இந்திய அணி 41 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பறிகொடுத்து தள்ளாடியது.

**ரோகித் அவுட்**

அடுத்து ரோகித் சர்மா, புஜாரா இணைந்தனர். கம்மின்ஸ், லயன் பந்துகளை சிக்சருக்கு பறக்கவிட்டார் ரோகித். ஒருநாள் போட்டிகளைப் போல அவசரப்பட்டு விளையாடிய இவர் 37 ஓட்டங்களுடன் லயன் சுழலில் பொறுப்பற்ற முறையில் ஆட்டமிழந்தார். ரிஷாப் பன்ட் வந்த வேகத்தில் ஸ்டார்க் ஓவரில் அடுத்தடுத்து சிக்சர், பவுண்டரி என விளாச இந்திய அணியின் ஓட்டஎண்ணிக்கை ஒருவழியாக 100 ஓட்டங்களை கடந்தது. இந்நிலையில் ரிஷாப் 15 ஓட்டங்களுக்கு கிளம்பினார்.

**புஜாரா அபாரம்**

புஜாரா, அஷ்வின் இணைந்து ஸ்கோரை உயர்த்த உதவினர். 127 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள் என தடுமாறிய இந்திய அணிக்காக 7ஆவது விக்கெட்டுக்காக 62 ஓட்டங்கள் சேர்த்த போது அஷ்வின் (35) ஆட்டமிழந்தார். இஷாந்த் (5) போல்டானார்.

ஒருபக்கம் விக்கெட் சரிந்தாலும் மறுபக்கம் நிதானமான, உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் புஜாரா. ஹேசல்வுட் ஓவரில் அடுத்தடுத்து சிக்சர், பவுண்டரி அடித்த இவர் டெஸ்ட் அரங்கில் 16வது, அவுஸ்திரேலிய மண்ணில் முதல் சதம் அடித்தார். புஜாரா 123 ஓட்டங்களுக்கு 'ரன்அவுட்டாக' முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இந்திய அணி முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுக்கு 250 ஓட்டங்களை எடுத்திருந்தது. மொஹமட் ஷமி (6) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் ஸ்டார்க், ஹேசல்வுட், கம்மின்ஸ், லயன் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

# பார்சிலோனா வெற்றி



கோல் அடித்த மகிழ்வில் பார்சிலோனாவின் மல்கம்

'கோபா டெல் ரே' கிண்ண கால்பந்து 'ரவுண்ட் 32' சுற்றின் 2வது 'லெக்' போட்டியில் பார்சிலோனா அணி 4-1 என்ற கோல்கள் கல்சுரல் லியோனிசா அணியை வீழ்த்தியது.

ஸ்பெயினில் உள்ளூர் கால்பந்து கழக அணிகள் பங்கேற்கும் 'கோபா டெல் ரே' கிண்ண தொடர் நடக்கிறது. இதன் 'ரவுண்ட் 32' சுற்றின் 2ஆவது 'லெக்' போட்டியில் பார்சிலோனா, கல்சுரல் லியோனிசா அணிகள் மோதின. அபாரமாக ஆடிய பார்சிலோனா அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா அணிக்கு முனிர் (18வது நிமிடம்), டெனிஸ் சாரஸ் (26, 70வது), மல்கம் (43வது) கோலடித்து கைகொடுத்தனர். லியோனிசா அணி சார்பில் ஜோசப் செனே (54வது) ஒரு கோலடித்தார்.

முதல் 'லெக்' போட்டியில் 1-0 என வென்றிருந்த பார்சிலோனா அணி, ஒட்டு மொத்தமாக 5-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று, 'ரவுண்ட் 16' சுற்றுக்குள் நுழைந்தது.

# 'விஸ்வரூப' வில்லியம்ஸன்

## நியூசிலாந்து முன்னிலை



சதம் அடித்த பூரிப்பில் வில்லியம்ஸன்

பாகிஸ்தானுக்கு எதிரான அபு தாபி டெஸ்டில் அணித் தலைவர் வில்லியம்சனின் விஸ்வரூப சதம் கைகொடுக்க நியூசிலாந்து அணி 198 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன.

முதலிரண்டு போட்டிகள் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. மூன்றாவது டெஸ்ட் அபு தாபியில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் நியூசிலாந்து 274, பாக்.,348 ஓட்டங்கள் எடுத்தன.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், நியூசிலாந்துஅணி இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 26 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அணித் தலைவர் வில்லியம்சன் (14) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்று, நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. யாசிர் ஷா 'சுழலில்' சோமர்வில்லி (4) ஆட்ட மிழந்தார். ராஸ் டெய்லர் (22) விரைவில் திரும்பினார். அணித் தலைவர் வில்லியம்சன், நிக் கோலஸ் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. வில்லியம்சன் டெஸ்ட் அரங்கில் 19ஆவது சதம் அடித்தார். தன் பங்கிற்கு நிக்கோலஸ் அரைச்சதம் கடந்தார்.

இந்நிலையில் நேற்றைய 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில், நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்கள் எடுத்து, 198 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. வில்லியம்சன் (139), நிக்கோலஸ் (90) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# உரிமைகளை...

வந்துள்ளனர். தற்போது வளர்ச்சியடையவுள்ள நகராக யாழ்.நகரம் இருக்கின்றபடியால், அதிகளவான வேலைத்திட்டங்களை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக வங்கியின் நிதியினூடாக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. ஒருசிலதிட்டங்கள் முன்னெடுத்துள்ளார்கள். ஏனைய திட்டங்களை எதிர்வரும் ஆண்டுகளில் முன்னெடுப்பதற்கு கால வரையறை நிர்ணயித்துள்ளனர். அதனடிப்படையில் 2021 ஆம் ஆண்டு வேலைத்திட்டங்கள் நிறைவுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எமது பாதாள சாக்கடை திட்டத்தை அறிமுகப்படுத்தும் திட்டம் தொடர்பாக கூறியிருந்தோம். எதிர்வரும் மார்ச் மாதத்தில் மீண்டும் யாழ்.மாநகரத்திற்கு வருகை தந்து, திட்டத்தை அமுல்படுத்துவதாக கூறினார்கள்.

தற்போதைய, அரசியல் நிலைமை இவ்வாறு இருக்கும் பட்சத்தில் உங்களின் பங்கு என்ன என வினவினார். அரசியல் குழப்பத்தை எவ்வாறு முன்னெடுக்கின்றார்கள் என நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டுமென்று அல்ல. தவறான கருத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மத்தியில் பலரால், அதாவது, சிங்கள எதிர்த்தரப்பினால் பல்வேறு பிரசாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. எமது நாட்டின் அரசியலமைப்பை மீறியதன் காரணமாகவும், நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாகவும், அதனை எதிர்த்துக் குரல்கொடுத்தோமே தவிர, எந்தவொரு ஆட்சியாளருக்கும் சார்பாக குரல்கொடுக்கவில்லைஎன்பதே உண்மை. அதனை நாங்கள் சட்டரீதியாகவும் எமது தலைவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். சட்டமும் அதன் நடைமுறையை முன்னெடுத்து வருகின்றது.

சட்டத்தின் முடிவைக் கூற முடியாது. தமிழ் மக்கள் எவ்வாறான அரசியல் நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள் என்பது பற்றி கூறியிருந்தோம். ஒரு ஐக்கிய இலங்கைக்குள் பிளவுபடாத இலங்கைக்குள் வடகிழக்கு இணைக்கப்பட்டு, எமது பூர்வீக இடங்களில் பெரும்பான்மை மக்கள் எவ்வாறு வாழ்கின்றார்களோ அத்தனை கௌரவத்துடன் வாழ வேண்டும் என்பதற்கான ஒரு அரசியல் சாசனத்தை உருவாக்கி ஐக்கியத்துடன் வாழ வேண்டுமென்றே கேட்டிருக்கின்றோம். யாராவது ஆட்சிக்கு வந்தாலும், எமது தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலை எமது அரசியல் நீதியான நியாயமான முறையில் வென்றெடுப்பதே. எந்த அரசு எமக்குத் துணை புரிகின்றதோ அந்த அரசுடன் பணிபுரிந்து எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதே எமது நோக்கம் என்பதையும் அவரிடம் சுட்டிக்காட்டியதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-101)

# ஜனாதிபதி கொலைச்சதி பின்னணியில் ரணில், பொன்சேகா மற்றும் பூஜித

## ஊழல் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் நாமல் குமார தகவல்



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கொலை சதித்திட்டத்தின் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகிய பிரதான சூத்திரதாரிகள் இருக்கின்றனர்" என நாமல் குமார தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் விஷேட ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து அதில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாமல் குமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இவ் வருடம் கடந்த ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதியளவில் நான் பொலிஸ்மா அதிபரை சந்திக்க சென்றிருந்தேன். அப்போது அவர் எனக்கு, 'எப்படி நாமல்சந்தோஷமா? இவன் என்னுடைய ஆள்" என்று கூறும் போது நாலக சில்வா சிவில் உடையில் அங்கு வருகிறார். 'உங்களுக்கு பரிசொன்று இருக்கிறது' என்று கூறி அவர் 2 காசோலைகளை கையில் எடுக்கிறார். அந்த இரு காசோலைகளிலும் இரண்டரை இலட்சம் ரூபா என குறிப்பிடப்பட்டிருந்தது.

பொலிஸ்மா அதிபர் தான் அந்த கடிதத்தை என் கைகளில் தந்தார். ஊடகவியலாளர்களும் புகைப்படங்களை எடுத்தனர். பொலிஸ்மா அதிபர் காசோலைகள் இரண்டையும் அப்போதே இழுத்து எடுத்தார்.

பின்னர் பொலிஸ்மா அதிபர் என்னிடம்,

'இதற்கு பிறகு நீ செய்ய நினைத்துக் கொண்டிருக்கும் அனைத்தையும் நிறுத்து என்னை கெட்ட மனிதனாக்கி கொள்ளாதே' என்று அதிகாரத் தொனியில் கூறினார்.

அதற்கு நான் சிரித்தேனே தவிர வேறு எதுவும் கூறவில்லை. ஏனென்றால் அவர் நல்ல மனிதனா? கெட்ட மனிதனா? என்று எனக்கு தெரியும்.

அவர் அன்று செய்த அந்த செயல் தான் எனக்கு கிடைத்த பெரிய சந்தோஷம். ஏனென்றால், நாட்டின் பொலிஸ்மா அதிபரும் இச் சதித் திட்டத்தின் பின்னணியில் இருக்கிறார் என அன்று நான் தெரிந்து கொண்டமையால்.

'உன்னை நாலக சில்வாவிடம் பாரம் கொடுத்துள்ளேன் . வேறு எந்த பொலிஸ் அதிகாரிகளுடன் நீ தொடர்புகளை வைத்துக்கொள்ள முடியாது. உன்னுடைய பேஸ் புக் மூலம் பிரசாரம் செய்பவற்றை உடனடியாக நிறுத்திக் கொள். நான் கூறுவதைக்கேட்டுநடந்து கொண்டால் உனக்கு பணம் கிடைக்கும்' என பொலிஸ்மா அதிபர் என்னிடம் கூறினார்.

அதற்கு பிறகு அந்த இரு காசோலைகளையும் எனக்கு கொடுத்து விட்டு 'இந்த காசோலைகள் இரண்டும் நாலக சில்வாவின் பெயரில் தான் இருக்கிறது அவரிடமிருந்து பணத்தை பெற்றுக் கொள்' என்று பொலிஸ்மா அதிபர் கூறினார்.

நான் இவற்றையெல்லாம் வெளிப்படுத்தி 24 மணித்தியாலங்கள் கடக்கும் முன்பே பொலிஸ்மா அதிபர், 'நாமல் குமார வெளியிட்டுள்ள தகவல்களின் குரல் பதிவுகள் சந்தேகத்திற்கிடமானவை' என்று அறிக்கை வெளியிட்டார்.

பொலிஸ்மா அதிபர் இவ் விடயம் தொடர்பாக விசாரணை செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்காது மற்றொரு பிரிவிடம் விசாரணை செய்யுமாறு வழங்கினார்.

இவைகள் தான் சந்தேகத்தை எழுப்புகின்றன. இவ் விடயத்தை மறைக்கவே அரசியல் வாதிகள் வெவ்வேறு வழிமுறைகளை பிரயோகிக்கிறார்கள். சரத் பொன்சேகா கோஷமிடுகிறார். ரணிலும் கோஷமிடுகிறார்.

நான் ஒரு வருட காலமாக இவ் விடயங்கள் தொடர்பாக நாலக சில்வாவுடன் பேசியுள்ளேன். அதற்கு நாலக சில்வா,

'அரசியலமைப்பில் இருக்கிறதாம் ஜனாதிபதி பதவி வெற்றிடமானால் அப்பதவிக்கு பாராளுமன்றில் பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்கும் ஒருவரை முன்மொழியலாம் என்று கூறினார். அவ்வாறெனில் யார் அந்த இடத்தை பெற முடிந்தவர், ரணில் விக்கிரமசிங்க. அதனால் நாங்கள் இந்த திட்டத்தை நிறைவேற்றினால் கரையேறிவிடலாம்' என்று கூறினார்.

அதற்கு நான், இதற்கான திட்டம் எங்கே என்று நாலக சில்வாவிடம் கேட்டதற்கு நாலக சில்வா, 'பயப்படாதே எங்களிடம்

(சிங்களத்தில்படு : பொருள் அல்லது ஆள் படை எனப் பொருள்படும்) இருக்கிறது' என்று கூறினார்.

நான் கேட்கிறேன் யார் அது எஸ்.டி.எஃப் (S.T.F)? ஆ என்று நான் ஏன் அப்படி கேட்டேன். கண்டி தெல்தெனிய கலவரம் இடம்பெற்ற சந்தர்ப்பத்திலும் நான்பொலிஸ் வாகனத்தில் நாலக சில்வாவின் அருகில் அமர்ந்து கொண்டு தான் இருந்தேன். அச் சந்தர்ப்பத்திலும் சரத் பொன்சேகா நாலக சில்வாவோடு தொலைபேசியில் பேசினார். அவை அனைத்தையும் நான் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்.

அவர்கள் கதைத்த பெரும்பாலான விடயங்கள் எனது கைத்தொலை பேசியில் பதிவாகியுள்ளது.

அதுமட்டுமல்லாது இலங்கை பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் சமன் திஸாநாயக்கவை அப் பதவியிலிருந்துநீக்க மேற்கொண்ட திட்டம், கொழும்பு மேற்கு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி நந்தன முனசிங்க, களுத்துறை மாவட்டம் பிரதி பொலிஸ்மா அதிபர் கொடித்துவக்கு, விஷேட அதிரடி படை கட்டளைத் தளபதி லதீப் மற்றும்உதவிப்பொலிஸ் அதிகாரி பிரசன் டி அல்விஸ் ஆகியோரை கொலை செய்வதற்கு மேற்கொண்ட சதித் திட்டங்களின் குரல் பதிவுகளை நான் இன்னும் சேகரித்துக்கொண்டு தான் இருக்கிறேன்" என தெரிவித்தார். (இ-7)




# கடல்நீரிலிருந்து குடிநீரைப் பெறுவதற்கான பொறிமுறை குறித்த திட்டங்களை சமர்ப்பிக்கவும்

## அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயின் ஏற்பாட்டில் தீவக அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம்நேற்று முன்தினம்வேலணை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தீவகத்தின் கல்வி மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள், விவசாயம்,மீன்பிடி, போக்குவரத்து சம்பந்தமாக இதில் ஆராயப்பட்டது.

மாகாணகல்விபணிப்பாளர்செ.உதயகுமார்,வேலணை உதவிப் பிரதேச செயலர், பிரதேசசபை தவிசாளர் கருணாகர குருமூர்த்தி,பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,பேராசிரியர் குகபாலன்,ஆளுநரின் செயலர் எல்.இளங்கோவன்,உதவிச் செயலர் ஏ.எக்ஸ் செல்வநாயகம்,ஆளுநரின் பிரதம ஆலோசகர் எஸ்.எஸ்.குகநாதன் உள்ளிட்ட தீவக வலய சமூகபிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

தீவகத்தில் மாணவர்களின் கல்வியினை மேம்படுத்த எடுக்க வேண்டிய. நடவடிக்கைகள்தொடர்பிலும்கடந்தகால கல்விச்செயற்பாடுகள் குறித்தும்ஆளுநர் கேட்டறிந்து கொண்டார். குறிப்பாக தீவகத்தில்மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாக காணப்படும்தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அதிகாரிகள் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்த ஆளுநர் கடல் நீரியிலிருந்து குடிநீரை பெறுவதற்கான பொறிமுறையை உருவாக்குதல் குறித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் திட்டங்களை சமர்ப்பிக்குமாறும் பணித்தார்.

தீவக மக்களின் பிரதான விவசாய நடவடிக்கையான புகையிலையினை தேசிய ரீதியில் தடைசெய்யும் திட்டம் 2020ஆம் ஆண்டளவில் நடைமுறைக்கு வரும் நிலையில் அதற்கான மாற்றுப் பயிர்களை பயிரிடுவது தொடர்பில் விவசாய போதனாசிரியர்களுடன் கலந்துரையாடினார். குறிப்பாக முருங்கை,கற்றாழை போன்றவற்றை மாற்றுப் பயிராக கொண்டு வருவதற்கு ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தீவக கல்வி மேம்பாட்டில் விசேட கவனத்தினை தாம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்ட ஆளுநர் எதிர்வரும் வாரங்களில் கல்விக்கான விசேட கூட்டமொன்றினை தீவக பாடசாலை அதிபர்களுடன் நடத்தவுள்ளதாக தெரிவித்தார். (இ-9)

# இராசி பலன்

**07.12.2018**

கார்த்திகை 21, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு

அமாவாசை பிற்பகல் 1.28 மணிவரை

கேட்டை முழுவதும்

சுபநேரம் 6.17-7.47 மணிவரை

இராகுகாலம் 10.47-12.17 மணிவரை

வளவன்

கிரகநிலை: செவ் | ராகு | கேது | சனி | குரு, சூரி, சந் | புத, சுக்

சந்திராஷ்டமம்: கார்த்திகை

**மேடம்:** குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், விரயங்கள் கூடும், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியம் சீராகும், நன்மைகள் நடைபெறும் நாள், கடன்சுமை குறையலாம்.

**கடகம்:** மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்டநாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** பெரிய மனிதர்கள் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்க முற்படுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், விருப்பங்கள் நிறைவேறும் நாள், புதிய பாதை புலப்படும் நாள்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், முன்னேற்றம் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** உடல்நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், இலாபகரமான நாள், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள்.

**கும்பம்:** வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு, அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்.

**மீனம்:** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கலாம்.

# விதிமுறைகளைப் பின்பற்றாத உணவகத்தை மூட உத்தரவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத 4 உணவகங்கள் மீது கட ந்த மாதம் நடுப்பகுதியில் மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் மற்றும் சுகாதாரப் பரிசோதகரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குப் பதியப்பட்டது.

இந் நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் குறித்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அதில் இரண்டு உணவகங்களுக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் மற்றைய ஒரு உணவகத்தை மூட உத்தரவிட்டதுடன்தை மாதம்9ஆம்திகதி அடுத்த வழக்குத் தவணை கொடுக்கப்பட்டுள்ளது.

மற்றைய உணவக உரிமையாளரை எதிர்வரும் 10 ஆம்திகதி வழக்கிற்கு வருகை தருமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் டெங்கு பரவும் சூழலைக் கொண்டிருந்த இரும்பு கொள்வனவு நிலைய உரிமையாளர் மீதும் வழக்குத் தொடரப்பட்டு வழக்கு இடம்பெற்று வருகிறது. (இ-30)



புன்னாலைக்கட்டுவனில் அமையப் பெற்ற புனித இராயப்பர் தேவாலயத்தில் மறைக் கல்விக் கண்காட்சி கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குத் தந்தை அருட்பணி ம.பத்திநாதன் தலைமையில் ஆரம்பமானது. அமைக்கப்பட்ட கண்காட்சிக்கூடத்தை யாழ். மறைமாவட்ட மறைக் கல்வி நிலைய இயக்குநர் அருட்பணி அ.பெ.பெனட் நாடாவெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கலாசார அலுவல்கள் அதிகார சபையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ். மாவட்ட கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை கலாசார அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் திருமதி அனுஷா பெர்னாண்டோ கலந்து கொள்வார். (இ)

# 2018 ஆம் ஆண்டு 11 தேசிய விருதுகளை வென்ற "மனச்சாட்சியின் வழியில்" நாடகம் மேடையேற்றம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் சண்டிலிப்பாய் (வலிகாமம் தென் மேற்கு) பிரதேச கலாசாரப் பேரவையும் கலாசார அதிகார சபையும் பிரதேச செயலகமும் இணைந்து கடந்த 4 ஆம் திகதி வலி. தெற்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடத்திய கலாசார விழாவில் மேதிய விருது வென்ற "மனச்சாட்சியின் வழியில்" நாடகம் மேடையேற்றப்பட்டது.

2018 ஆம் ஆண்டு உயர்கல்வி மற்றும் கலாசார அமைச்சால் கலாசார மத்திய நிலையங்களுக்கிடையில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் முதலிடம் பெற்று எழுத்து. நெறியாள்கை உட்பட 11 தேசிய விருதுகளை "மனச்சாட்சியின் வழியில்" நாடகம் வென்றது. இந்த நாடகத்தை செ.றொபின் சன் நெறியாள்கை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆயுர்வேத வைத்தியசாலையை கச்சாய் பகுதிக்கு இடமாற்றவும்

(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் உள்ள இரண்டு ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஒன்றினை கச்சாய் பகுதிக்கு இடமாற்றம் செய்ய வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபையின் உப தவிசாளர் மயூரன் கோரிக்கை விடுத்துள்ளார் கடந்த 5ஆம் திகதி இடம் பெற்ற சபையின் 9வது அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ,

கொடிகாமம் பகுதியில் 500மீற்றர் தூர இடைவெளியில் இரண்டு ஆயுர்வேத வைத்தியசாலைகள் காணப்படுகின்றன.

ஆனால் தென்மராட்சியின் கச்சாய் மற்றும் பாலாவி ஆகிய பகுதிகளில் வைத்தியசாலைகள் இல்லை. ஆகவே அப்பகுதி மக்களின் மருத்துவத் தேவை கருதி கொடிகாமத்தில் உள்ள இரண்டு ஆயுர்வேத வைத்தியசாலைகளில் ஒன்றினை கச்சாய்ப் பகுதிக்கு மாற்ற வேண்டும். அதற்கான கட்டட வசதிகளும் அங்கே காணப்படுகின்றன என மேலும் தெரிவித்தார். (இ-30)

# தேசிய வாசிப்பு மாத விழா

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ. சா.அரியகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து கொள்வார். (இ-60)

# இளங்கலைஞர் விருது வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா அண்மையில் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் "காந்தீயம்" இதழின் ஆசிரியரான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்திக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள். விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனால்இளங்கலைஞர் விருது வழங்கப்பட்டது. (இ-5)



கொடிகாமம் பிரதம அஞ்சல் நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற உலக அஞ்சல் தின வைபத்தில் 200 வருடங்களுக்கு முன்பு பிரகடனப்படுத்தப்பட்ட "தபால்விதி" யின் மீளாய்வு செய்யப்பட்ட பொதியை சட்ட ஆய்வாளர் இரா. சோதிநாதனால் அஞ்சல் நிலைய உப அஞ்சலதிபர் இ.கெங்காதரனிடம் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# குருமனை கட்டுமான பணி இன்று ஆரம்பம்

(குருநகர்)

யாழ்ப்பாணம் குருநகர் யாகப்பர் ஆலய குருமனை கட்டுமானப் பணிகள் நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ். ஆயர் யஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். (இ-5-106)

# முன்பள்ளியின் ஒளிவிழா இன்று

(குருநகர்)

யாழ்ப்பாணம் குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளியின் ஒளிவிழா இன்று 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத் தந்தை அருட்பணி போல் அன்னக் கிளி, சிறப்பு விருந்தினராக ஐ.எஸ். அன்சலின் பெகின், மாநகர சபை உறுப்பினர் ஈ.கிறேசியன், கௌரவ விருந்தினராக, யாழ். கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் சத்தியசீலன் ஜெகதாரணி ஆகியோர் கலந்துகொள்வர். (இ-5-106)

# வன்முறையை இல்லாதொழிப்போம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சமூக செயற்பாட்டு மையம் பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாட்கள் செயற்பாடு இன்று 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் வேலைத்தளத்தில் பால்நிலைஅடிப்படையிலான 'வன்முறையை இல்லாதொழிப்போம்' எனும் பொருளில் கருத்துரை நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி கோசலை மதன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் யு.என்.எச்.சி.ஆர். அலுவலக்பொறுப்பதிகாரி வே.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்புரையை சட்டத்தரணி ஏ.ரஞ்சித்குமார் வழங்குவார். இதேவேளை காலை 8 மணிக்கு அமைதி ஊர்வலம் யாழ். பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி நாவலர் கலாசார மண்டபத்தில் நிறைவடையும். (இ-5)

# 'பாரம்பரிய கலைகளின் அரங்கம்'

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழாவில் 3 ஆம் நாள் நிகழ்வான "பாரம்பரிய கலைகளின் அரங்கம்" இன்று 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மாதனை சனசமூக நிலைய அரங்கில் , பருத்தித்துறை சமுர்த்தி முகாமையாளர் பொ.குகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், சிறப்பு விருந்தினராக, யாழ். பல்கலைக்கழக கிழக்குப் பல்கலைக்கழக, தேசிய கல்வி நிறுவக வருகை விரிவுரையாளர் கலாநிதி செ. சேதுராஜா, கௌரவ விருந்தினர்களாக, மக்கள் வங்கி ஓய்வுநிலை முகாமையாளர் எழுத்தாளர் க.சின்னராஜன், கலாபூஷணம் இ.சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன. எனவே குறித்த காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டும்படி குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 431(2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழக்கு இல. MC/2433/MT/17, சான்றுப் பொருள் இல. PR/722/17, வாகன இல. WPHK 0960 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. BR/367/PC/17 (MC/1387/PC/17), சான்றுப் பொருள் இல. PR/508/17 -PR/509/17, வாகன இல.69958261 இலக்க துவிச்சக்கரவண்டி-01, 69801500 இலக்க துவிச் சக்கர வண்டி-01, வழக்கு இல. BR/672/PC/17 (MC/ 1762/PC/17), சான்றுப் பொருள் இல. PR/1001/17, வாகன இல. 6979 44 11 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு இல. BR/919/PC/17 (MC/1247/PC/18), சான்றுப் பொருள் இல. PR/695/17, வாகன இல.NPHJ 8892 இலக்க மோட்டார் சைக்கிள்- 01, வழக்கு இல. BR/1060/PC/17, சான்றுப்பொருள் இல. PR/1746/17, வாகன இல. PN 1109 3007 இலக்க ஆட்டிறெக்வர்க்க தண்ணீர் மோட்டார்-01 மறு தவணை-12.02.2019.

வழக்கு இல. MC/505/MT/18, சான்றுப் பொருள் இல. PR/185/18, வாகன இல. இயந்திர இல.J2302 1343/48CC TVS வர்க்க மோட்டார் சைக்கிள்-01, வழக்கு இல. MC/572/MT/18, சான்றுப் பொருள் இல. PR/227/18, வாகன இல. NPWP 4806 இலக்க மோட்டார் சைக்கிள்-01, வழக்கு இல. MC/785/MT/18, சான்றுப் பொருள் இல. PR/315/18, வாகன இல. NPB EO 4846 இலக்க மோட்டார் சைக்கிள்-01, வழக்கு இல. MC/1025/MT/18, சான்றுப் பொருள் இல. PR/441/18, வாகன இல. 500-7432 இலக்க மோட்டார் சைக்கிள்-01, வழக்கு இல. BR/404/S/17 (MC/1661/S/18), சான்றுப் பொருள் இல. PR/592/18, வாகன இல. தனுஷா மரியா பெயர் பொறிக்கப்பட்ட 0150IK/251219 இலக்க படகு -01, எஞ்சின் 1, நங்கூரம் 1, நீல நிற கானில் சிறிதளவு மண்ணெண்ணெய் PR/593/18 WPWT 0242 இலக்க மோட்டார் -01, வழக்கு இல. AR/1090/18, சான்றுப் பொருள் இல. PR/1438/18, வாகன இல. 6992 5327 இலக்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி-01 மறுதவணை 07.02.2019 மன்றின் கட்டளைப்படி பதிவாளர் அறிவித்துள்ளார்.(இ)

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



**அதிபரின் வாழ்த்துச் செய்தி**
**"கல்வி உலகை வெற்றி கொண்ட தலைவன்"**

நல்லாசிரியராக, ஆளுமைமிக்க பிரதி முதல்வராக, சிறந்த கல்வி சேவையாளராக சேவையாற்றிய எம் பிரதிமுதல்வர் அவர்கள் எம் பாடசாலையை வளர்த்தெடுப்பதில் பெரும்பங் காற்றினார். இவரது வயது எல்லை என்பதே அவருக்கு ஓய்வை வழங்கியுள்ளது. ஆனால் அவரது கல்விப்பணி இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. எனவே அவரது கல்விச் சேவை எமக்கும் எம் பாடசாலைக்கும் அவசியம் தேவை. அவர் தன் ஓய்வுக்குப் பின்பும் அளப்பரிய சேவையைத் தொடர இறைவன் நல்ஆசியை அவருக்கு வழங்கவும் நலமுடன் வாழவும் இறைவனைப் பிரார்த்தித்து. பாடசாலைச் சமூகத்தின் சார்பாக அவரை வாழ்த்துகின்றேன்.

**திரு. வி.இ.ஹஸ்ரன் றோய்,**
**(அதிபர்)**



**பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி**

எமது வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் இ.சர்வேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது வித்தியாலயத்தில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பதிலதிபராக, பிரதி அதிபர் எனப் பல பரிமாணங்களைக் கொண்டு வித்தியாலய வளர்ச்சியினை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்ல அக்கறை கொண்டு செயற்பட்டவராவார். அதுமட்டுமல்லாமல் வித்தியால யத்தினையும் சமூகத்தினையும் இணைக்கின்ற உறவுப் பாலமாகச் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இன்று அறுபதாவது அகவையைக் காணும் இவ் ஆசானை அகமகிழ்ந்து வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்தும் எமது பிரதேச கல்வி வளர்ச்சிக்கு உங்களது காத்திரமான பங்களிப்பு தொடர வேண்டும் என்று எல்லாம் வல்ல அற்புத விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சோ.கயேந்திரன்,**
**(பிரதி அதிபர்)**




இப் பாடசாலையின் ஆசிரியராக பிரதி அதிபராக. பதில் அதிபராக உணர்வுபூர்வமான சேவையினை வழங்கி ஓய்வுபெறும் இ.சர்வேஸ்வரன் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் சேவையினை வழங்கியிருந்தார்.

இவரது சேவை க்காலத்தில் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் மேம்பாட்டுக்குப் பெரும் பங்க ளிப்பினை வழங்கியிருந்தார்.

அத்துடன் ஆரம்பப் பிரிவினை பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி ஓய்வுபெறும் இவர் ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகள் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. பா.பாலமுரளி**
**தலைவர்-ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.**



**திரு. இராஜரத்தினம் சர்வேஸ்வரன்**
**(SLTS-I Spl Trd.Eng)**
**Dip.in Eng (University of Jaffna)**
**Dip.in Draughtsmanship**
**பிரதி அதிபர்**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.**

யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.
ஆசிரியர்- 1990-2002
யா/ பாசையூர் சென். அன்ரனிஸ் வித்தி
ஆசிரியர்- 2003- 2004
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.
2005- 2018 ஆசிரியர், பகுதித் தலைவர், பதில் அதிபர், பிரதி அதிபர்.

**வாழ்த்துவோர்**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.**

## சிரேஷ்ட ஆசிரியர்களின் வாழ்த்துச் செய்தி



யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் ஏறக்குறைய 12 ஆண்டுகள் ஆசிரியராக, பிரதி அதிபராக, பதில் அதிபராக கடமையாற்றி கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறும் சகோதரர் திரு.இ.சர்வேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். இராமகிருஷ்ண ம.விக்கு கடமைக்கு வந்ததில் இருந்து இன்றுவரை பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு பங்குதாரராக செயற்பட்ட சந்தர்ப்பங்களை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. முன்னாள் அதிபர் திரு. சண்.வாமதேவன் அவர்களின் ஓய்வின் பின் பல மாதங்கள் பாடசாலையின் பதில் அதிபர் பொறுப்பினை ஏற்று நடத்திய காலங்களில் அவரின் நிர்வாகத் திறமையை அனைவரும் போற்றியது யாவரும் அறிந்ததே. அவரது ஓய்வுக் காலம் சிறப்புறவும் குடும்பத்தவரோடு சீரும் சிறப்புமாக வாழவும் எல்லாம் வல்ல அற்புத நர்த்தன விநாயகரை பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

**திருமதி கௌ.மாணிக்கராஜா -(ஆசிரியர்)**



எமது பாடசாலையில் சிறந்த ஆங்கில ஆசிரியராகவும் பதிலதிபராகவும் நீண்ட காலம் சிறந்த சேவையாற்றிய திரு. இ.சர்வேஸ்வரன் அவர்களின் அகவை அறுபது நிறைவிற்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அவர் ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புமாக மகிழ்வுடன் வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

**திருமதி. ஜெயபவானி வேல்ராஜா**
**(ஆசிரியர்)**



**அகவை அறுபதில் ஓய்வு பெறும் பிரதி அதிபருக்கு வாழ்த்தி ஆசிகள் பகிர்கின்றேன்**

திரு.இ.சர்வேஸ்வரன் அவர்கள் யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத் தின் ஆரம்ப பிரவில் இறுதிக் காலங்களில் சேவை யாற்றினார். பாடசாலை சமூகத்திற்கும் பிரதான மாக மாணவர்களின் கற்றல் மேம்பாடு. ஒழுக்கம் போன்றவற்றை மையப்படுத்தி பல வகைகளில் வழிப்படுத்தலை மேற்கொண்டார். பாடசாலை நேரம் என்ற எல்லைக் குள் நிற்காது 24 மணி நேரமும் பாடசாலை பற்றி சிந்தித்து பணி யாற்றினார். அகவை அறுபதில் ஓய்வு பெறும் பாடசாலை சேவைகளை வாழ்த்தி ஓய்வுக் காலம் சிறப்புற அமைய பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. திருச்சபேசன் உமாரதி,**
**(ஆசிரியர்)**



மணிவிழா நாயகனுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதுடன், ஆசிரிய ராக. பிரதி அதிபராக, பதில் அதிபராக கல்வி உலகிற்கும் எமது பாடசாலைக்கும் சேவையாற்றி இன்று பாடசாலைச் சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு. இ.சர்வேஸ்வரன் அவர்கள் பண்புடன் பழகும் ஆங்கில அறிவும், அனுபவ முமிக்க ஓர் ஆளுமையானவர். வயதெல்லை காரணமாக பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றாலும் கல்விப்புலத்திற்கும் , எமது பாடசாலையை கட்டியெழுப்புவதற்கும் எமது பாடசாலையின் தனித்துவத்தையும் பாடசாலைக் கலாசாரத்தைப் பேணுவதற்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றும் நீண்ட ஆயுளுடன் எல்லாச் செல்வங்களும் சிறப்புடன் அமைந்து வாழ்வில் வளமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்

"இறையருளுடன் வாழ்க வளமுடன் நாளும் நலமுடன்"

**கு.பிரதீபன், செயலாளர்,**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**

## 60-ம் ஆண்டு பூர்த்தி விழா

(கொழும்பு)

இலங்கை தேசிய சர்வோதய சிரமதானச் சங்கத்தின் 60 ஆம் ஆண்டு பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு நெலும்பெங்குண மகிந்த ராஜபக்ஷ மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை சர்வோதய அமைப்பின் ஸ்தாபகர் ஏ.ரி.ஆரியரட்ண கலந்து கொள்வார். (இ)

## வைத்திய அத்தியட்சகராக பொறுப்பேற்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வரணி பிரதேச வைத்தியசாலையின் அத்தியட்சகராக வைத்தியர் ப.அச்சுதன் கடந்த 5 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கடமைகளை ஏற்றுக் கொண்டார்.

இவர் கடந்த 9 மாதங்களாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அத்தியட்சகராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-29)

## வாடகை ஒப்பந்த கேள்வி அறிவித்தல் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் இயங்குகின்ற சிற்றுண்டிச் சாலையினை 01.01.2019-31.12.2019 வரையான காலப்பகுதிக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| படிவக் கட்டணம்:- | ரூபா 500.00 |
| கேள்வி வைப்பு:- | ரூபா 10,000.00 |
| படிவம் விநியோகம்:- | 07.12.2018-26.12.2018 திகதி வரை (அலுவலக நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணிவரை) |
| விண்ணப்ப முடிவு:- | 27.12.2018 ஆம் திகதி 15.00 மணி |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு.எஸ்.சுந்தரசிவம்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**
(சி-4624)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் (வ.து)
ஆரம்பம் 1957 பதிவு இல. S 154

## விசேட அறிவித்தல்

மேற்படி சங்க அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் வைப்புப் புத்தகங்கள், தேசிய அடையாள அட்டை போன்ற சான்றாதாரங்களுடன் நீங்கள் கட்டிய பணங்களை விண்ணப்பித்துப் பெறலாம்.

எவ்வித ஆதாரங்களுமின்றி இருக்கும் அங்கத்துவப் புத்தகங்களைத் தவற விட்ட அங்கத்தவர்கள் அங்கத்துவம் பெற்றவரும் அங்கத்துவப் பணம் கட்டிய காலம் போன்ற விபரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் விண்ணப்பிக்கும் பத்திரம் மீது ரூபா 50.00 முத்திரை ஒட்டப்பட்டு அதன் மேல் சமாதான நீதவான் முன்பு கையொப்பம் இட்டு அவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

உங்கள் விபரங்கள் அனைத்தையும் ஆராய்ந்து திருப்தி ஏற்படும் பட்சத்தில் கட்டிய பணங்களுடன் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

இந்துக் கல்லூரியடி,
சித்தன்கோணி, வட்டுக்கோட்டை.
தொ.இல. 077 149 56 31

இ.ஆனந்தராசா
நிர்வாக செயலாளர்.

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கக் கூடியவரும் இலங்கையில் பல தரப்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றவருமான பேராசிரியர் அருள்நிதி உழவன் முத்துவேல் அவர்களால் பயிற்சிகள் நடத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம்:- 08.12.2018 சனிக்கிழமை தொடக்கம் 14.12.2018 வெள்ளிக்கிழமை வரை**
**நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை**
**அறிமுகவுரை:- மனவளக்கலை பேராசிரியர் சி.முருகானந்தவேல்**
**பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல், துணைப் பேராசிரியர் த.நந்தகுமரன்**

மேலும் எதிர்வரும் 10.12.2018 ஆம் திகதி முதல் 18.12.2018 வரை பாடசாலை மாணவ, மாணவியருக்காக காலை 7.00 மணிமுதல் 9.00 மணிவரையும் காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரையும் பயிற்சிகள் வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த விடுமுறைக் காலப் பகுதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அகத்தாய்வு 3 ஆம் நிலை 08.12.2018 சனி மற்றும் 09.12.2018 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.**

(C-4623)

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல. 81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 2772**

# வரட்சி நிவாரண உதவிகளை வழங்குவதற்கு

# 129.31 மில்.ரூபா நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது

## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு நிலவிய வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிக்காக 27 ஆயிரத்து 868 குடும்பங்களுக்கு 129.31 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிக்கையில், இவ்வாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களுக்கேற்ப முழுமையான உதவித்தொகை கிடைத்துள்ளது.

இதன் பிரகாரம் உரிய பிரதேச செயலர் பிரிவுகள் மூலம் விநியோகம் இடம்பெறுகின்றது.

இவற்றில் அதிகபட்சமாக கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் நானகாயிரம் ரூபா பெறுமதியிலான பொருட்களை 3 ஆயிரத்து 240 குடும்பங்களும் 5 ஆயிரம் ரூபா பெறு மதியான பொருட்களை 5ஆயிரத்து 779 குடும்பங்களும் பெற்றுக்கொள்கின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 4ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை 3 ஆயிரத்து 152 குடும்பங்களும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை 6 ஆயிரத்து 545 குடும்பங்களும் பெற்றுக்கொள்கின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை ஆயிரத்து 101 குடும்பங்களும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை ஆயிரத்து 762 குடும்பங்களும் பெற்றுக்கொள்கின்றன.

இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 4ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை 851குடும்பங்களும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை ஆயிரத்து 194 குடும்பங்களும் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே மாந்தை கிழக்குப்பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை 494 குடும்பங்களும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை 796 குடும்பங்களும் பெற்றுக்கொள்வதோடு வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை ஆயிரத்து 184 குடும்பங்களும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை ஆயிரத்து 820 குடும்பங்களுமாக மாவட்டத்தில் மொத்தமாக 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை 10 ஆயிரத்து 22 குடும்பங்களும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை 17 ஆயிரத்து 846 குடும்பங்களும் பெற்றுக்கொள்ளும் வகையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட 27 ஆயிரத்து 868 குடும்பங்களின் உதவிக்காக 129.31 மில்லியன் ரூபா நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றார். (2-315)




## தீயணைப்புப்பிரிவை செயற்படுத்துவதற்கு

# ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் தடைகள், தாமதங்கள் ஏற்படுகின்றன

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கின்ற தீயணைப்புப்பிரிவுக்கான ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாததால் அவசர தேவைகளின் போது, தீயணைப்புப்பிரிவை செயற்படுத்துவதில் தடைகளும் தாமதங்களும் காணப்படுவதாக கரைச்சிப்பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.




அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கென தனியான தீயணைப்புப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளபோதும்இதற்கான ஆளணி வளங்கள் இதுவரை பூர்த்தி செய்யப்படாது காணப்படுகின்றது.

கடந்த செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி மீள்குடியேற்ற அமைச்சின் 97 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டு குறித்த வாகனங்கள் கரைச்சிப் பிரதேச சபையிடம் மாவட்ட அரசாங்க அதிபரால் கைய ளிக்கப்பட்டுள்ள போதும், இன்று வரை கடந்த இரண்டு மாதங்களாக இந்த ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பில் கரைச்சிப்பிரதேச சபை தவிசாளரைத் தொடர்பு கொண்ட போது, மாவட்டத்திற்கான தீயணைப்புப்பிரிவிற்கான இயந்திரங்கள்,கட்டடங்கள் என்பன எங்களிடம் பொறுப்புத்தரப்பட்டிருக்கின்றது. ஆனால் இதற்கான ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

பயிற்றுவிக்கப்பட்ட ஆளணிகள் இன்மையால் கரைச்சிப்பிரதேச சபையினுடைய சிற்றூழியர்களை வைத்து குறித்த பிரிவை இயக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

32 பேரை தீயணைப்புப் பிரிவிற்கு நியமிப்பதற்கான வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து எந்தவித அனுமதியும் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் 32 பேரையும் நியமிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால்அவசரத்தேவைகளின்போது. தீயணைப்புப் பிரிவை செயற்படுத்துவதில் தடைகளும் தாதமங்களும் காணப்படுகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

## சூட்சுமமான முறையில் ஆட்டோவில் கஞ்சா கடத்தல் முறியடிப்பு

### ஓமந்தை பொலிஸாரால் குடும்பஸ்தர் கைது



(குருமன்காடு)

ஆட்டோவில் சூட்சுமமாக மேற்கொள்ளப்பட்ட கஞ்சா கடத்தல் நடவடிக்கை ஓமந்தை பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளதுடன், குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து கற்பிட்டி நோக்கி குடும்பம் ஒன்றுடன் பயணித்த ஆட்டோ ஒன்றை ஓமந்தை, இறம்பைக்குளம் பகுதியில் வழிமறித்து பொலிஸார் சோதனை செய்த போது இருக்கையின் உள்ளே சூட்சுமமான முறையில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த ஆட்டோவைச் செலுத்தி வந்த சாரதி கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து ஒரு கிலோ 770 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த ஒரு வாரத்தில் சொகுசு கார் மற்றும் ஆட்டோ என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட கஞ்சா கடத்தல் நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டுள்ளதுடன், 8 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும் ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)

## தேங்கிய வெள்ளநீர் வெளியேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கணேசபுரம் பகுதியில் நோய்பரவக்கூடிய வகையில் தேங்கிக்காணப்பட்ட வெள்ளநீர் கரைச்சிப்பிரதேச சபையினால் வெளியேற்றப்பட்டுள்ளது.

கணேசபுரம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் நீண்டநாட்களாக அதிகளவான வெள்ளம்தேங்கி காணப்பட்டதுடன், இந்தப்பகுதியில் நோய்கள் பரவக்கூடிய சூழல்காணப்படுவதாக சுகாதார திணைக்கள



அதிகாரிகளால் அறிக்கையிடப்பட்டதையடுத்து பிரதேச சபையினால்இவ்வாறு தேங்கி நின்ற வெள்ளம் வெளியே அகற்றப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்சநாதன் மற்றும் பிரதேச சபை உததியோகத்தர்கள், குறித்த பகுதிக்குச்சென்று மேற்படி வெள்ளநீரைவெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (2-315)

# சோளப் பயிர்ச்செய்கையில் அந்நியப்படை புழுத்தாக்கம்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகத்தில் சுமார் 100 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது இதுவரை இலங்கையில் கண்டுபிடிக்கப்படாத ஆக்கிரமிப்பு பூச்சிப் பீடையான அந்நியப்படை புழுவின் தாக்கம் சோளப் பயிர்ச் செய்கையில் அவதானிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் கிழக்கு கிராமங்களான புன்னை நீராவி, புளியம்பொக்கணை ஆகிய கிராமங்களிலும் மேற்கில் மலையாளபுரம், கிருஸ்ணபுரம்,வன்னேரிக் குளம்,முழங்காவில் ஆகிய கிராமங்களிலும் பரவலாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இறக்குமதி செய்யப்படும் பிரபல்யமான F1 கலப்பினங்களான மைக்ஸா 999, ஜெட் 999, பசுபிக் ஆகிய இனங்கள் இங்கு பயிரிடப்படுகின்றன. தற்போது பயிரி டப்பட்டுள்ள சோளப் பயிர்கள் 1½ முதல் 2 மாதபயிர்களாக காணப்படுகின்றன.

எனினும்தற்போது இந்த அந்நியப் படைப் புழுவானது சோளம் தவிர்ந்த இறுங்கு, கரும்பு, நெல், மரக்கறிகள், பழப்பயிர்கள், அவரைப் பயிர்கள் உட்பட நூறுக்கும் மேற்பட்ட பயிர்களை தாக்கி அழிக்கவல்லது. இதுமிக விரைவாகப் பெருகி பாரிய பொருளாதார சேதத்தை ஏற்படுத்தக் கூடியதொரு பூச்சிப் பீடையாகும்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமல்லாமல் அம்பாறை, குருநாகல் மற்றும் மொனராகல மாவட்டங்களிலும் சோளப் பயிர்களை பெருமளவு பாதித்து வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் உடனடியாக எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**இப்புழுவை இனங்காண்பது எப்படி?**

இளம் குடம்பிகள் மென்னிறமானதோடு, முதிர்ச்சியடைந்த குடம்பிகள் பச்சை, மஞ்சள் அல்லது கபிலநிறமானவை. தலை கடும் நிறமானதோடு, தலையில் Y ஆங்கில எழுத்துப் போன்ற வடிவம்தலைகீழாகக்காணப்படும். உடலின் ஒவ்வொரு துண்டத்திலும் 4 புள்ளிகள் காணப்படுவதோடு இறுதித் துண்டத்திற்கு முன் உள்ள துண்டத்தில் இப்புள்ளிகள் நான்கு மூலைகளிலும் சதுர வடிவில் அமைந்திருக்கும். முதிர்ச்சியடைந்த குடம்பிகள் 3-4 செ.மீ.நீளமானவையாகும். இதன் அந்துக்கள் காற்றின் உதவியுடன் மணித்தியாலத்திற்கு சுமார் 100 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியவல்லமையைக் கொண்டுள்ளன.

**தாக்கம்.**

பாரியளவில் இலைகளை உண்ணுவதால் பயிர்களில் கிழிந்த, முறிந்த இலைகளைக் காணக்கூடியதாக இருப்பது பிரதான அறிகுறியாகும். இலைக் குருத்தையும் பாதிக்கும். சோளத் தண்டுதுளைப் புழுவைப் போலல்லாது பொத்திகளின்



படம்-1 குடம்பி

பக்கத்தினூடாக துளைத்து விதைகளையும் உண்ணும்.

**ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறை**

- தொற்றலடைந்த பயிர்களின் மீதிகளை எரித்து அழித்துவிட வேண்டும். அத்துடன் மண்ணில் காணப்படும் கூட்டுப்புழுக்களை அழிப்பதற்காக மண்ணை ஆழமாக உழவேண்டும்.



படம்-2 நிறைவுடலி


- அனைவரும் இணைந்து ஒரேகாலத்தில் பயிரிட வேண்டும்.
- மண்ணுடன் சேதனப் பசளையை கலந்து விட வேண்டும்.
- இரசாயன பசளைகளை இடும் போது சிபாரிசு செய்தளவில் மாத்திரம் இடல். நைதரசன் பசளைகளை அதிகளவில் இடுவதை தவிர்த்துக் கொள்ளவும்.
- தோட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் களைகளை கட்டுப்படுத்தல் வேண்டும்.
- தாக்கத்தின் ஆரம்ப கட்டத்திலேயே காண்பதற்காக பயிர்ச் செய்கையின் ஆரம்பத்திலிருந்தே வாரத்திற்கு குறைந்தது இரண்டு தடவைகளாவது அவதானித்துப் பார்த்து பீடைகளின் முட்டைகள் மற்றும் புழுக்களையும் ஒன்று சேர்த்து அழித்து விடவேண்டும்.
- நுண்ணிய மணல், சாம்பல் போன்றவற்றை பாதிக்கப்பட்ட சோளக் கன்றுகளின் குருத்தின் உள்ளே இடல்.
- வேப்பம் விதைப் பிரித்தெடுப்பை விசிறுதல். (10 லீற்றர் நீருக்கு 300-500 கிராம்.)
- பயிர் சுழற்றியை மேற்கொள்ளல்.

தேவையேற்பட்டால் மாத்திரம் கீழே தரப்பட்டுள்ள பீடைநாசினிகளில் ஒன்றை மாத்திரம் சிபாரிசு செய்யப்பட்டளவில் விசிறவும்.

பீடைகள் பரவுவதை தடுப்பதற்காக தொற்றல் ஏற்பட்டதாவரப் பாகங்களை வேறு இடங்களிற்கு கொண்டு செல்லக்கூடாது.

பீடையானது சடுதியாகப் பரவுவதைத் தடுத்துக் கொள்வதற்காக உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை

தாக்கத்தை கண்டவுடன் உடனடியாக செயற்படவும். தாக்கத்தை மேலும் கட்டுப்படுத்துவதற்கு 7 நாட்களுக்கொரு முறை வித்தியாசமான தொழிற்படும் முறையைக் கொண்ட பூச்சிப் பீடை நாசினியொன்றை மீண்டும் விசிறவும். (2)



படம் - 4 புழுவின் தாக்கம்

| பீடைநாசினியின் பெயர் | விற்பனைப் பெயர் | கலவையின் அளவு (10 லீற்றர் நீருடன் கலக்க வேண்டிய அளவு) | விசிற வேண்டிய அளவு (ஹெக்.) | |
|---|---|---|---|---|
| | | | ஆரம்பபதிய வளர்ச்சியின் போது | பிந்தியபதிய வளர்ச்சியின் போது |
| ஏமமெக்டின் பென்சொஏட் 5%SG | புறோக்லம் | 4 கிராம் | 130 கிராம் | 160கிராம் |
| ஸ்பிநொடரம்25% WG | ரேடியன்ட் | 3 கிராம் | 100 கிராம் | 150கிராம் |
| க்ளொரேன்டரலி போறொல் 200 g/lSC | கொறெஜன் | 1.9 மி. லீற்றர் | 120 மி. லீற்றர் | 240மி. லீற்றர் |

மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியரை அணுகவும். அல்லது அலுவலக நாட்களில் மாவட்ட அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். – 021 228 5726 அல்லது 077 789 8271.

# வவுனியாவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட 21 ஆயிரத்து 461 குடும்பங்களுக்கு நிவாரணம்

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் ஏற்பட்ட வரட்சி நிலை காரணமாக 21 ஆயிரத்து 461 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும், அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் வரட்சி நிவாரணம் வழங்கும் செயற்பாடு குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட வரட்சி காரணமாக கடந்த காலத்தில் வவுனியாவும் பாதிப்படைந் தது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 2016 - 2017 பெரும் போகம், 2017 சிறுபோகம், 2017 - 2018 பெரும்போகம் ஆகிய மூன்று போக காலப்பகுதிகளிலும் தொடர்ச்சியாக வரட்சியால் பாதிக்கப்பட்ட மேட்டு நில பயிர்ச்செய்கை யாளர்கள், விவசாய கூலிகள், நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் ஆகியோருக்கே இந்நிவாரணம் வழங்கப்படுகின்றது. இவர்களுக்குரிய நிவாரணத்தை மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்,பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்குகின்றது.

அந்த வகையில் வவுனியா பிரதேச செயலக பிரிவில் 10 ஆயிரத்து 525 குடும்பங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 765 குடும்பங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 810 குடும்பங்களும், வெண்கலசெட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 6ஆயிரத்து361 குடும்பங்களுக்குமாக மொத்தம் 21 ஆயிரத்து 461 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கே இந் நிவாரணம் வழங்கப்படுகின்றது.

இவை தொடர்பான விபரங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக பெறப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான நிவாரணத்தை தொடர்ந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பயனாளிகள் மாத வருமானம் 20 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டவர்களாகவும், பயிர்ச் செய்கை அழிவுக்கு காப்புறுதி பெறாதவர்களாகவும், வாகனம் மற்றும் கடை உள்ளவர்களாகவும் இருக்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# அடுத்தாண்டுக்கான ஆதனவரி அறவிடும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்

## கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)


கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஆதன வரிகளை அறவிடும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. இது தொடர்பில் வருமான வரித்திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட அலகுகள் கடந்தவாரம் நடைபெற்ற விசேட சபை அமர்வில் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வளர்ச்சி நிலை எய்திய பிரதேசங்களாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அடையாளங் காணப்பட்ட 21 கிராம அலுவலக பிரிவுகளில் ஆதனவரி 2019 ஆம் ஆண்டு அறவிடப்படவுள்ளதுடன் அதன் மூலம் 40 மில்லியன் ரூபாய்களை வருமானமாக பெறவும் அதனைக் கொண்டு அப்பகுதிகளுக்கு சேவைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் தங்களுடைய வருமான மதிப்பின் அடிப்படையில் இவ் வரியை செலுத்தும் முறை பல பிரதேச சபைகளில் நடைமுறையில் உள்ள போதும் யுத்தம் காரணமாக கிளிநொச்சியில் இவ்வாறான பணிகள் நடைபெறாது இருந்தது தற்பொழுது கரைச்சி பிரதேச சபை எடுத்துக்கொண்ட விரைவான நடவடிக்கை காரணமாக அதன் வருடாந்த பாதீட்டில் பல மில்லியன் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதும் உடனடியாக அறவிடும் பணிகளும் அதனூடான சேவைகளும் வழங்கப்படும் என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார். (2-315)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தொப்புள்கொடி உறவு




(கடந்த வாரத் தொடர்ச்சி...)

அதுவும் 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு இதைப் பற்றிய அறிவு துளியும் இருக்க வாய்ப்பில்லை. ஒரு குழந்தை பிறந்த பின்னர் அதற்குப் பிற்காலத்தில் குணமாக முடியாத நோய் நொடி ஏற்படும் பட்சத்தில் பயன்படுத்த ஏதுவாகத் தொப்புள் கொடியை இடுப்பில் பொடி செய்து கட்டிவிட, அரணாக்கொடியைப் பயன்படுத்தினர் எமது முன்னோர்கள்.

இன்று கூட பாரம்பரிய சீன மருத்துவத்தில் தொப்புள் கொடியைப் பொடி செய்து தாய்க்கும் சேய்க்கும் கொடுக்கும் வழக்கம் இருக்கத்தான் செய்கின்றது. இதனை Placental encapsulation என ஆங்கிலத்தில் பெயர் வைத்து அழைக்கின்றனர்.

அதாவது தொப்புள் கொடி மற்றும் நச்சுக் கொடியை பொடி செய்து உருவாக்கப்பட்ட குளிகைகளை விழுங்குதல் என்பதே இதற்கு அர்த்தம்.


இவ்வாறு பொடி செய்யப்பட்டு இருக்கும் அந்தத் தொப்புள் கொடியைக் குழந்தைகளிற்கு ஏற்படும் தீராத கொடிய வியாதிகளின் போது பருகக் கொடுத்துவிடுவர். குழந்தையின் நோயும் பறந்துபோய் விடும். விஞ்ஞானம் வளர்ச்சி அடையாத காலங்களிலே, ஸ்டெம் செல் என்றால் என்ன என்றே தெரிய வாய்ப்பில்லாத காலங்களிலே எமது முன்னோர்கள் இவ்வாறு முன்னெச்சரிக்கையாக இருந்துள்ளனர் என்று பார்க்கும் போது மெய்சிலிர்க்கத்



தான் செய்யும். இன்று இந்த முறையை அமெரிக்காவிலும் பலபெற்றோர் பயன்படுத்துகின்றார்கள் என்றும் கூறலாம். எமது முன்னோர்களின் அறிவு எம்மை விஞ்சியிருந்தது என்பதற்கு வேறு காரணங்களை நான் கூறத் தேவையில்லை.


இந்தக் காலகட்டத்தில் இந்த முறையைச் சற்று மாற்றிய மைத்துள்ள ஆராய்ச்சியாளர்கள் தொப்புள் கொடியினுள் காணப்படும் குருதியில் தான் மகத்துவம் தங்கியுள்ளது எனக் கண்டு பிடித்துள்ளார்கள்.

ஆம் ஒரு குழந்தை பிறந்தவுடன் அந்தத் தொப்புள் கொடி




யில் தேங்கியிருக்கும் அந்தக் குருதியை இப்பொழுது பாதுக்க முடியும். அந்தக் குருதியில் குருத்தணுக்கள் / ஸ்டெம் செல்கள்கள் நிறைய இருப்பதன் காரணமாக அவற்றைப்பாதுகாப்பாக வைப்பதன் மூலம் தேவை ஏற்படும் பட்சத்தில் அவைகளை வளர்த்து உகந்த சிகிச்சை முறைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சேய்க்கு மட்டுமல்லாமல் இந்தச் சிகிச்சை முறையானது தாய்க்கும் நன்மைபயக்கும் என்பது இன்னொரு நல்லவிடயமாகும். பாரம்பரிய மருத்துவத்தில் கூட தாய்க்கும் தொப்புள் கொடியைப் பொடி செய்து கொடுக்கும் வழக்கம் உள்ளது. இது தாய்க்கும் சேய்க்கும் இடையேயுள்ள உறவை தூண்டுகின்றது. குருதியில் இரும்பின் அளவைத் தக்க வைத்துக் கொள்ள உதவுகின்றது. பால் உற்பத்தியைத் தூண்டுகின்றது மற்றும் பல செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றது என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.




இலங்கையிலும் இந்த முறை குருதிவாங்கி சீக்கிரம் நிறுவப்படவுள்ளது எனப் பல வட்டாரங்களில் செய்தி வரத்தொடங்கியுள்ளது. இந்தியாவில் இம்முறை இப்பொழுது வெற்றிகரமாகச் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

சீக்கிரத்தில் எமது நாட்டிலும் இம்முறை பிரபல்யம் அடையத் தொடங்கும் என்பதில் நம்பிக்கையுள்ளது. எல்லோரும் தமது குழந்தைகளின் பாதுகாப்பிற்காக இந்தத் தொப்புள் கொடிக் குருதியை அதற்குரிய குருதி வங்கிகளில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவேண்டும். பல இலட்சம் பெறுமதியான நகைகளை வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டகங்களில் பணம் செலுத்திப் பாதுகாப்பாக வைக்கின்ற நாம் அதனைப் போலவே எமது ஒவ்வொரு குழந்தையின் நன்மைக்காகவும் இந்த முறையை நிச்சயம்கடைப்பிடிக்க வேண்டும்.

மூத்தோர் சொல் வாக்கு அமிர்தம் என்பதை யாவரும் உணரவேண்டும்.உயிர் காக்கும் இந்தப் தொப்புள் கொடியின் மகத்துவத்தை அனைவருக்கும் பகிர வேண்டும். (முற்றும்)

ம.யோண் பிரியந்த்

## ரணில்-சம்பந்தன் இரகசிய 'டீல்'?

### கம்மன்பில கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இரகசிய உடன்பாடு தொடர்பில் உடனடியாக நாட்டிற்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

"அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய போதிலும், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஒரு மாத காலமாக கூறி வந்தது. திடீரென தமது நிலைப்பாட்டை மாற்றியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கு தேவையான 113க்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரி



வித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடு என்ன? தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேன் கூட்டை உடைப்பது கையை சுவைப்பதற்காக அல்லவென்பதை நாம் அறிவோம். அதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடு தொடர்பில் உடனடியாக, நாட்டிற்கு வெளிப்படுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## முன்னாள் போராளி தற்கொலை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் முன்னாள் போராளியொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேற்றாதீவு களுதாவளை தெற்கு எல்லை வீதியில் வசித்து வந்த 45 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான வைரமுத்து திசவீரசிங்கம் என்பவரே நேற்று முன்தினம் புதன்கிழமை அவரது வீட்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர் ஏற்கனவே தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் காப்பாற்றப்பட்டிருந்தார் என்று



உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்த காலத்தில் தாக்குதல் சம்பவங்களின்போது இவரது சரீரத்தில் உள்நுழைந்த் ஆயுதப் பொருட்களின் துகள்கள் தொடர்ந்து அகற்றப்படாமல் இருந்ததால் இவர் அடிக்கடி வலிப்பு உபாதைக்கு உள்ளாகி வந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (இ-7)

## கௌரவிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி நாவலடி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் அமரர் இ.வே.செல்வரத்தினம் நிதிய கௌரவிப்பு விழா நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாணவர் மன்ற மண்டபத்தில் சங்கத் தலைவர் கொ.குணசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி சி.ஆர். குணரத்தினம் (நிதிய ஆரம்ப கர்த்தா) கலந்து கொள்வார்.

நினைவுரையை ஓய்வு பெற்ற தட்டெழுத்தாளர், கலை ஞானச் சுடர் வே.சுந்தரம் வழங்குவார். (இ-5-60)

# வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொலை திருகோணமலையில் கண்டன ஆர்ப்பாட்டம்



(திருமலை)

வவுணதீவில் கடமையாற்றிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை படுகொலை செய்ததற்காக நாங்கள் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றோம் என தெரிவித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் திருகோணமலையில் கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இப்பேரணி ஆரம்பமாகியுள்ளது. பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்த இப்போராட்டத்தில் 50ற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

மெழுகுவர்த்திகளைகொளுத்திய வண்ணமும், பொறுப்புடன்மைதுசமாதானத்தைநாமே பாதுகாப்போம் என பதாகைகளை ஏந்தியவாறும் இப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதன்போது பொதுஜன பெரமுனவினால் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"கொடூர யுத்தத்தின் பின்னர் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்களான நாங்கள் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்கின்றோம்.

பயங்கரவாதத்தின் கொடூரங்களை நாம் நன்கு அனுபவித்துள்ளோம். சமரசம் எனும் சமாதானம் என்ற பெயரில் 10 வருட சமாதான காலத்தில் அபிவிருத்திக்கான விழிப்புணர்வுகளைஒன்றாகஇணைந்து செயற்படுகின்றோம்.

திருகோணமலையிலுள்ள நாங்கள் எதிர்கால தலைமுறையினருக்கு எதிராக உருவாகும் ஒரு போரை மீண்டும் விரும்பவில்லை. அண்மையில் வவுணதீவில் கடமையாற்றிய இரண்டுபொலிஸ் உத்தியோகத்தர்களை கொன்றமைக்காக நாங்கள் கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றோம்.

இந்த கொடூரமான கொலைகள் மற்றும் துப்பாக்கிச்சூடு கொடூரமான 30 வருடகால சகாப்தத்தை மீண்டும் நினைவுப்படுத்த முடிகின்றது. அத்தகைய ஒரு காலத்தை நாம் மீண்டும் ஒருபோதும் எதிர்பார்க்க மாட்டோம்.

இது வன்முறை மற்றும் பயங்கரவாதத்தால் எழுப்பப்படும். ஆனால் அதைக் கட்டுப்படுத்துவதே எங்கள் பொறுப்பாகும். எமது எதிர்ப்பு சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் உள்ளத்தில் அச்சம் இல்லாமல் வாழ்வதே திருகோணமலை மக்களாகிய நாம் சாதி, இன, பேதங்களை மறந்து பெற்றெடுத்த சமாதானத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவே ஒன்றிணைந்து செயற்படுவோம்" என துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# கருணாவை உடனடியாக கைது செய்ய வேண்டும்

## ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை உடனடியாக கைது செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

"கடந்த சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பு - வவுணதீவு பகுதியில் இரண்டு பொலிஸார் மிக மோசமாக கொலைசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் விநாயகமூர்த்தி முரளிதரன் தனது டுவிட்டர் பக்கத்தில் எச்சரிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவர் எச்சரிக்கை விடுத்த சில தினாங்களில் இந்தக் கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஆகையால் அவரையும் கைது செய்ய வேண்டும் எனக்கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டி தலதா மாளிகை உள்ளிட்ட வணக்கஸ்தலங்கள் மீது குண்டு தாக்குதல் நடத்திய விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் தொடர்பு இருக்கின்றது. அவருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிரதி தலைவர் பதவி வழாங்கப்பட்டிருந்தது.

இந்த நாட்டில் விடுதலைப்புலிகளை உருவாக்குவதற்கு விநாயகமூர்த்தி முரளிதன் மீண்டும் முயற்சித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் உடனடி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான நபர்களுக்கு எதிராக ஜனாதிபதி என்ன மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றார் என அவர் கேள்வியெழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

### 4 யானைக்குட்டிகள் வைத்திருந்த

# அலி ரொஷானின் வழக்கு தினமும் விசாரணைக்கு



(கொழும்பு)

அலி ரொஷான் உள்ளிட்ட பிரதிவாதிகள் 7 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, தினமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்போவதாக, மூவரடங்கிய மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம், உத்தர விட்டுள்ளது.

குறித்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி விசாரணைக்கு் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்றாவது வழக்கு இதுவாகும்.

சட்டவிரோதமான முறையில் 4 யானைக் குட்டிகளை வைத்திருந்தமை உள்ளிட்ட 24 குற்றச்சாட்டுகள் தொடர்பில், சட்டமா அதிபரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எந்த மைத்திரியை ரணில் திருமணம் செய்தார்?

## நாடாளுமன்றில் முஜிபுர் சந்தேகம்

(கொழும்பு)

ரணில்விக்கிரமசிங்க எந்த மைத்திரியை திருமணம் செய்தார் என்ற சந்தேகம் ஏற்படுவதாக ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


ரணில் விக்கிரமசிங்கவை மணமுடித்தவர்போன்று ஜனாதிபதி உரையாற்றுவதாக தெரிவித்த அவர், சுதந்திரக் கட்சி மாநாட்டிலும் அவர் ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக விமர்சித்ததாகக் குற்றஞ்சாட்டினார்.

டி.பி விஜேதுங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தபோது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பிரதமராக நியமித்தார். அப்பொழுது ஐ.தே.கவை விட ஒரு ஆசனம் தான் அவரின் கட்சிக்கு அதிகமாக கிடைத்திருந்தது. சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக இருந்த போது கூடுதல் ஆசனம் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார். அவருக்கு ரணில் விக்கிரமசிங்கவை பிடிக்காத போதும் பிரதமர் பதவிக்கு அவர் ரணில் விக்கிரமசிங்கவை நியமித்தார்.



ஆனால் 225 எம்.பிக்கள் கோரினாலும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க மாட்டேன் என ஜனாதிபதி கூறுவதை ஏற்க முடியாது என்றும் முஜிபுர் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்கவின் மனைவியின் பெயரும் மைத்திரி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீதிக்கு வந்த 12 அடி நீளமான முதலையால் மக்கள் அச்சம்



(பனிக்கன்குளம்)

வவுனியா,நெளுக்குளம் பகுதியில் வீதிக்கு வந்த 12 அடி நீளமான முதலையால் நேற்று காலை பதற்ற நிலை ஏற்பட்டது.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் வசிக்கும் மக்கள் காலை வீதியில் பயணித்த போது 12 அடி நீளமான முதலை ஒன்றை அவதானித்துள்ளனர். இதனையடுத்து பதற்றமடைந்த மக்கள் முதலையை விரட்ட அவ்விடத்தில் கூடிய போது முதலை வீதியோரத்தில் இருந்த சிறிய பற்றைக்குள் புகுந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டது.

இதனையடுத்து ஊர்மக்கள்பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த நெளுக்குளம் பொலிஸார், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை வரவழைத்தனர். அவர்கள் முதலையை மீட்டு பாதுகாப்பான இடத்தில் விடுவதற்காக எடுத்துச் சென்றனர். (2-281)

### பொலிஸார் கொலை சதி முயற்சி

# உண்மையான குற்றவாளிகள் யார்? மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்

## சாள்ஸ் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தை அமைக்க சதித்திட்டம் தீட்டுவோரின் சதி முயற்சியே மட்டக்களப்பில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டமைக்கான காரணமாகும். அந்த சதி முயற்சியின் பின்னால் இருப்பது யாரென இந்நேரம் கண்டு பிடித்திருப்பார்களென நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.



தமிழ் தேசிய கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்த தினத்தன்றே வவுணதீவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. எனவே நாட்டில் சில அசம்பாவிதங்களை ஏற்படுத்தவே இவ்வாறான செயல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன் உண்மையான குற்றவாளிகள் யாரென்பது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். சதிகாரர்கள் யாரென்று வெளிப்படுத்த வேண்டும். முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை பயமுறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான நிலையை ஏற்படுத்தாமல் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்க ஹிட்லரைபோல மோடி செயற்படுகிறார்

### -வைகோ சாடல்-



(சென்னை)

ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்க பிரதமர் நரேந்திர மோடி, ஹிட்லரை போல் செயற்படுவதாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பேத்காரின் நினைவு தினத்தையொட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மதுரைக்கு வந்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தல்லாகுளம் அவுட் போஸ்டில் உள்ள அம்பேத்காரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன் பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், பிரதமர் நரேந்திர மோடி ஹிட்லரை போல ஒரு பாசிசவாதி. அவர் ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்காக எந்த எல்லைக்கும் செல்வார்.

மத்திய பிரதேச மாநில தேர்தலில் பா.ஜ.கவினர் வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாநிலங்களில் வாக்கு பதிவு செய்ய பணம் வழங்கும் வழக்கம் இல்லை. இதனை பா.ஜ.கவினர் ராஜஸ்தான், திரிபுரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

அண்ணல் அம்பேத் கர் இயற்றிய இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக வந்தால் அரசமைப்பு சட்டம் நாசமாக்கப்படும். கூட்டாட்சி தத்துவம், மத சார்பின்மை தகர்க்கப்படும்.

மேலும் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் 7 பேர் விடுதலை தொடர்பாக உள்துறை அமைச்சகத்திடம் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பியது யார்? அது ஆளுநராக இருந்தால், அவரை நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் கீழ் தண்டிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இயற்கை வேளாண் விஞ்ஞானி 'நெல் ஜெயராமனின் மறைவு வேதனை தருகிறது என்றும் இதன் மூலம் விவசாயிகள் தங்களின் உயிர் பாதுகாவலனை இழந்து தவிக்கின்றனர் என்றும் அவர் இரங்கல் தெரிவித்துள்ளார். (7)

## ஆப்கானில் ராணுவம் வா

## 72 தலிபான் பயங்க

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினர் நேற்றைய தினம் நடத்திய தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 72 பேர் பலியானதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் காஸ்னி மாகாணத்தில் உள்ள நாவா, கிலான் மற்றும் கியோக்யானி பகுதிகளில் வசிக்கும் தலிபான் பயங்கரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், இந்த



பகுதிகளில் பதுங்கியுள்ள தலிபான் பயங்கரவாதிகளை குறிவைத்து

## வங்கிகளில் நான் பெற்ற அனைத்து கடனையும் திருப்பித்தரத் தயார்

### விஜய் மல்லையா தெரிவிப்பு



(லண்டன்)

வங்கிகளில் பெற்ற அனைத்து கடனையும் திருப்பி செலுத்த தயார் என்று விஜய் மல்லையா தெரிவித்துள்ளார்.

தொழில் அதிபர் விஜய் மல்லையா (வயது62) வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பெற்று திரும்ப செலுத்தாமல் வெளிநாடு தப்பி சென்று விட்டார். தற்போது அவர் லண்டனில் தங்கியுள்ளார். அவரை இந்தியாவுக்கு கொண்டு வர மத்திய அரசு தீவிரமாக முயற்சி மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் அவர் டுவிட்டரில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளார். அதில், "நான் பொதுத்துறை வங்கிகளின் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிவிட்ட குற்றவாளி என அரசியல் வாதிகளும், ஊடகங்களும் உரத்த குரலில் கூறி வருகின்றனர். இவை அனைத்தும் தவறானவை.

கடன் தொகையை செலுத்த கர்நாடக உயர் நீதிமன்று முன் ஒப்புக் கொண்டேன். அதன்பிறகும்என்னை நேர்மையான முறையில் நடத்த மறுப்பது வேதனையளிக்கிறது.

விமான எரிபொருள் விலை ஏற்றத்தின் காரணமாகவே எனது கிங் பிஷர் விமான நிறுவனம் நிதி நெருக்கடியில் சிக்கியது.

கச்சா எண்ணெய் விலை முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு பரல் 140 அமெரிக்க டொலர் அளவுக்கு உயர்ந்ததால் கிங் பிஷர் விமான நிறுவனம் பிரச்சினையை எதிர் கொள்ள நேரிட்டது.

நட்டம் அதிகமானதால் வங்கியில் பணம் பெற வேண்டி வந்தது. தற்போது நான் கடன் பெற்ற அசல் தொகையில் 100 சதவீதத்தையும் திரும்ப செலுத்த தயாராக இருக்கிறேன். 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவின் மிகப்பெரிய மதுபான ஆலை குழுமத்தை நடத்தியிருக்கிறேன்.


மாநில அரசுகளுக்கு ஆயிரக்கணக்கான கோடிகளை வரியாக அளித்து இருக்கிறேன்.கிங்பிஷர் ஏர் லைன்ஸ் நிறுவனமும் மாநிலங்களில் நல்லதொரு வருவாயை தந்துள்ளது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக விமான நிறுவனம் நட்டத்தை சந்தித்தது. இருந்தாலும் தற்போது வங்கிகளுக்கு நான் பெற்ற கடன் தொகையை செலுத்த தயாராக இருக்கிறேன். அதனால் நட்டம் எதுவும் இல்லை.

என்னை இந்தியாவுக்கு அழைத்து வர வேகமாக தீவிரம் காட்டப்படுகிறது. இது ஒரு சட்டப் பிரச்சினை.

ஆனால் அதில் மிக முக்கியமானது மக்கள் பணம்தான். அதை 100 சதவீதத்தையும் முழுமையாக திரும்ப தருவதாக கூறுகிறேன். வங்கிகளும், அரசும் அதை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கிறேன். நான் திரும்ப தரும் தொகையை ஏற்க மறுப்பது ஏன்?" என தெரிவித்துள்ளார். (7)

## இந்தோனேசிய மீண்டும் நிலநடு




(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் லம்பொக் தீவில் 5.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்நாட்டு நேரப்படி நேற்று வியாழக்கிழமை அதிகாலை 01:02 மணியளவில் குறித்த நிலநடுக்கம் உண

## 8 வது முறையாக ஜேர்மன் பிரதமர் மெர்க்கெல் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலில் முதலிடம்



(வோஷிங்டன்:)

'போர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்ட உலகின் மிக சக்திவாய்ந்த பெண்மணிகள் பட்டியலில் ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் தொடர்ந்து எட்டாவது முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.

உலகின் பெரும் செல்வந்தர்கள் மற்றும் சக்தியும் செல்வாக்கும் நிறைந்த ஆண், பெண்களின் பட்டியலை ஆண்டுதோறும் 'போர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

வர்த்தகம், தொழில் நுட்பம், நிதித்துறை, ஊடகம் மற்றும் கேளிக்கைத் துறை, அரசியல் மற்றும் கொள்கை, கொடையாளர்கள் என மொத்தம் 6 பிரிவுகளில் 100 பேர் இந்த பட்டியலில் இடம்பெறுவார்கள்.

அவ்வகையில், இந்த ஆண்டு நிலவரப்படி உலகின் மிக சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில் தொடர்ந்து எட்டாவது முறையாக ஏஞ்சலா மெர்க்கெல் முதலிடம் பிடித்துள்ளார். அவரையடுத்து, பிரிட்டன் பிரதமர் தெரசா மே இரண்டாம் இடத்தில் உள்ளார். இந்த இடத்தை தெரசா மே தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தக்கவைத்து கொண்டுள்ளார்.

இவர்களை தொடர்ந்து சர்வதேச நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்ட்டைன் லகார்டே மூன்றாவது இடத்தில் உள்ளார். (7)

## இந்து சமுத் சீன நீர்மூ



(பீஜிங்)

சீனா கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் எட்டு நீர்மூழ்கிகளை இந்து சமுத்திரத்திற்கு அனுப்பியுள்ளதாக புலனாய்வு அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

இவற்றில் சில நீர்மூழ்கிகள் இலங்கை- பாகிஸ்தான் வரை சென்றதாக அவை குறிப்பிட்டுள்ளன.

ஒவ்வொரு நீர்மூழ்கியினது பயணமும் ஒரு மாதம் வரை நீடித்தது

# வெளிநாடு

## வான்வழித்தாக்குதல் ...ங்கரவாதிகள் பலி!


ஆப்கானிஸ்தான் ராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது வான்வழியாகவும், தரை வழியாகவும் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் நாவா மாவட்டத்தில் 20 பேரும், கிலான் மாவட்டத்தில் 40 பேரும், கியோக்யானி மாவட்டத்தில் 12 பேரும் என மொத்தம் 72 பேர் பலியாகினர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

மூன்று வாகனங்கள், 5 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பல்வேறு ஆயுதங்களை கைப்பற்றி அழிக்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

## பிரான்ஸ் ஜனாதிபதியின் முடிவு எனது நிலையை நியாயப்படுத்தும்

### அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

பாரிய போராட்டங்களையடுத்து எரிபொருள் வரி உயர்வை நிறுத்துவதற்கான பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் முடிவு சர்வதேச காலநிலை உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்ளும் தனது சொந்த முடிவை நியாயப்படுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு பாரிஸில் கிட்டத்தட்ட 200 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய உடன்படிக்கை மிகவும் பிழையானது எனும் தனது முடிவை ஆதரிக்கும் வகையில் பிரான்ஸ் ஜனாதிபதியின் நேற்றுமுன்தினம் தீர்மானம் அமைந்துள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உலகை மிக மோசமான முறையில் மாசுபடுத்தும் நாடுகளை விடுத்து சில பணக்கார நாடுகளில் மாத்திரம் எரிபொருள் விலை உயர்த்தப்படுவதை தாம் எதிர்ப்பதாகவும் அவர் கூறினார்.

தமக்கு சுத்தமான காற்று மற்றும் தண்ணீர் தேவைதான் என்று கூறிய ஜனாதிபதி, அதற்காக அமெரிக்க வரி செலுத்துவோர் மற்றும் தொழிலாளர்கள் மற்ற நாடுகளின் மாசுபாட்டை சுத்தம் செய்வதற்கு பணம் செலுத்த வேண்டும் என்பதை தாம் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு பாரிஸ் காலநிலை ஒப்பந்தம் அமெரிக்க பொருளாதாரத்தை சேதப்படுத்துமெனவும் டொனால்ட் ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## ...சியாவில் ...நடுக்கம்

...ரப்பட்டுள்ளது.

எனினும், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லையென அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, உயிரிழப்புகள் எவையும் சம்பவிக்கவில்லை யென்றும் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் நிலநடுக்கத்தால் அதிகமாக பாதிக்கப்படும் நாடாக இந்தோனேசியா காணப்படுகிறது. எரிமலைகள் மற்றும் பசுபிக் அபாய கோட்டின் அருகில் காணப்படுவதால், பாதிப்புகள் அதிகமாக ஏற்படுகின்றன.

அந்தவகையில், இந்தோனேசியாவில் ஒவ்வொரு வருடமும் சுமார் 7 ஆயிரம் நிலநடுக்கங்கள் பதிவாகுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த முதலாம் திகதி 6.3 ரிக்டர் அளவில் பாரிய நிலநடுக்கமொன்று ஏற்பட்டது.

இதேவேளை, கடந்த செப்டெம்பர் மாதம் லம்பொக் தீவை உலுக்கிய 7.5 அளவிலான நிலநடுக்கத்தில் சிக்கி சுமார் 384 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமாத்திரமன்றி கடந்த 2004 ஆம் ஆண்டு முழு உலகையும் உலுக்கிய சுனாமியில் இந்தோனேசியாவே பாரிய அழிவை எதிர்கொண்டது.

அந்நாட்டில் மாத்திரம் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் அதிக மானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஏவுகணை தயாரிப்பை அமெரிக்கா தொடர்ந்தால் நாமும் தொடர்வோம்

### ரஷ்ய ஜனாதிபதி புடின் மிரட்டல்



(மொஸ்கோ)

அமெரிக்கா குறைந்த தூர ஏவுகணை தயாரிப்பை மேம்படுத்தத் தொடங்கினால், ரஷ்யாவும் அவ்வாறே செயற்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா சோவியத் யூனியன் இடையே 1987 ஆம் ஆண்டு குறுகிய தூர அணு ஆயுதப் படை ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி 500 முதல் 5 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தொலைவில் இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய அணு ஆயுதம் தாங்கிய அல்லது சாதாரண ஏவுகணைக்கு அந்த ஒப்பந்தத்தின் படி தடை விதிக்கப்பட்டது.

ஆனால், அமெரிக்கா ரஷ்யாவிடையே பனிப்போர் நிலவும் சூழலில் அதைக் கைவிடுவதாக ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடியாக அறிவித்தார்.

இருநாட்டு உறவிலும் சுமுக நிலை ஏற்படுத்தும் பொருட்டு பெல்ஜியத்தில் நேட்டோ தலைமையகத்தில் ஆலோசனைக் கூட்டத்தில் 60 நாட்கள் அவகாசத்தை ரஷ்யாவுக்கு வழங்குவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோ கூறினார்.

இந்நிலையில், அமெரிக்கா குறுகிய தூர ஏவுகணையை மேம்படுத்தத் தொடங்கினால், ரஷ்யாவும் அவ்வாறே செய்யும் என ஜனாதிபதி விளாடிமிர் புடின் அதிரடியாக அறிவித்துள்ளார். (7)

## ...முத்திரத்தில் ...மூழ்கிகள்



என தெரிவித்துள்ள இந்திய ஊடகங்கள் கப்பலொன்றும் அணுவாயுதங்கள் அற்ற நீர்மூழ்கிகளும் அணுவாயுத வல்லமை கொண்ட நீர்மூழ்கிகளும் இந்து சமுத்திர பகுதிக்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளன.

இந்திய கடற்படை தளபதிசுனில்லன்பா இதனை உறுதி செய்துள்ளார்.

இந்த வருடம் ஒக்டோ பர் மாதம் இறுதியாக சீனா நீர்மூழ்கியொன்று இந்து சமுத்திர பிராந்தியத்தில் காணப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே தடவையில் ஆறு முதல் எட்டு நீர்மூழ்கிகள் நடமாடியுள்ளன, கடந்த வருடம் சீனாவின் 12 கடற்படை கலங்கள் இந்து சமுத்திர பிராந்தியத்தில் காணப்பட்டன. அதில் அந்த நாட்டின் நாசகாரி கப்பல்களும் உள்ளன எனவும் இந்திய கடற்படை தளபதி தெரிவித்துள்ளார்.

கடற்படை பலம் என வரும்போது பாகிஸ்தானை விட நாங்கள் அனைத்து வழியிலும் பலமாக உள்ளோம் என குறிப்பிட்டுள்ள இந்திய கடற்படை தளபதி இந்து சமுத்திரத்தை பொறுத்தவரையிலும் எங்கள் பக்கமே சாதகத்தன்மை காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தபின்னணியில் இந்தியா 56 யுத்த கப்பல்களையும் ஆறு நீர்மூழ்கிகளையும் இந்திய கடற்படைக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. (7)

## இளவரசர் ஹரியை கொலை செய்யவேண்டும்

### பிரிட்டனின் மர்ம அமைப்பு எச்சரிக்கை

(இங்கிலாந்து)

வேறு இனத்தை சேர்ந்தவரை திருமணம் செய்தமைக்காக பிரிட்டிஷ் இளவரசர் ஹரியை கொலை செய்யவேண்டும் என பிரிட்டனின் நவ நாஜிகள் தெரிவித்துள்ளது.

மேகன் மேர்க்கெல் வேறு இனத்தை சேர்ந்தவர் என்பதால் அவரை திருமணம் செய்த ஹரியை கொலை செய்யவேண்டு. மெனபிரிட்டனின் சொனொன் கீரீக் பிரிவு எனப்படும் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட அமைப்பு இணையத்தில் இளவரசர் ஹரியின் தலையை துப்பாக்கி இலக்கு வைக்கும் படத்தை வெளியிட்டுள் ளது.

குறிப்பிட்ட படத்தில் இனத்துரோகி என்ற வாசகத்தையும் காணமுடிகின்றது.

இதேவேளை இந்த குழுவினர் ஐந்து கொலைகளுடன் தொடர்புபட்டுள்ளனர் என தெரிவித்துள்ள பிபிசி இந்த குழுவில் பிரிட்டனின் பல்கலைக்கழக மாணவன் ஒருவரும் பதின்ம வயது இளைஞர் ஒருவரும் தொடர்புபட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட அமைப்பினர் மேற்கொண்ட உரையாடல்களை விசாரணைக்கு உட்படுத்தியவேளை இவர்கள் பொலிஸாரை கொலை செய்யவேண்டும் என்ற கருத்தை கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது எனவும் பிபிசி தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த பல மாதங்களாக பல நூற்றுக்கணக்கான இணைய உரையாடல்களை ஆராய்ந்த வேளை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள நவநாஜிகள் இனவெறி பெண்களிற்கு எதிரான வெறுப்பு வன்முறை மற்றும் ஈவிரக்கமற்ற தன்மையை ஊக்குவித்து வருகின்றமை புலனாகியுள்ளது என பிபிசி தெரிவித்துள்ளது. (7)

## ஈரான் மீது தடைகளை அமுல்படுத்துமாறு ஐரோ.ஒன்றியத்திடம் அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)

நாட்டின் ஏவுகணை சோதனைகளை ஊக்குவிக்கும் ஈரானியர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது பொருளாதார தடைகளை அமுல்படுத்துமாறு ஈரானுக்கான அமெரிக்க சிறப்பு பிரதிநிதி பிரையன் ஹூக் ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தியுள்ளார்.

நேட்டோ வெளியுறவுத்துறை அமைச்சர்களுடனான சந்திப்பின் ஒரு அங்கமாக நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து தெரிவித்த அவர், ஈரான் அணுசக்தி உடன்படிக்கையில் தொடர்ந்து நீடிக்கும் நாடுகளுக்கு ஆலோசனை வழங்குவது கடினமா னது.

ஏனெனில், இந்த உடன்பாட்டில் தொடர்ந்து நீடிப்பதும், வெளியேறுவதும் அவர்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 28 உறுப்பு நாடுகளும் ஈரான் அணுசக்தி உடன்பாட்டை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலேயே பிரையன் ஹூக் இவ்வாறு தெரிவித்தார். (7)

# நற்பெயரை இலங்கை மீட்டெடுக்க வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் அலைனா அறிவுரை

(கொழும்பு)

அரசியல் நற்பெயரை இலங்கை மீட்டெடுக்க வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க தூதுவராகப் பதவியேற்ற பின்னர் முதன்முறையாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்த அரசியல் மோதல்களில் நாங்கள் ஈடுபாடு கொள்ளவில்லை. இந்த அரசியல் போட்டியில் எங்களுக்குப் பிடித்தமானவை என்றும் கிடையாது.

அரசியலமைப்பு நடைமுறைகளையும், வெளிப்படைத்தன்மையையும் மதிக்கும் ஒரு சட்டபூர்வமான அரசாங்கம் உருவாக்கப்படுவதைத் தான், நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அரசியலமைப்பு கட்டமைப்புக்குள் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம்.

இந்த நெருக்கடியைத் தீர்க்குமாறு அரசியல் தலைமைகளுக்கும் இலங்கை ஜனாதிபதி மைதத்திரிபால சிறிசேனவிற்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம்.

நாட்டின் அரசியல் நற்பெயரை இலங்கை மீட்டெடுக்க வேண்டும். அதற்கு வாய்ப்பு உள்ளது. இது மிகவும் முக்கியமானது. தற்போதைய அரசியல் நெருக்கடி இந்த நற்பெயரைக் குறைக்கலாம்.

இந்த நெருக்கடியால், சில மோசமான பொருளாதார விளைவுகள் ஏற்படுகின்றன. இலங்கையின் அரசியல் மற்றும் ஜனநாயக நிறுவனங்களுக்கு சில சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக நான் நினைக்கிறேன்.

இலங்கையின் ஒரு பங்காளியாகவும் நண்பராகவும் நாம் அக்கறை கொண்டுள்ளோம். மிலேனியம் சவால் நிதிய உதவிகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.

தற்போதைய நெருக்கடி எவ்வாறு தீர்க்கப்படும் என்பதைப் பொறுத்தே, நாங்கள் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு முன்னோக்கி செல்லமுடியும். அதற்காகக் காத்திருக்கிறோம்.

எனவே, எமது இருதரப்பு வாய்ப்புகள் சிலவற்றில், இந்த நெருக்கடி நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நெருக்கடி குறுகிய காலத்துக்குள், விரைவாக தீர்த்துக் கொள்ளப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சட்டபூர்வமான, வெளிப்படையான மற்றும் ஜனநாயக வழிமுறைகளில் இருந்து வரும் எந்தவொரு அரசாங்கத்துடனும் நாங்கள் இணைந்து வேலை செய்ய தயாராக உள்ளோம்.

எமது அக்கறை, முறையான அரசாங்கத்துடனும், பரந்தளவில் பேசுபவர்களுடனும், மக்களுடனும் கொண்டுள்ள நட்பாகும், ஜனநாயகக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதும் இதில் அடங்கும்.

தேர்தல் நடத்துவதற்கு யாரையும் நாங்கள் தடுக்கவில்லை. இந்த நெருக்கடியை ஒரு தேர்தல் தான் தீர்க்கும் என்றால், அதற்கான ஜனநாயக நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை மதிக்கிறோம்" என அலைனா தெரிவித்துள்ளார். (இ-7)


## ஜனாதிபதி சட்டத்தரணியாக தவராசா நியமனம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சட்டத்தரணியாக, மனித உரிமை ஆர்வலரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.வி. தவராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

38 வருடங்கள் சட்டத் துறையில் அனுபவம் கொண்ட சட்டத்தரணி தவராசா பல்வேறு மனித உரிமைகள் செயற்பாடுகள், 11 தமிழ் மாணவர்கள் கடத்தப்பட்டமை மற்றும் அரசியல் கைதிகள் விடுதலைக்கு முக்கிய பங்காற்றியவர்களில் ஒருவராவார்.


இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால



சிறிசேன முன்னிலையில் அவர் தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். (இ-7)

## சபாநாயகரின் உருவ பொம்மை எரித்து மகிந்தவின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்





(பொலநறுவை)

நாடாளுமன்றத்தேர்தலை விரைவில் நடத்துமாறு வலியுறுத்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்கள்ஒன்றிணைந்து, நேற்று முன்தினம் பொலநறுவையில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க, வடமத்திய மாகாண சபை உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரல ஆகியோரின் பங்குப்பற்றலுடன் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொலநறுவை போதனா வைத்தியசாலையிலிருந்து, கந்துருவெல நகர் வரை வந்தடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், சபாநாயகர் கரு ஜெயசூரியவின் உருவப் பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பூட்டும் சாவியும்!

ஒருத்தர் அவசரமாகப் பொலிஸ் நிலையத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்.

'என்ன சேர் விடயம்?' என்று எதிரில் வந்தவர் கேட்டார். "ஒரு திருட்டு நடந்து போய் விட்டது சேர்... அதுதான் புகார் கொடுக்கப் போகின்றேன் அவசரமாக!" என்றார்.

"அவசரமாகப் போகவேண்டும் என்றால் உங்கள் காரில் போகலாமே!" என்றார் அவர். "அதுதானே முடியாது!" என்றார் இவர். "ஏன்?" என்று கேட்டார் அவர்.

"திருட்டுப் போனதே... என்னுடைய கார் தானே!" என்றார் இவர். இந்தக் கார் திருட்டு இங்கே மட்டும் இல்லை... வெளிநாடுகளிலும் இப்போது ரொம்ப சகஜமாக இது நடக்கின்றதாம். இதைத் தடுப்பதற்கு என்ன வழி? என்று யோசித்துப் பார்த்து விட்டு அமெரிக்காவில் "எலக்ட்ரோனிக் கார் சாவி" ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

இந்தச் சாவி எப்படி என்றால்... இதில் உள்ள எலக்ட்ரோனிக்ஸ் சிஸ்ரம் சாரதி பிடித்திருக்கும் Steering Wheel கார் சாவி இதோடு இணைக்கப்பட்டிருக்கும்.

சாவியை ஒன் செய்த உடனே கூடுதல் அலை நீளம் உள்ள ரேடியோ சிக்னல்கள் சாரதியின் கைப்பிடியோடு இருக்கிற சிஸ்ரத்துடன் மோதி சாரதிக்கு சிக்னல் அனுப்பும். இந்தச் சிக்னல் கிடைத்தவுடனேயே சாரதி காரை ஓட்ட முடியாது. தகுந்த பதிலை சாரதி கொடுத்தாத்தான் காரை ஓட்ட முடியும். அப்போதுதான் அதில் உள்ள கம்பியூட்டர் காரை ஓட்டுவதற்கு அனுமதியளிக்கும்.

கள்ளச் சாவி போடும் ஆசாமிகள் என்னதான் தலைகீழாக நின்றாலும் காரைச் செலுத்த முடியாது.

இந்த எலக்ட்ரோனிக்ஸ் கார் சாவி சிஸ்ரத்தில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அலை நீளம். அதனால் காரைத் திருடுகிறவர்கள் சாவிய ஒன் செய்து விட்டு சரியான பதிலைக் கொடுக்க முடியாது! அது மட்டும் இல்லை...கள்ளச்சாவி போட்டால் கார் "பிப்பின்" என்று கத்த ஆரம்பித்துவிடும். உடனே திருடன் அலறியடித்துக்கொண்டு ஓடிப்போய் விடுவான். இல்லை என்றால் அகப்பட்டு விடுவான்!

பாருங்கள்... இந்த இருபதாம் நூற்றாண்டுத் திருடனை எப்படி எப்படி எல்லாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று!

லண்டனில் எப்படித் தெரியுமா? அங்கே ஒரு பாதுகாப்பு நிறுவனம் எலக்ட்ரோனிக் பூட்டும் சாவியும் உருவாக்கி இருக்கு!

அந்தப் பூட்டுச் சாவிக்கு Eloctro என்று பெயராம்!

சாவி நுனியில் ஒரு சிலிக்கான் சில்லு இருக்கிறது. அதில் கோடிக் கணக்கான நம்பரை பதித்து வைக்கலாம். ஒரு மில்லியன் என்பது நூறு கோடி. இது மாதிரி 70 ஆயிரம் மில்லியன் கோடி என்றால் எவ்வளவு? அவ்வளவு நம்பரை இதில் பதிய முடியும் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

இப்ப ஒரு குறிப்பிட்ட நம்பர் பதிந்திருக்கும் சாவியைப் பூட்டுக்குள்ளே நுழைக்கிறோம். உடனே பூட்டில் உள்ள பற்றி உதவியால் மின்காந்த மண்டலம் உருவாகும். இப்போது சாவியில் பதிந்து இருக்கிற எண்ணைப் பூட்டில் இருக்கும் கம்பியூட்டர் சில்லு படித்து புரிந்துகொள்ளும்.

ஏற்கனவே எந்த எந்த நம்பர் உள்ள சாவி வந்தால் கதவைத் திறக்க வேண்டும் என்று பூட்டில் பதிவு செய்திருக்கிறோமோ... அந்தந்தச் சாவிகளுக்கு மட்டும் பூட்டுத் திறக்கும். இல்லை என்றால் கதவைத் திறக்க முடியாது.

இதில் ஒரு வசதி என்ன என்றால்... ஒரே பூட்டை ஒன்றுக்கு மேற்பட்ட சாவியைப் பயன்படுத்தித் திறக்கலாம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நம்பர். அதனால் ஒரு சாவி தொலைந்து போனால்... அந்தச் சாவி நம்பரை மட்டும் பூட்டில் அழித்து விடலாம். அதனால் தொலைந்து போன சாவி வேறு யார் கையில் கிடைத்தாலும் அவர்கள் அதை உபயோகப்படுத்தி இந்தப் பூட்டைத் திறக்க முடியாது.

ஏற்கனவே காட்டுக்கள் மூலமாக பூட்டைத் திறக்கும் முறை இருக்கு. இந்தக் காட்டுக்களில் நம்பர் பதிவாகியிருக்கும். இந்த நம்பர் என்ன என்பதை மற்றவர்கள் சுலபமாகப் படித்துத் தெரிந்துகொள்ள முடியும். இது ஒரு இடைஞ்சல். ஆனால் இதில் சாவியில் உள்ள சிலிக்கான் சில்லை உடைத்தால்தான் அதைத் தெரிந்துகொள்ள முடியும்.

அதனால் அதைவிட இது பாதுகாப்பு. என்ன செய்வது! காலம் கெட்டுப் போச்சு! பூட்டுச் சாவியைக் கூட புத்திசாலித்தனமாகச் செய்ய வேண்டியிருக்கு. எந்தநேரத்தில் என்ன நடக்கும் என்றே யூகிக்க முடியவில்லை சேர்.

ஒரு கணவனும் மனைவியும் வீட்டைப் பூட்டி விட்டு சினிமாவுக்குப் போயிருந்தார்கள்! இரவு பத்து மணிக்கு மேலே திரும்பி வந்தார்கள்.

அந்தக் கணவனும் சொன்னான் "இதோ பார்... தவறுதலாக நமது வீட்டுச் சாவியை சினிமா தியேட்டரிலேயே தொலைத்து விட்டேன். அங்கே அதை உன்னிடம் சொல்லவில்லை. இப்போது இங்கே வந்த பிறகுதான் எனக்கு நிம்மதியாக இருக்கு!

"என்ன சொல்றீர்கள்" என்றாள் அவள்!

"சாவி தான் காணாமல் போய்விட்டது என்று கவலைப்பட்டேன். இங்கே வந்து பார்த்தால் பூட்டும் காணாமல் போயிருக்கு! அதனால் நல்லதாகப் போய்விட்டது! கதவைத் திறப்பது ஒன்றும் கஷ்டமில்லையே!" என்கிறான்!

# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்

03



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தமிழ் பேசும் மக்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அரச திணைக்களங்களில் உபயோகிக்கும் படிவங்கள் தனிச் சிங்களத்தில் இருந்தன.

இச்சட்டத்தால் அரச சேவையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் படிப்படியாக வீழ்ச்சி கண்டது. குறிப்பாக, 1956 இல் நிர்வாக சேவையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் 30 சதவீதமாக இருந்தது. அது 1970 இல் ஐந்து வீதமாக வீழ்ச்சி கண்டது. இதுபோன்றே எழுதுவினைஞர்சேவையில் 1956இல் 50 சதவீதமாக இருந்தது. அது 1970 இல் ஐந்து வீதமாக வீழ்ச்சி கண்டது. 1956 இல் தொழில்சார் சேவையில் (இஞ்சினியர், டாக்டர் போன்ற சேவை) 60 சதவீதம் தமிழர்கள் இருந்தார்கள். அது 1970இல் 10 சதவீதமாக வீழ்ச்சி கண்டது.

## தனிச் சிங்கள திருத்தச் சட்டமூலம்

1956/33 சட்டத்தின் மூலம் சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இத் தவறைத் திருத்துவதற்கு 1958 இல் மற்றுமோர் சட்டம் உருவாக்கப்பட்டது. அது 1958/28 இன் நியாயமான தமிழ் மொழி பாவனைச் சட்டமாகும். அதன் மூலம் அரச நடவடிக்கைகளை தமிழ் மொழியில் செயற்படுத்துவதற்கு சட்டங்கள் இயற்றப்பட்டன. அதன் பிரகாரம்.

- அரச தமிழ் பாடசாலைகளின் போதனா மொழி தமிழாக அமைய வேண்டும்.
- தமிழர்கள் அரச சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்கு தமிழ் மொழியில் தோற்றலாம்.
- தமிழ்மொழி பேசும் ஒருவர் அரச நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொள்கையில் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளும் உரிமை உண்டு.
- வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அரச நடவடிக்கைகள் தமிழ் மொழியில் இடம்பெற வேண்டும் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## தமிழ் அரச ஊழியரான கோடீஸ்வரன் வழக்கு

சிங்கள மொழித்தேர்ச்சி பெறாதோரின் சம்பளம் இடைநிறுத்தப்படுவது இலங்கை அரசியலமைப்பை மீறும்செயல் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு. தமிழ் அரச ஊழியரான கோடீஸ்வரன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அதில் வெற்றியும் பெற்றார். அரசாங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றம் முன் சென்று இத்தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்தது. மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது. எனவே, கோடீஸ்வரன் இதனை எதிர்த்து கோமறைக் கழகத்திடம் (Privy Council) வழக்குத்தொடர்ந்தார். இவ் வழக்குத் தீர்ப்பிற்கு அமைய அரசியலமைப்பின் 29(2) உறுப்புரை மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்புக் கூறப்பட்டது. இத்தீர்ப்பு 1970 இல் வழங்கப்பட்டது.

1972 அரசியலமைப்பில் கோமறைக் கழகத்திடமிருந்தும் விடுதலை பெற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டது. 1972 அரசியலமைப்பின் 7ஆம் உறுப்புரைக்கு அமைய 1956/33 ஆம் சட்டத்தில் பிரகடனப்படுத்தியவாறு சிங்கள மொழி அரச கரும மொழியாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது. இவ் உறுப்புரை முன்னைய அரசியலமைப்பின் 29(2) ஆம் உறுப்புரைக்கு முற்றிலும் மாறுபட்டது.

## தமிழும் அரசகரும மொழியே

தற்போதைய அரசியல் அமைப்பின் 18 ஆவது உறுப்புரையின் கீழ் தமிழ்மொழி அரசகரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

“இலங்கையின் அரச கரும மொழி சிங்களமாகும்.” 1972, 1978 ஆகிய அரசியலமைப்புக்களில் இந்நிலைமை இவ்வாறாக அமைந்த போதிலும் பின்னர் 13 ஆம் அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர் தமிழ்மொழியும் அரச கருமமொழியாகும். ஆங்கில மொழி இணைப்பு மொழியாகும். சிங்களமும் தமிழும் அரச கருமமொழி என்ற அந்தஸ்தைப் பெற்றமையால் சகல அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளும் சிங்களத்திலும் தமிழிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அரசியல் அமைப்பின் 19 -21 வரையான உறுப்புரைகள் கூறுவது சிங்கள மொழி மற்றும் தமிழ்மொழி இலங்கையின் தேசிய மொழிகளாகும். இதன் பெறுபேறாக பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர் ஒருவர் இரு தேசிய மொழிகளில் ஏதாவது ஒரு மொழியில் உரையாற்றுவதற்கு உரித்துடையவர் ஆவார். ஒரு நபர் இரு மொழிகளில் தாம் விரும்பிய மொழியில் கல்வி கற்கமுடியும்.

எனினும் வேறு மொழியில் கற்பித்தல் இடம்பெறும் பாடசாலைக்கு இச்சட்டம் செல்லுபடியாகாது. உதாரணம் : சர்வதேசப் பாடசாலைகள்.

## இலங்கை பூராகவும் சிங்களமும் தமிழும் நிர்வாக மொழியாகும்

அரசியல் அமைப்பின் 22 ஆவது உறுப்புரையின் கீழ் இலங்கை பூராகவும் சிங்களமும் தமிழும் நிர்வாக மொழியாகும். அரச கருமமொழி, நிர்வாக மொழி ஆகிய இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் யாது என்பதைப் பார்ப்போமானால் அரச நிறுவனங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அறிக்கைகளைப் பதிவு செய்வதற்குமான மொழி நிர்வாக மொழியாகும். சிங்களம் அல்லது தமிழ் அல்லாத வேறு ஒருமொழி (ஆங்கிலம்) நிர்வாக மொழியாக அமையக் கூடும்.

ஆனால், அது இதுவரை நிச்சயிக்கப்படவில்லை. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழி தமிழ் மொழியாகும். அதே சமயம் ஏனைய மாகாணங்களின் நிர்வாக மொழி சிங்கள மொழியாகும்.

நிர்வாக மொழிகளாகக் குறிப்பிட்ட பிரதேசத்தில் இரு அரச கருமமொழிகளையும் பிரகடனப்படுத்த முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்களத்திலும் தமிழிலும் நிர்வாகம் மேற் கொள்ளப்படல் வேண்டும். அதற்கமைய 29 பிரதேச செயலகப் பிரிவுகள் இருமொழி பிரதேச செயலகப் பிரிவுகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன: பதுளை, பண்டாரவளை, எல்ல, ஹல்தும் முல்லை, ஹாலிஎல, ஹப்புத்தளை, லுணுகல, மீகஹகியுல, பஸர, சொரணாதொட்டை, வெலிமட, கொழும்பு, திம்பிரிகஸ்யாய, களுத்துறை, பேருவளை, (கண்டி) அக்குரணை, தெல்தொட்டை, பன்வில, பஸ்பாகே, கோரலே உடபலாத்த, (நுவரெலியா) அம்பகமுவ, ஹங்குரன்கெத்த, கொத்மலை, நுவரெலிய, வலப்பனை, (புத்தளம்) கற்பிட்டி, முந்தல், புத்தளம், வனாதவில்லுவ, (காலி) காலி பட்டினமும் சூழலும் ஆகும்.

இவ்வாறாக இரு மொழி பிரதேசச் செயலகங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும், தொடர்ந்தும் மொழி தொடர்பான பாகுபாடுகள் நிலவுகின்றன. வசதிகள் போதியளவு இன்மையாலும், அரச அதிகாரிகளின் வேண்டா மனப்பாங்குகள் காரணமாகவும் இந்நிலைமை நிலவுகிறது.

எனினும், நிர்வாக மொழி பற்றிய இச்சட்டத்துக்கு அமைய தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி ஆகியவற்றுள் ஒரு மொழி மூலம் கடிதப்போக்குவரத்துச் செய்தல். உத்தியோக பூர்வ ஆவணத்தை, அறிக்கையொன்றை அல்லது ஆவணத்தைப் பரிசீலனை செய்தல், பொழிப்பைப் பெறுதல், அதன் மொழிபெயர்ப்பை தமிழ் மொழி மூலம் அல்லது ஆங்கில மொழி மூலம் பெற்றுக்கொள்தல்; ஒரு கடிதத்தை எழுதி கையொப்பமிடும் போது குறிப்பிட்ட ஆவணம் அல்லது அதன் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பைப் பெறுதல் போன்றவற்றிக்கு மக்களுக்கு உரிமை உண்டு.


இவ்வாறு உரிமைகளிருந்தும் நடைமுறையில் இவற்றிற்கு போதிய வசதிகள் இன்மையால் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளன.

## மொழியும் மனித நேயமும்

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "மொழியும் மனித நேயமும்" என்னும் நூலின் ஆசிரியர் எஸ்.ஜீ. புஞ்சிஹேவா அந் நூலின் (தமிழாக்கத்தில்) முகவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "தமிழ் மொழிக்கு உரித்தான கௌரவத்தை வழங்காத எமது பழக்க தோஷம் காரணமாகவே நாம் முப்பது ஆண்டுகால துன்பியல் போரை எதிர்நோக்கினோம்.

ஆரம்பத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பவற்றை அரசு அடக்கியொடுக்கியமையால் பிரச்சினைக்கான தீர்வு வெடி மருந்துகளிடம் கையளிக்கப்பட்டது. இதன் மூலம் எமது நாட்டின் அனைத்து இனங்களுக்கும் உரித்தான மனித, பௌதீக, அறிவுசார் வளங்களை அசாதாரணமான முறையில் அழித்துக் கொண்டோம். இவை அனைத்தையும் விட எமது மனிதத்துவத்தையும் மனித நேயத்தையும் நாம் அழித்துக்கொண்டோம். யுத்தம் முடிவடைந்துவிட்டது. ஆனால், யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள் நிறுத்தப்படவில்லை. எனவே, இப்போதாவது மேற்படி காரணிகளை இல்லாதொழிப்பதற்கு அவசியமான புத்தி எமக்குக்கிட்ட வேண்டும்.

(தொடரும்)



பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் அமைச்சரவை (ஏப்ரல் 12, 1956)

# 277 கோடி ரூபாய் பெறுமதியான பாரிய தொகை ஹெரோயின் மீட்பு

## இரண்டு சந்தேக நபர்கள் கைது

(பேருவளை)

பலப்பிட்டிய - பேருவளை கடற் பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு பாரிய தொகை ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

சுமார் 234 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன். இது இலங்கை வரலாற்றில் மீட்கப்பட்ட இரண்டாவது மிகப் பெரிய தொகையாகும்.



கடற்படையினரின் ஒத்துழைப்புடன் பொலிஸ்போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட

இவற்றின் பெறுமதி சுமார் 277 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயணித்த படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 38 மற்றும் 34 வயதுடைய இரண்டு பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸ்போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் மரணம்

(கல்கிஸை)

கல்கிஸ்ஸை, கல்தேமுள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

முகங்களை மறைத்தவாறு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான இளைஞன் பலத்த காயங்களுடன் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உதார சந்துருவான் என்ற 30 வயதுடைய இளைஞனே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் அண்மைக்காலமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணிலின் சொத்து விபரங்களை வெளியிடுமாறு RTI உத்தரவு

(கொழும்பு)

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பிரதமராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக ட்ரான்ஸ்பரன்ஷி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனத்திற்கு வழங்குமாறு தகவலுக்கான ஆணைக்குழு (RTI) அறிவித்துள்ளது.

வரலாற்று முக்கியத்துவமிக்க தீர்ப்பாக ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட இந்த தீர்ப்பானது, 2017 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி RTI சட்டம் நடைமுறைக்கு வந்த தினத்தன்று TISL நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட தகவலுக்கான விண்ணப்பம் தொடர்பானதாகும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்படும் இந்தச் சொத்துக்கள் தொடர்பான வெளிப்படுத்தலை பெற்றுக் கொண்டவுடன் பகிரங்கமாக எவரும் பார்க்கக் கூடியதாக இருக்கும். இந்தப் பிரகடனம் தனிநபர் தொடர்பான தகவலை மூன்றாந் தரப்புக்கு வழங்க முடியாது எனும் ஜனாதிபதி செயலகத்தின் வாதத்தை முறியடித்ததுடன் குறிப்பிட்ட தகவல் வெளியிடப்படல் வேண்டும் என தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

TISL குறித்த தீர்ப்பை வரவேற்பதுடன் பிரஜைகள் சொத்துக்கள் பற்றிய வெளிப்படுத்துதலை ஆயுதமாகக் கொண்டு ஊழல் மூலமாகச் சேர்த்த சொத்துக்கள் பற்றி தெரிந்து கொள்வதற்கும் வழி வகுக்கின்றது. RTI ஆணைக்குழுவானது "RTI சட்டமானது பொதுமக்களின் சொத்துக்களை தம்பக்கம் குவிப்பதற்கு எதிராகப் பயன்படக் கூடிய பலம் வாய்ந்த சமநிலையை பிரஜைகளுக்கு சாத்தியமாகிறது" என தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

TISL நிறுவனத்தால் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட தகவல் அறியும் விண்ணப்பத்தின் ஊடாக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை கேட்ட பொழுது, சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் ஜனாதிபதி பதவியை குறிப்பிட்டிருக்கவில்லை என ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் ஆணைக்குழுவானது வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பாக நாட்டின் தலைவர் தாமாகவே தமது சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தை வெளியிடுவது நாட்டின் பொறுப்புவாய்ந்த தலைவரின் கடமை எனவும் குறிப்பிட்டுள்ளது.

"RTI சட்டத்தில் பகிரங்க பொறுப்புக் கூறல் கலாசாரம் மற்றும் நல்லாட்சி என்பவை பேணப்படுவதற்கு சட்டத்திலுள்ள இடைவெளி நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.



RTI ஆணைக்குழுவின் தீர்ப்புக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் மேல்முறையீடு செய்வதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, குறித்த மேன்முறையீடானது ஜனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிப்படை தன்மை பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட சொத்துக்களின் விபரங்களைப் அணுகுவதற்கான பொதுமக்களின் உரிமை போன்றவற்றை பாதிப்பதாக அமையும் என்பதை TISL சுட்டிக்காட்ட விரும்புகிறது.

தீர்ப்பு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போது, TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர "சொத்துக்களை வெளிப்படுத்தல் தொடர்பாக RTI பயன்படுத்துவதற்கு பொதுமக்களுக்குக் கிடைத்த பாரிய வெற்றி எனவும் ஜனாதிபதிச் செயலகம் RTI ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய வெளிப்படுத்தப்பட்ட சொத்துக்கள் விபரங்களை உடனடியாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும்" எனவும் எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார். (இ-7)

# 52 பெண்கள் உட்பட இலங்கையர்கள் 220 பேர் வெளிநாட்டில் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் கடந்த காலப் பகுதியில் இலங்கை பணியாளர்கள் 220 பேர் வெவ்வேறு காரணங்களால் உயிரிழந்திருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அதில் 52 பெண்கள் உள்ளடங்குவதாக அந்தப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

உயிரிழந்தவர்களில் 145 பேர் இயற்கை காரணங்களால் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்கொலை செய்து கொண்டதில் 06 பெண்கள் மற்றும் 25 ஆண்களும் உயிரிழந்திருப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வீதி விபத்து காரணமாக 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

சவுதி, கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் பணியாற்ற சென்ற இலங்கையர்களே அதிகமாக உயிரிழந்துள்ளதுடன், உயிரிழந்தவர்களின் சடலங்களை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக 07 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# அரசிற்குள் என்ன நடக்கிறது என்பது மக்களுக்குத் தெரியாது-ரத்ன தேரர்

(கொழும்பு)

அரசாங்கத்துக்குள் என்ன நடக்கின்றது என்பதை அறியாதவர்களாக இந்த நாட்டின் அப்பாவி மக்கள் இருக்கின்றனர், அவர்கள் அறியா தவற்றை அறிவுறுத்தி நாட்டைப்பாதுகாக்கும்பணியையே தான் செய்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.



கொழும்பு தனியார் வானொலி சேவையில் இடம்பெற்ற அரசியல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ரணிலுக்கு அதிகாரத்தைக் கொடு எனக் கூறுகின்றனர். மகிந்த ஆதரவாளர்கள் மகிந்தவிடம் அதிகாரத்தை வைத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இருப்பினும், இவ்வாறு அதிகாரத்தில் உள்ளவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை அப்பாவிப் பொது மக்கள் யாரும் அறிவதில்லை.

நாட்டில் என்ன நடைபெறுகின்றது என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தும் பொறுப்பையே நான் செய்கின்றேன்.

எனவே, நாம் விரைவாக செயற்பட வேண்டியுள்ளோம் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் கரிகணன் பதிப்பகத்தாருடன் இணைந்து முன்னெடுத்த நாவலர் விழா கடந்த சனிக்கிழமை நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.


(படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

114



“நெசவு உற்பத்தி யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் பெரியளவில் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1659-1660களில் கைக்கோளர் என்று அழைக்கப்படும் நெசவுத் தொழிலாளர் பலர் நூற்றுக்கணக்கில் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் குடியேறியுள்ளனர். மன்னார் பிரதேசத்தில் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டாலும் அதிகளவு துணிகளை உற்பத்தி செய்வதற்குப் போதாமல் இருந்திருக்கின்றது”

## டச்சுக்காரரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

எனவே எதுவித செலவுகளும் இல்லாமல் ஒரு சில டச்சு நிர்வாகிகளை மாத்திரமே வேலைக்கு அமர்த்தி விற்கப்பட்ட முத்துக்களுக்கு வரி அறவிட்டு அதிகளவு வருமானத்தைப் பெற்றார்கள். அது மட்டுமல்லாமல் முத்துக் குளிப்பில் ஈடுபடும் தொழிலாளர்களிடமிருந்து தொழில் வரியும் அறவிடப்பட்டது.

கூடவே முத்துவியாபார காலத்தில் மன்னார் சந்தையில் வியாபாரம் செய்யப்பட்ட இதரப் பொருட்களுக்கும் வரி அறவிடப்பட்டது. அதாவது எந்த வழிகளில் எல்லாம் பணத்தை மக்களிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் பெறமுடியுமோ அந்த வழிகளில் எல்லாம் டச்சுக்காரர் அவர்களிடமிருந்து உறிஞ்சி எடுத்திருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

மேற்படி வரிக்கு மேல் வரி விதிக்கும் முறைக்கு எதிராக யாழ்ப்பாண மக்கள் பலத்த கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் டச்சுக்காரின் நிர்வாகத்திற்கு தெரிவிக்கின்றனர் என்பதனையும் அறிய முடிகிறது.

17ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் பனை மரங்களிலிருந்தும் டச்சுக்காரர் குறிப்பிடத்தக்க வருமானத்தைப் பெற்றிருக்கின்றார்கள். பனையும் பனையிலிருந்து கிடைக்கும் பல்வேறு பொருட்களும் யாழ்ப்பாணம், மன்னார், வன்னிப் பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்குக் கிடைத்த கற்பக தருப் பொருட்களாக எப்போதுமே கருதப்பட்டன.

பனை மரங்களைத் தறித்து அவற்றை நீண்ட பலகைகளாக அரிந்து இந்தியாவுக்கு அதிகளவில் அக்காலம் ஏற்றுமதி செய்யப்பட்டன. பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற பனங்கிழங்கு, ஒடியல், பனாட்டு என்பன தென்னிலங்கையில் அதிகளவு விற்கப்பட்டன.

பனையோலை, பனைநார் என்பனவற்றால் பின்னப்பட்ட பாய், பெட்டி, சுளகு போன்ற கைவினைப் பொருட்களும் கருப்பனீரிலிருந்து பெறப்பட்ட பனங்கட்டி போன்ற இதரப் பொருட்களும் தென்னிலங்கையிலும் தமிழ்நாட்டிலும் விற்கப்பட்டன.

1680 ஆம் ஆண்டு அறிக்கையின்படி 256 சிறிய, பெரிய படகுகளில் மேற்படி பொருட்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் இந்தியாவுக்கும் ஏற்றப்பட்டுள்ளன.

யானை வர்த்தகத்திற் கிடைக்கப்பெற்ற வருமானம் அத்தொழில் சார்ந்த மக்களிடமும் டச்சு அரசாங்கத்திடமும் சென்றது. ஆனால் புகையிலையினாலும் பனையினாலும் கிடைக்கப்பெற்ற வருமானம் சகல மக்கள் மத்தியிலும் குறிப்பாக சாதாரண மக்களிடம் போய்ச் சேர்ந்தது.

இருந்தும் இவற்றுக்கும் அம்மக்கள் வரி செலுத்த வேண்டிய நிலையில் இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்நியராட்சிக் கால்த்தில் பல்வேறு வகையான பொருளாதாரச் சுரண்டல்களுக்கும் மத்தியில் மேற்படி இரு முக்கியமான உற்பத்திகளுமே சாதாரண தமிழ் மக்களை குறிப்பாக யாழ்ப்பாண மக்களைக் காப்பாற்றிய உற்பத்திப் பொருட்களாக இருந்திருக்கின்றன.

நெசவு உற்பத்தி யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் பெரியளவில் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1659-1660 களில் கைக்கோளர் என்று அழைக்கப்படும் நெசவுத் தொழிலாளர் பலர் நூற்றுக் கணக்கில் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் குடியேறியுள்ளனர்.

மன்னார் பிரதேசத்தில் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டாலும் அதிகளவு துணிகளை உற்பத்தி செய்வதற்குப் போதாமல் இருந்திருக்கின்றது. இதன் விளைவாக இந்தியாவிலிருந்து துணிகள் கொண்டுவரப்பட்டு அவற்றுக்குச் சாயமிடப்பட்டு உள்ளூரில் விற்கப்பட்டன.

மேலும் துணிப்பற்றாக்குறை ஏற்பட்டபோது இந்தியாவிலிருந்து துணிகள் இறக்குமதி செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் மன்னாரிலும் உற்பத்தியாகும் சாயம் தென்னிந்தியச் சாயத்தைவிட தரத்தில் மிக உயர்ந்ததாக இருந்தது.

இதனால் இந்தியாவிலிருந்து துணிகளை அதிகளவில் இறக்குமதி செய்த டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தில் சாயமிடுவித்து ஐரோப்பா, தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக இலாபம் பெற்றனர்.

இதுவரை காலமும் சாயவேர் மர உரல்களில் இட்டுக் கைகளினால் குற்றப்பட்டு பொடியாக்கப்பட்டது. இதற்காக டச்சுக்காரர் இரண்டு எருதுகளைக் கொண்டு இயங்கும் ஆலையை அமைத்ததுடன் மட்பாண்டங்களுக்குப் பதிலாகப் பெரிய செப்புக் கலன்களையும் பயன்படுத்தினர்.

நீரைக்கொண்டிருக்கும் கழுவுவதற்கான தொட்டிகள் ஆழமாக்கப்பட்டு மண்ணகற்றப்பட்டன. இதனால் சாயமேற்றும் வேலைக்கான செலவு குறைக்கப்பட டச்சுக்காரருக்கு சாயமிட்ட துணி ஏற்றுமதியில் இலாபம் கிட்டியது.

இவ்வாறு சாயமூட்டப்பட்ட துணிகள் யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் பெருமளவு விற்கப்பட்டன என்பதையும் காணமுடிகின்றது. இவைதவிர பிறிதோர் இடத்தில் குறிப்பிட்டதுபோல் யானை வர்த்தகத்தின் பொருட்டு இந்தியாவிலிருந்து வரும் வர்த்தகர்கள் தங்கள் கப்பல்களில் பெருந்தொகையான துணிகளை ஏற்றிவந்து டச்சுக்காரருக்கு விற்றனர்.

டச்சுக்காரர் இத்துணிகளை மிகவும் மலிவான விலைக்கு வாங்கி இலங்கையில் ஓரளவு குறைந்த விலைக்கு விற்றனர்.

(தொடரும்)

# பிரதமர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அலர்ஜி

## குமார வெல்கம சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் பொது வேட்பாளராக அழைப்பு விடுக்கப்பட்டால், தான் அதனை ஏற்பதற்குத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு வாரத்துக்குள் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையைத் தீர்ப்பதாக ஜனாதிபதி கூறியுள்ள கருத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது இணைந்து போட்டியிடுமாறு ஜனாதிபதி கூறினார். தேர்தல் நெருங்கிய போது மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியைத்தர மாட்டேன் எனக் கூறினார்.

தற்பொழுதும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையும் முன்னையதைப் போன்றதாகும். ஜனாதிபதிக்கு பிரதமர்கள் தொடர்பில் அலர்ஜிக் (ஒவ்வாமை) தன்மையொன்று காணப்படுவதாகவும் குமார வெல்கம மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசனால் கடந்த 03 ஆம் திகதி வரவு-செலவுத்திட்டத்திற்கான விசேட கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் உறுப்பினர்களின் வரவேற்புடன் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ் வரவு-செலவுத்திட்டத்தில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்திக்கு கென சபை நிதியில் ரூபா 31 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக ஏனைய நிதியில் ரூபா 211.5மில்லியன் மேலதிக அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

சபையின் பொது நிர்வாக சேவைகளுக்காக மேற்கொள்ளப்படவுள்ள வேலைகளுக்காக ரூபா 25.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார சேவைகளுக்காக 44 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வீதிகள் காணி கட்டடங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக ரூபா 70 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 28 உறுப்பினாகளின் ஒத்துழைப்புடன் சபைக்குட்பட்ட 28 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன என்பதுடன் அவ்வீதிகளுக்கான வீதி விளக்குகளும் முழுமையாக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் பொருத்தப்படவுள்ளன.

மேலும் சபையால் மேற்கொள்ளப்படும் நீர்விநியோக சேவைகளுக்காக 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் நலன்புரி சேவைகளான சந்தைகள் மற்றும் நூலகங்களுக்காகவும்விளையாட்டு மைதான புனரமைப்பிற்காகவும் மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்புப் பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை அமைப்பதற்காகவும் ரூபா 70 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந் நிதி ஒதுக்கீட்டினுள் பிரதேச சபைக்கான முன்பள்ளிக்கான கட்டடமும் கேட்போர் கூடமும் அமைத்தல், கலாசார மண்டபமும் அதனுடன் கூடிய கடைத் தொகுதிகளும் அமைத்தல், அனர்த்தங்களின் போதான முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு எனவும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் மாணவர்களின் ஆரோக்கியத்தினை கருத்திற் கொண்டு எமது பிரதேசத்திற்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்குவதற்காக 02 மில்லியன் ரூபாவும்முதியோர் நலன் கருதி முதியோரிற்கான போசாக்கு உணவு வழங்குவதற்காக ஒரு மில்லியன் ரூபாவும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு, மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகள் போன்ற மக்கள் நலன் சேவைகளுக்காகவும் நிதி ஒதிக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

சபையினால்ஏற்றுக்கொள்ளப்பட்ட 2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் வரைபு 14.12.2018 ஆம் திகதி வரை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் நான்கு உப அலுவலகங்களிலும், சபையின் பொது நூலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன். அலுவலக நேரங்களில் மக்கள் இதனை பார்வையிட்டு தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை பதிவிடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தவிசாளர் அறிவித்துள்ளார். (இ-5-7)

# மக்கள் பார்வைக்கு பட்ஜெட்

(கரைச்சி)

கரைச்சி பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரைபு வரவு-செலவுத் திட்டத்தின் பிரதிகள் மக்கள் பார்வைக்காக கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சி, வட்டக்கச்சி, முரசுமோட்டை, ஸ்கந்தபுரம் ஆகிய பொது நூலகங்களிலும் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் அலுவலகங்களிலும் 06.12. 2018 ஆம் திகதி முதல் 13.12.2018 ஆம் திகதி வரை வைக்கப்படுகின்றன.

குறித்த வரைபுவரவு-செலவுத் திட்ட பிரதிகளை பார்வையிட்டு தங்களின் ஆலோசனைகளினை 12.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக சபைக்கு சமர்ப்பிக்கலாம் என தவிசாளர் அ.வேழமாலிகிதன் அறிவித்துள்ளார். (இ

# வான் பாய ஆரம்பித்துள்ள அக்கராயன் குளம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் பருவமழை காரணமாக வரட்சியினால் வரண்டு போய் காணப்பட்ட அக்கராயன் குளம் நேற்றைய தினம் நீர்நிரம்பி வான் பாயத்தொடங்கியுள்ளது.

சுமார் 25 அடி நீர்க் கொள்ளளவைக்கொண்ட அக்கராயன்குளத்தின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 24 அடி 3 அங்குலமாக காணப்பட்டது. நேற்றையதினம் பகல் குளத்தின் நீர் மட்டம் 25 அடியை எட்டியதுடன் வான் பாயத் தொடங்கியுள்ளது. (2-315)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1579

Search for people, places and things

### குணவதி

சூரியன் 6 மணிக்கெல்லாம் வருது இன்னும் தூங்குறியே சோம்பேறின்னு திட்றாங்களே



சூரியன் சாயங்காலம் 6 மணிக்கே தூங்கப் போயிடுதே நாம போனா சும்மா இருப்பாங்களா

### விஜயா

மெஸ்ஸியும் ரொனால்டோவும் தங்கள் நாட்டிற்குச் செல்லும் வழியில்




### கலையரசன்

28 வயசில தன்னுடைய வாழ்க்கை எதை நோக்கிப் போகுது என்று தெரியாத குடும்பத் துக்காக உழைக்கிற ஒருத்தனை பார்த்து உனக்கு எப்போ கல்யாணம் என்று கேட்கிறது எவ்வளவு பெரிய வன்முறை




### டினோசன்

இந்த மூஞ்சிக்கு என்ன குறைச்சல் செண்பகம் ஏன் பிடிக்கலைன்னு சொன்னா



### தேவா

3 டி படத்தில எதை வேணாலும் காமிங்க... சாப்பிடுற அய்ட்டங்கள காண்பிக்காதீங்க வாய்க்கிட்ட வருது ஆனா சாப்பிட முடியல ரொம்ப கடுப்பாகுது



### கஸ்தூரி

இன்று ஆண்கள் தினம் என்பதால் மனைவிகள் தங்கள் கணவரை அடிப்பதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாளைக்கு எப்போதும் போல தூக்கிப் போட்டு மிதிக்கலாம். இப்படிக்கு சிங்கிள் போய்ஸ்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அட்டூழியம் செய்து ஆட்சியைப் பிடிக்கக்கூடாது

## நாடாளுமன்றில் யோகேஸ்வரன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

கடந்த 2015 ஆம் ஆண்டுவெற்றிபெற்ற ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷவை சிறையில் அடைக்காத பாவத்தையே தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றார் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை நாட்டு நிலைமை தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அன்று மகிந்த ராஜபக்ஷ தரப்பினரை சிறையில் அடைந்திருந்தால் இன்று நாடும்



நாட்டின் அரசியலும் நிலையாக இருக்கும். இவற்றை செய்யாதமையின் காரணமாகவே அவர்கள் தற்போது எவ்வித கட்டளைகளையும் பின்பற்றாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியை பிடிக்க முயற்சி செய்யவேண்டுமே அன்றி அட்டூழியம் செய்து ஆட்சியை பிடிக்க முற்படக் கூடாது எனவும் யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ-7)

# பகிஷ்கரிப்பால் தொழிலாளர்கள் பாதிப்பு

## இராதாகிருஷ்ணன் கவலை

(கொழும்பு)

தொழிற்சங்கங்கள் ஏனைய தொழிற்சங்கங்களுடன் எந்த விதமான கலந்துரையாடலும் இல்லாமல் பணிப்பகிஷ்கரிப்பை அறிவித்துள்ளமையானது, தொழிலாளர்களை இக்கட்டான ஒரு நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பை அறிவித்துள்ள தொழிற்சங்கங்கள் தங்களுடைய அரசியல் இலாபத்திற்காக தொழிலாளர்களை அடகு வைத்துள்ள ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே அனைவரும் ஒன்று சேர்ந்து 1000 ரூபாய் அல்லது அதற்கு ஈடான அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விசேடமாக தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தொகையை வாங்கிக் கொடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதை நான் இந்த சபையின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

மேலும், பெருந்தோட்ட பகுதிகளில் இன்று முன்னெடுக்கப்படுகின்ற பணி பகிஷ்கரிப்பு காரணமாக தொழிலாளர்களின் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அடுத்த மாதம் தங்களுடைய பிள்ளைகளின் கல்விக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுபதற்கு முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

மலையக மக்களுக்கு 1000 ரூபா வாங்கித்தருகின்றோம் என்று அன்று 2015 ஆம் ஆண்டிற்கு முன்பு மீண்டும் அதே அரசாங்கத்தை கொண்டுவருவதற்காக கூறியவர்கள் அந்த அரசாங்கம் வர முடியாத நிலையிலும் இன்றும் அதே விடயத்தை கூறி தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை பூதாகரமாக மாற்றியிருக்கின்றார்கள்.

2015 ஆம்ஆண்டிற்கு முன்பு இந்த நாட்டிலே இருந்த ஆட்சியானது சிறுபான்மை மக்களுக்கு பல்வேறு வழிகளிலும் துன்பங்களை ஏற்படுத்தியதுடன் ஊழல் நிறைந்த ஒரு ஆட்சியாக அது இருந்தது. அந்த ஆட்சியை மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த நல்லாட்சி அரசாங்கத்தை இந்த மக்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்று நிலைமை என்ன மீண்டும் அதே ஆட்சியை கொண்டு வருவதற்கு ஜனாதிபதி நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்த ஆட்சி மாற்றம் ஜனநாயக ரீதியில் நடைபெற்றிருந்தால் நிச்சயமாக நாங்களும் அதனை வரவேற்றிருப்போம். ஆனால் இது ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடு என்பதால் இந்த ஆட்சிமாற்றத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் யார் சிறுபான்மையினருக்கு நெருக்குதல் கொடுத்தார்களோ, யார் ஊழல் செய்தார்களோ அவர்களை மீண்டும் ஆட்சி பீடம் ஏற்றுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தமையானது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

வடகிழக்கு மலையகம் உட்பட தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகமாக வாக்களித்து தெரிவு செய்த இந்த ஜனாதிபதி வாக்களித்தவர்களுக்கு செய்த நன்றிக்கடன் இது தானா? என்ற கேள்வியை கேட்க வேண்டி இருக்கின்றது. மீண்டும் இந்த நாட்டில் ஊழல் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது போல இருப்பதை நினைக்கின்ற பொழுது எங்களுக்கு மிகவும் வெட்கமாக இருக்கின்றது.

இன்று இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இந்த ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக நாட்டினுடைய பொருளாதாரம், கல்வி, உல்லாச பயணத் துறை, சுகாதாரம் ஆகிய துறைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற நுவரெலியா மாவட்டத்தில் உல்லாசத்துறை அதாவது சுற்றுலாத்துறை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கிருக்கின்ற பல உல்லாச விடுதிகளில் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டிருந்த பல முன்பதிவுகள் தற்பொழுது இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் எங்களுடைய மாவட்டத்தில் சுற்றுலாத்துறை நம்பி இருக்கின்றவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

நான் தர்மகர்த்தாவாக இருக்கின்ற சர்வதேச புகழ் பெற்ற சீத்தாஎலிய ஆலயத்திற்கு வழமையாக ஒரு நாளைக்கு500 இற்கு மேற்பட்ட உல்லாச பயணிகள் வந்து செல்வ்து வழக்கம். ஆனால் இன்று 100 பேர் கூட வருவதில்லை. இது எங்களுடைய உல்லாசத்துறை பாதிப்படைந்திருப்பதை தெளிவாக காட்டுகின்றது.

இதன் மூலமாக பல்வேறு வழிகளிலும் வேலை வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டிற்கு கிடைக்க வேண்டிய அந்நிய செலவாணி கிடைக்காமல் போயுள்ளது. இதனால் பாதிக்கப்படுவது யார்? எங்களுடைய மக்களே. கடந்த காலங்களில் சபாநாயகருடைய செயற்பாடுகள் தொடர்பாக ஒரு சில ஊடகங்கள் விமர்சனம் செய்திருந்தாலும் அவருடைய செயற்பாடுகள் அனைத்தும் ஜனநாயத்தை பாதுகாக்கின்ற வகையில் அமைந்திருந்தது என்பதை நாங்கள் நிச்சயமாக பாராட்ட வேண்டும்.

பல நாடுகளிலும் பாராளுமன்றங்களில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தாலும் எமது நாட்டில் நடைபெற்ற செயலானது மிகவும் மோசமான ஒரு செயல் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இறுதியாக நான் ஜனாதிபதியிடம் விடுக்கின்ற வேண்டுகோள் தயவு செய்து இந்த நாட்டின் நன்மை கருதி மீண்டும் நல்லாட்சியை ஏற்படுத்தி பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்என கேட்டுக்கொள்கின்றேன். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்டு ஒருவரை ஏன் நியமிக்க முடியாது என்பது எனக்கு புரியவில்லை. எனவே தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை ஓரம் கட்டி வைத்துவிட்டு நாட்டின் நலன் கருதி இதனை நீங்கள் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 130 | 110 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 95 | 90 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 400 | 450 | 500 |
| தக்காளி | 250 | 250 | 280 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 30-40 | 40 |
| கோவா | 90 | 100 | 100 | 180 | 120 |
| கரட் | 200 | 280 | 200 | 220 | 250 |
| பூசணி | 60 | 50 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 140 | 120 | 180 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 80 | 100 | 95 | 100 |
| பாகற்காய் | 300 | 380 | 250 | 260 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 140 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 200 | 160 | 170 | 150 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 240 | 210 | 280 |
| முருங்கைக்காய் | — | — | — | 300 | 400 |
| போஞ்சி | 150 | 160 | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | — | 90 | 120 |
| கீரை – 1பிடி | 60 | 50 | 60 | 40 | 80 |
| தேசிக்காய் | 400 | 400 | 300 | 460 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 40 | 20-35 | 30-50 |
| இராசவள்ளி | 300 | 200 | 160 | 180 | 240 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 80 | 120 | 35 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 45 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | 60 | 140 | 100 |

# செய்தித்துளிகள்

## நாமல் குமாரவின் தொலைபேசி வெளிநாட்டுக்கு அனுப்பப்படவுள்ளது



(கொழும்பு)

ஊழல் ஒழிப்புப் பிரிவின் நடவடிக்கைப் பணிப்பாளர் நாமல் குமாரவின் தொலைபேசியிலிருந்து அழிக்கப்பட்ட தரவுகளை மீட்பதற்காக வெளிநாடொன்றுக்கு அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த தொலைபேசி குரல் ஒளிப்பதிவுகள் சில அழிக்கப்பட்டுள்ளமையால் அதன் தரவுகளை மீட்பதற்காக அவரது தொலைபேசியை தயாரித்த நிறுவனம் உள்ள கொங்ஹொங் நாட்டுக்கு அடுத்த வாரமளவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் ரங்க திசாநாயக்கவிடம் அறிவித்தனர்.

அதற்கமைய நீதிமன்றத்தின் பொறுப்பிலுள்ள வழக்குப் பொருட்களில் ஒன்றான குறித்த தொலைபேசியை குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கைக்கமைய நீத வான் விடுவித்துள்ளார். (இ-7)

## சைவப்புலவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திரு ஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இச் செயற்குழுக்கூட்டத்தில் பட்டமளிப்பு விழா, சைவமாநாடு ஒழுங்கமைப்புக்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையினால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (இ-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி தந்தை கொலை;மகன் கைது

(கொழும்பு)

தொடங்கொடைப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தனது தந்தையை தாக்கி மகன் ஒருவர் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியமையினாலேயே குறித்த கொலை இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் 49 வயதுடைய தந்தையே உயிரிழந்ததுடன், சந்தேக நபரான 24 வயதுடைய அவரது மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## தடைசெய்யப்பட்ட களைநாசினி பக்கெட்டுகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

பாவனைக்கு தடைசெய்யப்பட்ட பெருந்தொகை "கிளைபோசெட்" களைநாசினி பக்கெட்டுக்களுடன் இருவரை பசறைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். பசறைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்து பசளை வகைகள் ஏற்றிச் செல்லப்பட்ட லொறியொன்றினை வழிமறித்து சோதனை மேற்கொண்ட பொலிஸார், பசளைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையிலான "கிளை போசெட்" களை நாசினி பக்கெட்டுக்களை மீட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த லொறி பசறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டதுடன் லொறிச் சாரதி உட்பட இருவரைப் பொலிஸார் கைது செய்தனர். (இ-7)

## மேல்மாகாண முதலமைச்சர் இசுறுவின் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரியவின் கீழ் இயங்கும் நிதி மற்றும் திட்டமிடல் உள்ளிட்ட அமைச்சுக்களுக்கான எதிர்வரும் வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நேற்று முன்தினம் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த யோசனைக்கு ஆதரவாக 53 வாக்குகளும் எதிராக 42 வாக்குகளும் பதிவாகியிருந்தன.

6 மாகாண சபை உறுப்பினர்கள் சபைக்கு வருகை தராத நிலையில் , ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் வாக்களிப்பிலிருந்து விலகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## குணம் மாறாத செல்வந்தன்



முன்னொரு காலத்தில் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அளவு கடந்த செல்வம் இருந்தும் ஒருவருக்கும் ஒரு பொருளையும் கொடுக்க மாட்டான். யாராவது வறியவர் அவனை நாடி வந்தால், "யாரிடமும் எதையும் கேட்கக்கூடாது; யாருக்கும் எதையும் கொடுக்கக்கூடாது என்று நான் ஒரு கொள்கை வைத்திருக்கிறேன். சும்மா என்னை தொந்தரவு செய்யாதே! போ...போ..." என்று விரட்டி விடுவான்.

தன்னிடம் வேலை செய்யும் பணியாளர்களை மிகக் கடுமையாக வேலை வாங்கிவிட்டு, மிகக் குறைந்த ஊதியத்தையே அவர்களுக்கு வழங்குவான். இப்படி ஒரு விதத்திலும் எந்த நற்செயலும் புரியாமல் சுயநலத்துடன் வாழ்ந்தான். காலங்கள் உருண்டோடின. செல்வந்தன் கிழப்பருவமெய்தி மரணமடைந்தான்.

அன்பில்லாத அவனை அடக்கம் செய்த இடத்தில் ஒரு புல் பூண்டு கூட முளைக்கவில்லை. அவன் செய்த தீய செயல்களின் பயனாக அவன் நரகத்தில் உழல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நரகத்திலும் "பாழ் நரகக் குழி" என்ற இடத்தில் மிகமிகப் பாவம் செய்த ஆத்மாக்களுடன் கிடக்க நேர்ந்தது. அதன் கொடுமை தாங்காமல் "இறைவா, என்னை மன்னித்துவிடு!" என்று கண்ணீர் விட்டு மன்றாடினான்.

இதைக்கண்ட தர்ம தேவதை, அவன் மேல் இரக்கப்பட்டு, அவனை அக்குழியிலிருந்து மேலே கொண்டுவர எண்ணியது. அவன் வாழ்நாளில் ஏதாவது ஒரு நற்செயலை யாவது செய்திருப்பானா? என நினைத்தது. ஆம்! அவனும் தன்னையும் அறியாமல் ஒரே ஒரு நற்செயல் செய்திருந்தான்!

அது என்னவென்றால் அவன் ஒரு சமயம் நடந்து செல்லும்பொழுது வழியில் ஒரு சிறு சிலந்திப் பூச்சியைத் தரையில் கண்டான். அதை மிதிக்காமல் தன் காலை எட்டி வைத்து நடந்தான்.

அவனை அறியாமல் செய்த அந்த நற்செயலின் பலனை அவனுக்கு வழங்க தர்மதேவதை முடிவு செய்தது. தர்மதேவதையின் கையில் உடனே ஒரு சிலந்தி தோன்றியது. அது தன் வாயிலிருந்து நூல் போன்ற பொருளை உமிழ்ந்து அந்த நரகக் குழிக்குள் செலுத்தியது.

தர்மதேவதை அந்தக் கொடியவனை அழைத்து, "இந்த நூலைப்பிடித்து, நீ மேலேறி வந்தால், இந்தக் குழியிலிருந்து வெளியேறிவிடலாம்!" என்றது.

"இந்தச் சிலந்தியின் நூல் எப்படி என் எடையைத் தாங்கும்?" என்று கேட்டான் அவன்.

"முயற்சி செய்துதான் பாரேன்!" என்றது தர்ம தேவதை.

அதன்படியே அவன் முயற்சி செய்ய... என்ன அதிசயம்! அவன் கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறி வந்து கொண்டிருந்தான். இப்படி அவன் பாதி தொலைவு ஏறி வந்து கொண்டிருக்கும்பொழுது தன் காலுக்கடியில் மேலும் சிலரும் அந்த சிலந்தியின் நூலைப் பிடித்துக் கொண்டு ஏறி வருவதைக் கண்டான். அவனுக்கு உடனே கோபம் தலைக்கேறியது.

"அடேய்! பாவிகளா! இது நான் மட்டுமே ஏற வேண்டிய நூல்! நீங்கள் ஒருவரும் ஏறக்கூடாது!" என்று கூறியபடியே பொறாமையாலும் சுயநலத்தாலும் தன் காலுக்குக் கீழே தொங்கிய 'அந்தச் சிலந்தி நூலை அறுத்து எறிந்தான். அதைப் பிடித்து ஏறத்தொடங்கியோர் அனைவரும் மீண்டும் பாதாளத்தில் வீழ்ந்தனர்.

அந்தோ பரிதாபம்! நரகத்திலும் மனம் திருந்தாத அவன் துர்குணத்தால் அவன் பிடித்திருந்த நூல் முழுவதுமாக அறுந்து அவன் மீண்டும் அந்தக் குழிக்குள்ளேயே வீழ்ந்தான்!

தர்மதேவதை உடனே மறைந்து போனது! சிலந்தியும்தான்!

## பொன்மொழிகள்



"முட்டாளிடம் இருக்கும் புத்தகம் கண் தெரியாதவருக்கு முன் இருக்கும் கண்ணாடி போன்றது"

பொருள்: கண் தெரியாதவர்களுக்கு முன் வைக்கப்படும் கண்ணாடியால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. அவர்களால் அவர்கள் முகத்தை பார்க்கவோ அல்லது சரிசெய்யவோ இயலாது.

அதுபோலத்தான் ஒரு முட்டாளின் கையில் இருக்கும் புத்தகத்தால் அவனுக்கு எந்தவித பலனும் இல்லை. அவனால் அதனைப் புரிந்துகொள்ளவோ அதன் கருத்துக்களைப் பின்பற்றவோ இயலாது.

## மரியாதை

மரியாதை என்பதன் முக்கியத்துவத்தை சரியான முறையில் உங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்க அவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள். மரியாதை என்பது மூத்தவர்களுக்கும், உயர்ந்த அந்தஸ்து அல்லது பதவியில் இருப்பவர்களுக்கு மட்டுமில்லை. அனைத்து மனிதர்களையும் மதித்து மரியாதை கொடுக்க குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்.



## நேரம் தவறாமை




பாலகர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டிய நல்ல பழக்கவழக்கங்களில் ஒன்றாக விளங்குகிறது நேரம் தவறாமை. நேரம் தவறாமை என்ற முக்கியமான பழக்கத்தைக் குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். அது அவர்களை அனைத்திலும் நேரம் தவறாமல் நடந்து, தங்கள் வாழ்க்கையை சீராக கொண்டு செல்ல உதவி புரியும்.

மனிதனுள் இருக்கும் தெய்வத்தை உணர்ந்து வாழ்வதுதான் இலட்சியம்.

– ஜெயகாந்தன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அருமந்த சிவபூமியை நாசமாக்கி விட்டார்கள்

திருமூலர் நாயனார் இலங்கை மண்ணைப் பார்த்து சிவபூமி என்றார்.

சிவபக்தனாகிய இராவணேஸ்வரனால் ஆளப்பட்ட இலங்கை என்பதற்கு அப்பால், ஈஸ்வரங்கள் என்ற பெயரில் சிவதலங்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இலங்கையில் அமையப் பெற்றிருந்தன.

திருக்கோணேச்சரத்தின் வரலாற்றை படிப்பவர்கள் அத்திருத்தலம் இலங்கை வேந்தன் இராவணனுடன் தொடர்புபட்டிருப்பதை அறிவர்.

தவிர, மன்னார் மாதோட்டத்தில் வீற்றிருக்கும் திருக்கேதீச்சரம் மீதும் திருமலையில் கோயில் கொண்ட திருக்கோணேச்சரம் மீதும் நாயன்மார்கள் தேவாரத் திருமுறை பாடியுள்ளனர்.

எனினும் இன்று சிவத்தலங்களின் பெருமையும் புகழும் மழுங்கடிக்கப்பட்டு சிவத்தலங்களுக்கு உரித்தான ஆதனங்களைக் கபளீகரம் செய்து பிறமதங்கள் ஆதிக்கம் செலுத்தும் நாசகாரம் நடக்கின்றன.

இதற்கு மேலாக சிவபூமி என்ற இலங்கைத் திருநாட்டை இன்றைய ஆட்சியாளர்கள் பௌத்த சிங்கள நாடு என்கிறார்கள்.

எதுஎவ்வாறாயினும் சிவசொத்தை யார் கபளீகரம் செய்தாலும் அது குலநாசம் என்பது ஆண்டாண்டு காலமாக உணரப்பட்ட உண்மை.

எனவே இலங்கையில் சிவசொத்தை, சிவதலத்தை யாரெல்லாம் தமக்காக்குகிறார்களோ அவர்களெல்லாம் சிவநிந்தை செய்த பாவத்தை அனுபவிப்பர்.

இதை நாம் கூறும்போது இஃதென்ன தத்துவ போதனை என்று சிலர் நினைக்கலாம். அந்த நினைப்பு யாரிடம் ஏற்பட்டாலும் அவர்கள் இன்னமும் அனுபவ பக்குவ நிலையை எட்டவில்லை என்பதே பொருளாகும்.

இவை ஒருபுறமிருக்க இலங்கை மிகவும் அழகான திருநாடு. இயற்கை தன் சீற்றத்தைக் காட்டாமல் தன் அழகை இம்மண் மீது பரவி; மலையாக, அருவியாக, ஆறாக, கங்கையாக, பசுமை நிறைந்த சோலையாக, கடலாக, வளம் கொழிக்கும் நிலமாக, பனி மழை கொட்டாத வானமாக தந்து மகிழ்ந்தது.

இலங்கைக்குச் சென்று அதனைச் சுற்றிப் பார்ப்பதே பேரானந்தம் என்று வெளிநாட்டார் நினைக்கின்ற இந்நாட்டில் நிரந்தரமாக வாழ கிடைத்ததற்கு எத்தனை கோடி தவம் செய்திருக்க வேண்டும்.

இருந்தும், சிவபூமியாகப் படைக்கப்பட்ட இலங்கை மண்ணில் மதம் பரப்ப க்டல் கடந்து அந்நியர் வந்தனர்.

இராவணன் மேலது நீறு என்று திருநீற்றின் பெருமை கூறப்பட்ட இலங்கையை பௌத்த நாடு என்றனர். போதாக்குறைக்கு சிவசொத்தை கபளீகரம் செய்தனர். அதனால் வளம் நிறைந்த இலங்கை மண் இனக் கலவரத்திலும் யுத்தத்திலும் அரசியல் குழப்பத்திலும் காலம் போக்கி கருவறுக்கிறது.

என்ன செய்வது! சிவநிந்தை தீராப் பழியாயிற்று இலங்கைத் திருநாட்டுக்கு.

# அரச நிகழ்வுகளை நடத்துவதற்கு தனியார் ஹோட்டல்களை பயன்படுத்த தடை

## ஜனாதிபதியால் சுற்றுநிருபம் வெளியீடு

அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியாயாதிக்க சபைகள் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களும் தமது நிறுவனம் சார்ந்த வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தனியார் ஹோட்டல்களை, குறிப்பாக சொகுசு ஹோட்டல்களை பயன்படுத்துதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தின் ஊடாக அனைத்து அரச அதிகாரிகளுக்கும் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பல கேட்போர்கூடங்கள் மற்றும் நிறுவனங்கள் காணப்படும் நிலையில் அவற்றை உபயோகிக்காது அதிகளவான கட்டணங்களை செலுத்தி அரச வைபவங்களையும் நிகழ்ச்சிகளையும் சொகுசு ஹோட்டல்களில் நடத்துவதன் ஊடாக ஏற்படும் வீண்விரயத்தினை தடுப்பதற்காகவும்அரச செலவினை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவும் ஜனாதிபதியால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

# பிற்போடல்

வட மாகாண சுற்றுலாப் பணியகத்தால் வட மாகாண சுற்றுலா இலக்கு குழுவினருக்காக ஒழுங்கு செய்யப்பட்டு 10.12.2018 திங்கட்கிழமை அன்று நடைபெறவிருந்த செயலமர்வு 17.12.2018 திங்கட்கிழமை யாழ். பொதுநூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில்சப்ரகமுவ பல்கலைக்கழக சுற்றுலாத்துறைப் பேராசிரியர் மொகமட் அஸ்லாம் வளவாளராகக் கலந்து கொண்டு இந்தச் செயலமர்வை நடத்தவுள்ளார்.

இந்தச் செயலமர்வில் ஏற்கெனவே அழைக்கப்பட்ட இலக்கு குழுவினரை பங்குகொள்ளுமாறுவடக்குமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா கேட்டுக் கொணடுள்ளார். (ம-3)

# ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை ஒற்றுமைப்படுத்திய மைத்திரிக்கு நன்றி

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்பட்ட கருத்து முரண்பாடுகள் மற்றும் ஏனைய பல்வேறு சிக்கல்களை தீர்த்து தற்போது கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உதவியுள்ளார்.

அவருடைய சில செயற்பாடுகளால் ஐக்கிய தேசிய கட்சிக்கு தனித்து அரசாங்கமொன்றை அமைத்து ஆட்சி செய்யக்கூடிய சூழல் உருவாகியுள்ளது என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை கலைத்து வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் அரசியலமைக்கு முரணானது என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விவாதம் நேற்று வியாழக்கிழமை நிறைவடைந்ததன் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

ஜனாதிபதியால் கூறப்படும் எந்த விடயத்தை நாம் நம்புவது என அவரிடமே கேட்க விரும்புகின்றேன். காரணம் அண்மைக்காலமாக அவர் தெரிவித்துவரும் கருத்துக்கள் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் கேட்டால், அவற்றை நான் மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக கூறினேன் எனக் கூறுவார் என ரஞ்சன் ராம நாயக்க சுட்டிக் காட்டினார். (இ-7)

# இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 35 அடி 8.5 அங்குலமாக உயர்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் நேற்று பகல் 35அடி 8.5 அங்குலமாக உயர்வடைந்துள்ளது.

ஏற்கெனவே 34 அடியாக நீர் கொள்ளளவைக் கொண்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம் மேலும் இரண்டு அடி அதிகரிக்கப்பட்டு 36 அடிவரை உயர்த்தப்பட்டது.

அண்மைகாலமாக பெய்து வரும் மழை காரணமாக குளத்தின் நீர் மட்டம் நேற்றைய வாசிப்பின் பிரகாரம் 35 அடி 8.5 அங்குலமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிரேஷ்ட வைத்தியப் பணிப்பாளர் நியமனம்

(பனிக்கன்குளம்)

வவுனியா பொது வைத்தியசாலைக்கு நீண்டகாலமாக சிரேஷ்ட வைத்திய பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. இதையடுத்து மத்திய சுகாதார அமைச்சினால் வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிரேஷ்ட வைத்திய பணிப்பாளராக வைத்தியர் கே.நந்தகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்தியர் கே.நந்தகுமாரன் நேற்று முன்தினம் முதல வவுனியா பொது வைத்திய சாலையின் மேற்படி பணிப்பாளராக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொணடார். (2-281)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உங்களுடைய உரிமைகளை விட்டுவிடுங்கள்

யார் தங்களுடைய உரிமைகளுக்காக போராடுகிறார்களோ அவாகள பலஹனமானவராவாா. அவா தங்களுள உள்ள பலத்தை தங்கள் பெருந்தன்மையை அறிவதில்லை.

நீங்கள் எவ்வளவு பலஹீனமாக உள்ளீர்களோ அந்த அளவறகு உஙகளுடைய உாிமைகளை பெற நா்பபநதம செய்கிறீர்கள். உங்களுடைய உரிமைகளை பெற வேண்டும் என வற்புறுத்தும் போது நீங்கள் மற்றவர்களிடமிருந்து பிரிந்து தனியாகிறீர்கள் வறியவராகிறீர்கள். தங்களுடைய உரிமைக்காகப் போராடுவதில் மக்கள் பெருமை கொள்கிறார்கள். இது ஒரு அறிவீனமான பெருமை உஙகளுடைய உாிமைகளை யாரும் உஙகளிடமிருந்து பறித்துவிட முடியாது என்பதை நீங்கள் அறிதல் வேணடும. அவவுாிமைகள உஙகளுடையவையே .

மனோபலம் உடையவர்கள் தங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுக்கிறார்கள். எந்த அளவிற்கு நீங்கள் உஙகளுடைய உாிமைகளை விட்டுக்கொடுக்கிறீர்களோ அது உஙகளுடைய சுதந்திரத்தையும் வலிமையையும் சுட்டிக்காட்டுகிறது. யாரிடம் உரிமைகள் உள்ளனவோ அவர்கள் தான் அதை விட்டுக் கொடுக்க முடியும்!

உரிமைகள் வேண்டும் என்று கோரும் போது அவற்றை நீங்கள் உண்மையில் பெறுவதில்லை: உரிமைகளை விட்டுக் கொடுக்கும்போது உண்மையில் அவைகள் உஙகளிடமிருந்து பறிக்கப்படுவதில்லை.

யார் வறியவர்களோ (மனோபலம் அற்றவர்கள்) அவர்கள் தான் உரிமை வேண்டும் என்று கோருகிறார்கள். யாா செலவநதாகளோ(மனோபலம பெறறவாகள) உரிமைகள் தங்களிடமிருந்து பறிக்கப்பட முடியாது என்பதை அறிவார்கள். யார் மிகச் செல்வந்தர்களோ அவாகள உாிமைகளை வடடுக கொடுககிறாாகள.

உரிமைக் கோரிக்கை அறிவீனம் வேதனை தரக்கூடியது.

யாரும் உஙகளுடைய உரிமைகளை பறிக்க முடியாது என அறிதல் சுதந்திரம் .

உஙகளுடைய உரிமைகளை விட்டுக் கொடுப்பது- அன்பு ஞானம்

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### முன் ஜென்ம பாவங்களை போக்க என்ன செய்ய வேண்டும்?

தானம் என்பது நம் வாழ்க்கையில் அனைவரும் செய்ய வேண்டிய ஒரு சிறந்த காரியம் என ஆன்றோர்களின் கூற்று

மேலும் நாம் செய்யும் சில தானங்களால் நம் பூர்வ ஜென்ம பாவங்கள் நிவர்த்தி அடையும். அப்படிப் பட்ட தானங்களை இங்கு பார்ப்போம்.

**நெய் தானம்**

உடலில் தீராத நோய்கள் மற்றும் ஜாதகத்தில் பாவ திசை நடப்பவர்கள் சுத்தமான நெய்யை' தானம் செயயலாம. இதன மூலம அவரகளின ஜாதக கிரகஙகள் சாந்தம் அடையும்.

**அரிசி தானம்**

பூரவ ஜெனமததில ஒருவர தெரிநதோ, தெரியாமலோ செய்த பாவங்கள் விலக, பசியால் வாடுவோருக்கு, ஏழை எளியவர்களுக்கு அரிசியை தானமாக அளிப்பது நல்லது. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

ஐயம் இட்டு உண் என்பதும் ஏற்பது இகழ்ச்சி என்பதும் இல்லறத்தானுக்குக் கூறிய அறிவுரைகள். "போனகம்" என்பதும் "தானுழந்து உண்டல்" என்பதும் ஔவையார் வாக்கு. துறவிகள், வானப்பிரஸ்தர்கள், பிரமச்சாரிகள் , பாடுபட முடியாத நோயாளிகள், கண், காது முதலிய அங்கப்பழுதானவர்கள் ஆகிய இவர்களுக்கு நாம் ஐயம் இடல் வேண்டும். உடல் வலுவுள்ளவர்கள் உழைத்துத்தான் உண்ண வேண்டும்.

# எப்படி இருந்த யுவராஜ் இப்படி ஆகிட்டாரே



இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரராக வலம் வந்த யுவராஜ் சிங், தற்போது ஐ.பி.எல்.ஏலத்தில் மிகவும் குறைவான விலைக்கு தயாராகியுள்ளார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல். தொடருக்கான இந்தாண்டு ஏலம் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் வெளிநாடுகளைச் சேர்ந்த 232 வீரர்கள் உட்பட 1003 பேர் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில் கடந்த ஐ.பி.எல் தொடரில் சொதப்பியதால் அணி நிர்வாகத்தால் கழற்றிவிடப்பட்ட வீரர்கள் எப்படியாவது குறைந்த விலையிலாவது ஏதாவது ஓர் அணியில் ஒட்டிக்கொள்ளும் ஆர்வத்தில் உள்ளனர்.

இந்திய அணியில் நட்சத்திர வீரராக திகழ்ந்து தற்போது இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்ட யுவராஜ் சிங் மீண்டும் ஐ.பி.எல் தொடரில் தலைகாட்ட முயல்கிறார்.

இதற்காக மிகக் குறைந்த விலையாக ஒரு கோடி ரூபாய் அடிப்படை விலையுடன் ஏலத்துக்குத் தயாராக உள்ளார்.

இவரைப் போலவே இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் முகமது சமி, சுழற்பந்துவீச்சாளர் அக்ஸர் படேல் ஆகியோர் ஒரு கோடி ரூபாய் அடிப்படை விலையுடன் காத்திருக்கின்றனர்.

மேலும் இதற்கு முன்னர் நடந்த ஐ.பி.எல்.தொடர்களில் யுவராஜ் சிங்கை அணிகள் 16 கோடி மற்றும் 14 கோடி எல்லாம் கொடுத்து எடுத்தனர்.

ஆனால் தற்போது ஒரு கோடியாவது கொடுத்து எடுங்கள் என்ற நிலைமைக்கு யுவராஜ் தள்ளப்பட்டிருப்பது, அவரது ரசிகர்களுக்கு மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 82 ஆண்டு கால சாதனையை தகர்த்தெறிந்தார் யாசிர் ஷா



பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் யாசிர் ஷா, அதிவேகமாக 200 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனை படைத்துள்ளார்.

பாகிஸ்தான்- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3வது டெஸ்ட் போட்டி நடந்து வருகிறது. இந்தப் போட்டியின் 4வது நாளான நேற்று நியூசிலாந்து வீரர் வில்லியம் சோமர்வில்லேயின் விக்கெட்டை யாசிர் ஷா வீழ்த்தினார்.

இது டெஸ்ட் அரங்கில் அவரது 200வது விக்கெட்டாகும். இதன் மூலம் அதிவேகமாக டெஸ்டில் 200 விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையை படைத்துள்ளார். யாசிர் ஷா 33 டெஸ்ட்களிலேயே இந்த சாதனையை செய்துள்ளார்.

இதற்கு முன்பு 1936ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் கிளாரி கிரிம்மெட், 36 டெஸ்ட்களில் 200 விக்கெட்டுகள் வீழ்த்தியதே சாதனையாக இருந்து வந்த நிலையில், யாசிர் ஷா 82 ஆண்டு கால சாதனையை உடைத்துள்ளார்.

இந்திய வீரர் அஸ்வின் தனது 37வது டெஸ்டிலும், பாகிஸ்தானின் முன்னாள் வீரர் வாக்கர் யூனிஸ் 38வது டெஸ்டிலும், தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின் 39வது டெஸ்டிலும் 200 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஐ.பி.எல் ஏலத்தில் 1003 வீரர்கள்



12ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் ஏலம் எதிர்வரும் 18ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடக்கிறது. அணி நிர்வாகங்கள் சார்பில் பெரும்பாலான வீரர்கள் தக்கவைக்கப்பட்டு விட்டதால் இந்த முறை 70 வீரர்கள் மட்டுமே ஏலத்தின் மூலம் எடுக்கப்பட இருக்கிறார்கள். 70 இடத்திற்கு மொத்தம் 1,003 வீரர்கள் பதிவு செய்து இருக்கிறார்கள். இதில் 232 வெளிநாட்டு வீரர்களும் அடங்குவர்.

ஏலப்பட்டியலில் இடம் பெற்றுள்ள வீரர்களில் 800 பேர் சர்வதேச போட்டி அனுபவம் இல்லாதவர்கள் ஆவர். ரஞ்சி கிரிக்கெட்டில் புதிதாக விளையாடும் அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிஜோரம், நாகலாந்து, சிக்கிம், உத்தரகாண்ட், புதுச்சேரி மற்றும் பீகார் ஆகிய அணிகளை சேர்ந்த வீரர்கள் முதல்முறையாக ஐ.பி.எல். ஏலப்பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

இதில் இருந்து இறுதிப்பட்டியலை எதிர்வரும் 10ஆம் திகதி மாலை 5 மணிக்குள் அணி நிர்வாகங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இந்த முறை ரிச்சர்ட் மேட்லிக்கு பதிலாக இங்கிலாந்தில் ஏலம் நடத்துவதில் பிரபலமான ஹூக்ஸ்எட்மீடெஸ்என்பவர் ஐ.பி.எல். ஏலத்தை நடத்த இருக்கிறார். (க)

# என்னம்மா இப்படிப் பண்றீங்களே டெல்லி அணியை வறுத்தெடுக்கும் நெட்டிசன்கள்



ஐ.பி.எல் கிரிக்கெட் அணியான டெல்லி டேர்டெவில்ஸின் உரிமையாளர்கள், அதன் பெயரை மாற்றியுள்ளதை நெட்டிசன்கள் கிண்டல் செய்து வருகின்றனர்.

டில்லி டேர்டெவில்ஸ் அணி கடந்த சில ஐ.பி.எல்.தொடர்களில் Play-off முன்னேற முடியாமல் பட்டியலில் மிகவும் பின் தங்கியது. கடந்த 2018ஆம் ஆண்டு இதைவிட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

எனவே, டெல்லி அணியை இதிலிருந்து மீட்டெடுத்து ஒரு புத்துணர்வை தர வேண்டும் என அணி உரிமையாளரான ஜே.எஸ். டபிள்யூ ஸ்போர்ட்ஸ், அணியின் பெயரை மாற்ற முடிவு செய்தது. அதன்படி தற்போது 'டெல்லி டேர்டெவில்ஸ் என்ற பெயரை 'டெல்லி கபிடல் (Delhi Capital)' என மாற்றி வைத்துள்ளது. இதுகுறித்து ஜே.எஸ்.டபிள்யூ ஸ்போர்ட்ஸ் நிறுவனம் கூறுகையில்,

'டெல்லியின் சிறப்பையும், டெல்லி மக்களிடம் இன்னும் நெருக்கமாகவும் இருக்கும் வகையில் டெல்லிடேர்டெவில்ஸ்என்ற பெயரை மாற்றிடெல்லி கபிடல் என வைத்துள்ளோம்' என தெரிவித்துள்ளது.

ஆனால் ரசிகர்கள் இதனை சமூக வலைதளங்களில் கிண்டல் செய்து வருகின்றனர்.

பெயர் மாற்றத்திற்கு என்ன தான் அவசியம்? மோசமான நிலையில் இருந்து மீள வேண்டிய நிலையில் டெல்லி அணி உள்ளது.

அதனால் பெயர், லோகோ உட்பட அனைத்தையும் மாற்றி, புதிய முகத்தை 2019 ஐ.பி.எல் முதல் காட்ட முடிவு செய்துள்ளது. இவர்களின் எண்ணம் எல்லாம் சரிதான், ஆனால் நல்ல காலத்தை நோக்கி இருக்கும் ஒரு அணிக்கு இப்படியா ஒரு புரியாத பெயரை வைப்பார்கள்? என ரசிகர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (க)

# உதைபந்தாட்டத் தொடர் ஆரம்பம்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் கல்விசார் புலமைப்பரிசில் நிதியத்திற்காக உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசார மன்றம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் எதிர் வரும் 8 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க-60)

# விளையாட்டு மைதானத்திற்கான ஓய்வு மண்டப பணி ஆரம்பம்

பூநகரியைச் சேர்ந்த நாச்சிக்குடா ஜின்னர் விளையாட்டுக்கழகத்திற்கு ஜின்னா விளையாட்டு மைதானத்தில் ஓய்வு மண்டபம் அமைப்பதற்காக தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மூன்று இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஊர் மக்கள் பங்களிப்பாக மூன்று இலட்சம் ரூபா சேர்த்து ஆறு இலட்சம் ரூபா செலவில் மதிப்பீடு செய்யப்பட்டு கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பித்து நடைபெறுவதாக ஜின்னா விளையாட்டுக்கழக நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். (க-84)

## உரிமைகளை வென்றெடுப்...

என யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

யாழிற்கு விஜயம் மேற்கொண்ட கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மக்னே யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்டை மாநகர சபையில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

அந்த சந்திப்பின் பின்னர் ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

யாழிற்கு வருகை தந்த கனடா உயர்ஸ்தானிகர் யாழ்.மாவட்ட மக்களின் வறுமை நிலை எவ்வாறு இருக்கின்றதென கேள்வி எழுப்பியிருந்தார். வடமாகாண சபை இருந்த போது, மிக அக்கறையுடன் வறுமை நிலை தொடர்பான செயற்பாடுகளை

## கட்சியிலிருந்து...

இவ்வாறு தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து தன்னை ஓரங்கட்டும் நடவடிக்கை மிகவும் மும்முரமாக முன்னெடுக்கப்படுவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாசவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சியிலிருந்து என்னை தொடர்ந்தும் ஓரங்கட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை சம்மேளனத்திற்கு அழைக்கப்படாமை ஊடாக வெளிப்படுகின்றது. எனவேதான் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுதந்திர கட்சி சம்மேளனத்தை தவிர்த்துக்கொண்டேன் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளார். (ம)

## 430 கிலோகிராம்...

ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அதேநேரம் ஹெரோயின் போதைப் பொருள் சம்பந்தமாக நாடு முழுவதும் 37,304 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறியுள்ளார். (ம)

முன்னெடுத்திருக்க வேண்டும். அதில் தவறிழைத்துவிட்டோம். மாநகர மக்களின் வறுமை நிலையைப் போக்குவதற்கு பொருளாதார ரீதியில் வளர்த்தெடுப்பதற்கான அணுகுமுறைகளையும் கண்டுபிடித்துக்கொடுக்கும் பட்சத்தில் தான் வறுமை நிலையை ஒழிக்க முடியும்.

தமிழ்நாட்டிற்கும் பலாலிக்குமான விமான சேவை மற்றும் கடல்வழிப் பயணங்கள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால், இந்த வசதிகளைப் பயன்படுத்தி மக்கள் தமது பொருளாதாரத்தை உயர்த்த முடியும். அதே நேரம், சிறுகைத்தொழில் முயற்சிகளையும் ஆரம்பித்துக்கொடுப்பதன் மூலம், வறுமை நிலையைப் போக்க முடியும். மக்களின் வறுமை நிலையைப் போக்குவதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பினும், தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினேன்.

50 வருட அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்க கூடிய பொறியியலாளர் ஒருவரை தருவதாக டொரன்டோ முதல்வரிடம் தெரிவித்திருந்தார். நாட்டில் இருக்கும் அரசியல் சூழ்நிலை காரணமாக ஸ்திரமான முடிவை எடுக்க முடியாத நிலை இருக்கின்றது. நாட்டின் நிலைமை மாற்ற மடைந்த பின்னர், அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதாக கூறியிருந்தார்கள், அதனை உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தேன். உள்ளூராட்சி இணையங்களின் ஊடாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முன் 04

## ஜனாதிபதியே...

மையாக நம்புகிறோம். நாம் முன் வைத்துள்ள கருத்துக்களுக்கு வெற்றி கிட்டும் என்றே நம்புகிறோம். நீதிமன்றம் எந்த தீர்ப்பொன்றை வழங்கினாலும் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்.

இதற்குப் பின்னரான எந்தவொரு சவாலையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம். எந்த தேர்தலாக இருந்தாலும் முகம் கொடுக்கத் தயாராகவே இருக்கிறோமென்றார், (ம)

## இரணைமடுவுக்கு...

கதவுகளை திறக்கும் பொருட்டு ஜனாதிபதி விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்ற போதும் மாகாண மற்றும் மாவட்ட உயரதிகாரிகள் எவரும் இதனை உத்தியோகபூர்வமாக தெரிவிக்கவில்லை.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் கேபி மகிந்த குணரட்ன, கிளிநொச்சி இராணுவ உயரதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நேரடியாக இரணைமடு குளத்திற்கு சென்று ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். (ம-312)

## மன்னார் மனி...

நேற்று மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் சதொச வளாகத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் 112ஆவது நாளாக நேற்று வியாழக்கிழமை சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதுவரை வெளியிடப்பட்ட பல ஊகங்களை உண்மையாக்கும் வகையில் நேற்றையதினம் மனித எச்சம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. நேற்று மதியமளவில் இரண்டு கால்களும் இரும்பு கம்பியால் இறுக்கட்டப்பட்ட நிலையில் இரண்டு வித்தியாசமான மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை நாள்களும் மனிதப் புதைகுழி தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டன. மன்னார் மனிதப் புதைகுழியில் காணப்படும் மனித எச்சங்கள் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளாக இருக்கலாம் என காணாமற்போன உறவினர்கள் அச்சம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்ட இரும்புக் கம்பியால் கட்டப்பட்ட மனித எச்சம் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது. அத்துடன் இந்த வாரத்தில் மனித புதைகுழியில் இருந்து பெண் ஒருவரின் மோதிரம் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் மற்றும் தடய பொருள்களும் மீட்கப்பட்டு வருகின்றன.

இதுவரை மன்னார் மனித புதைகுழியில் இருந்து 266 முழு மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் 260 மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (ம)

## தேவையான நேரத்தில்...

ஹன்ட குரல் அமைப்பின் தலைமையில் கையெழுத்து பெறப்பட்ட பொது மக்களின் மனுக்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று கையளிக்கப்பட்டன.

நாரஹேன்பிட்டி - அபயராம விகாரையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மற்றும் சட்டத்தரணிகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நாடு ஸ்திரமற்ற நிலையில் காணப்படுவதற்கான முதன்மை பொறுப்பை சபாநாயகர் ஏற்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் பெருபான்மையான மக்களுக்கு தேவையானது பொது தேர்தலே என தெரிவித்துள்ளார்.

இதன்போது, பாராளுமன்ற பெரும்பான்மை தொடர்பில் எழுப்பி கேள்விக்கு பதில் வழங்கிய முன்னாள் ஜனாதிபதி, தேவையான நேரத்தில் பலத்தைகாட்ட தயார் என கூறியுள்ளார். (ம)

## ஜனாதிபதி மைத்திரிபால சிறி...

சந்திப்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளிநாட்டு இராஜதந்திரிகள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த சந்திப்பின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பிற்கு இணங்க பணியாற்ற தயாராக இருக்கின்றாரா என்பது தனக்கு தெரியவில்லை என ரணில் தெரிவித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## 19ஆவது திருத்தத்தில் உள்ள குறை...

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது வருமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2015 ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட தன் பின்னர் அவரது தலைமையிலான அயராத முயற்சியின் பெறு பேறாகவே, மூன்று தசாப்த கால மாக நாட்டில் ஜனநாயகம் தொடர் பில் நிலவிய சிக்கல் நிலைமைக்கு தீர்வாக இலங்கை அரசியலமைப் பின் 19ஆவது திருத தச்சட்டம் நிறை வேற்றப்பட்டது.

அந்த திருத்தச்சட்டத்தின் ஊடாகவே சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டமை, ஜனநாயக ரீதியிலான நிறுவனக் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டமை உள்ளிட்ட சாதகமான பெறுபேறுகளை எமது சமூகம் பெற்றுக்கொண்டுள்ளது. அவை எமது நாட்டில் ஜனநாயகத்தை மதிக்கும் மக்கள் பெற்றுக் கொண்ட உண்மையான வெற்றியாக அமையும் அதேவேளை, தாய் நாட்டின் நவீன யுகத்தை நோக்கிய பயணத்திற்கும் இன்றியமையாததாகும்.

எனவே 19ஆவது திருத்தச்சட்டத்தில் ஏதேனும் நடைமுறை ரீதியிலான குறைபாடுகள் காணப்படுமாயின் இலங்கை அரசியலமைப் பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் கருப்பொருள் மற்றும் அதனூடாக ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக ரீதியிலான விடயங்களை பாதுகாத்து, பலப்படுத்தி அரசியல் ரீதியில் பிரச்சினைக்குரிய விடயங்களுக்கான திருத்தங்களை பாராளுமன்ற நடைமுறைக்கமைய மேற்கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அர்ப்பணிப்புடன் இருக்கின்றார் என வலியுறுத்தப்படுகின்றதென்றுள்ளது. (ம)

## வர்த்தமானி அறிவித்தலுக்கு...

பிரதம நீதியசரசர் உள்ளிட்ட 7 பேர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

பிரதம நீதியரசர் நளின் பெரேரா உள்ளிட்ட பிரியந்த ஜயவர்த்தன, பிரசன்ன ஜயவர்தன, சிசிர டி ஆப்ரு, விஜித் மாலல்கொட, புவனேக அலுவிஹாரே மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய ஏழு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரிக்கப்பட்டன.

குறித்த மனுக்கள் மீது கடந்த இரண்டு தினங்களாக உயர் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம் பெற்ற நிலையில் அதன் தொடர்ச்சியாகவே நேற்று மூன்றாவது நாளாகவும் மனுக்கள் விசாரிக்கப்பட்டன.

ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய அரசியல் கட்சிகள் உட்பட 13 தரப்பினர் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தன.

இந்த பின்னணியில், நேற்று முன்தினம்தனது தரப்பு அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்த சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, இந்த மனுவை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி அரசியலமைப்பை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து, அரசியலமைப்பின் 38 ஆம் பிரிவின் இரண்டாம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், சட்டமா அதிபர் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

அத்துடன் ஜனாதிபதி அரசியலமைப்பை மீறி இருந்தால் அது சம்பந்தமாக பாராளுமன்றத்தால் மாத்திரமே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் நீதிமன்றில் கூறியுள்ளார்.

மனுதாரர்களுக்கு வர்த்தமானி அறிவித்தலின் சட்டபூர்வ தன்மையை ஆட்சேபனைக்கு உட்படுத்த எந்த வித சட்டபின்புலமும் இல்லை என்பதனால் மனுக்களை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், இந்த மனுக்களின் இடைநிலை மனுதாரர்களாக முன்னிலையாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, பேராசிரியர் சந்தன ஜயசுமன, சட்டத்தரணி பிரேமநாத் தொலவத்த உள்ளிட்ட இடைமனுதாரர்களால் வழக்கிற்குத் தேவையான மேலதிக சான்றுகள் நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்கமைய நேற்றைய விசாரணைகள், முடிவடைந்துள்ள நிலையில், வர்த்தமானிக்கு எதிரான இடைக்காலத் தடை 8ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு, விசாரணைகள் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டன. (ம)

## நீதிமன்ற தீர்ப்...

பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட வர்த்தமானிக்கு எதிரான இடைக்காலத் தடையுத்தரவு மீதான விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் அரசியல் நிமிடத்துக்கு நிமிடம் மாறிக்கொண்டிருக்கிறது. நாம் எடுத்த தீர்மானமும் நாளுக்கு நாள் பலமடைந்துக் கொண்டு வருகிறது.

நீதிமன்றத் தீர்ப்புடன் பெரும்பான்மையை நிரூபித்து, புதிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க முடியும் என நினைக்கிறோம். நாம், தேர்தலுக்கு செல்ல ஒருபோதும் தயங்கியதில்லை. ஆனால், அனைத்தும் சட்டரீதியாகவும் அரசமைப்புக்கும் உட்பட்டு இடம் பெற வேண்டும் என்றே நினைக்கிறோம்.

சபாநாயகரின் கதிரையில் சென்று ஒரு குழு அமர்ந்து கொண்டு, காட்டு மிராண்டித்தனமாக செயற்படுவதாயின், எதற்கு நீதிமன்றம் என்ற ஒன்று இருக்கிறது?

அவர்கள் பாராளுமன்றில் அமைதியில்லை எனவே, தேர்தலை நடத்துமாறும் கோருகிறார்கள். இதற்காகவா மக்கள் ஆணை வழங்கினார்கள்? எனவும் கேள்வியெழுப்பியிருந்தார். (ம)

### கொவிசெத

திகதி 2018.12.06
சீட்டிழுப்பு இலக்கம் 1965
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 44 55 77 78
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2018/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 3805
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 8 0 4 9 5
தேசிய லொத்தர் சபை

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1521 திகதி 2018/12/06
E Y N
வெற்றி இலக்கங்கள் 04 06 26 27
போனஸ் இலக்கம் 18
தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 2018/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 482
லக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 17 20 23 24 07
தேசிய லொத்தர் சபை

## கிணற்றில் விழுந்த...

நவிண்டில் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ம.தெய்வேந்திரம் (வயது-73) என்பவரே உயிரிழந்துள்ளதாக நெல்லியடி பொலிசார் தெரிவித்தனர்.

பார்வை குறைபாடு உள்ள வயோதிபர் வெளியில் சென்றபோது பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்த உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற கரவெட்டி மரணவிசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணையினை மேற்கொண்டு சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-60)

## FLC FRENCH LANGUAGE CENTRE



# பிரெஞ்சு

(C-4586)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456/0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## வேலையாட்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கார், ஆட்டோ, வான் ஆகிய வாகனங்கள் திருத்துமிடத்திற்கு (கராஜ்), Auto A/C, Tinker (ரிங்கர்), Painter (பெயின்ரர்), Wireing (வயறிங்), Machanic (மெக்கானிக்) போன்ற வேலைகள் தெரிந்த அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. தகைமை உடையவர்கள் கிராம அலுவலரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் உங்கள் சான்றிதழ்களுடனும் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

**Sunjey's A-Z Mart**
**No : 102, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)**

(C-4612)

## வேலை ஆட்கள் தேவை

- யாழ்ப்பாணம் அரசடி வீதியில் அமைந்துள்ள சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. உங்கள் சுயவிபரக்கோவையுடன் பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும். அனுபவம் உள்ளவர்களுக்கும் மும்மொழி தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
  **முக்கிய குறிப்பு:- அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.**
- AD தர வாகன அனுமதிப்பத்திரம் உடைய சாரதி தேவை. (கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.)
- வீட்டுத்தோட்ட வேலைகள் செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. (தனியாகவோ அல்லது குடும்பமாகவோ தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.) கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.

**Sanjeys A-Z Mart,**
**No-100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**
***(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)***

(C-4619)

## வட மாகாண அலுவலகப் பணியாளர் (OES)

**தெரிவுக்கான வகுப்புக்கள்**

நாளை
08.12.2018
சனி 9.30 AM

(7806)

**கோலாசிற்றி**
234, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 320 2787

## இலங்கை அதிபர் சேவை - 3 SLPS - 3

- பிரதி சனிக்கிழமைகளில்

**கருத்தரங்கு தொடர் - 7**

9.00 am ம‌ 08.12

P.கமல்தாசன் SLPS - GK & IQ
A.சுபாகரன் SLEAS - விடய ஆய்வு
A.K.கீர்த்தி MA (Tamil) - கிரகித்தல்

(C-4631)

**நாவலர் கல்வி நிறுவனம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0771116739,
0774696695

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 தொடக்கம் O/L வரை கணிதமும் தரம் 10, 11 ற்கான வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் அனுபவமிக்க ஆசிரியரால் தங்கள் வீடுகளுக்கு வந்து தனியாகவோ / குழுவாகவோ கற்பிக்கப்படும்.

(6686) **தொடர்புகளுக்கு : 077 645 2622**

## பணியாளர்கள் தேவை

பிரபல்யமான உணவு விடுதி, உல்லாசப்பயணிகள் விடுதிகளுக்கு பணியாளர்கள் தேவை.

- காசாளர் (மூன்று மொழிகள் தெரிந்தவர் விரும்பத்தக்கது)
- சமையலாளர்
- பரிமாறுநர்

(மூன்று மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது) தங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியும் தகுந்தசம்பளமும் கொடுக்கப்படும்.

தொடர்பு: (நேரில் சமுகம் தரவும்)
021 222 5876,
077 601 6310 (C-4627)
இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

## STUDY in EUROPE

செங்கன் நாடுகளில் கல்விகற்க
**100% VISA உத்தரவாதம்**

நூற்றுக்கும் மேலான வீசாக்களை பெற்றுக்கொடுத்து சாதனை....

## STUDY in CANADA

மேல் மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS (ACADEMIC) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(C-4626)

நேரில் வந்து இலவச சட்ட ஆலோசனைகளை கேட்டு, வளமான எதிர்காலத்தை எட்டிப்பிடிக்க.

**WEC COLLEGE**



அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் (ஆரியகுளம், யாழ்ப்பாணம்) 0779265447, 0217200989

கிளை அலுவலகம்: இல:377 சங்கத்தானை சாவகச்சேரி

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கிருஸ்ணன் சந்திரசேகரம்

(பல்கலைக்கழக முன்னாள் ஊழியர்)



தோற்றம் 29.06.1953 — மறைவு 18.11.2017

(6694)

எமது குடும்பத்தின் குலவிளக்காகிய *அமரர் கிருஸ்ணன் சந்திரசேகரம்* அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளானது 07.12.2018 வெள்ளிக் கிழமை இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தினத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைத்து உறவுகளையும் வேண்டி நிற்கின்றோம்.

இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பரமேஸ்வரி அம்பாள்வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். தொ.பே. இல : 0774714620 இங்ஙனம் : குடும்பத்தினர்

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**

(C-4671)



DELIVERY IN 3-5 DAYS

| | |
|---|---|
| UK - 550 | */=Kg |
| கனடா - 900 | */=Kg |
| ஜேர்மனி - 700 | */=Kg |
| நெதர்லாந்து - 700 | */=Kg |

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240 — V2 TRAVELS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

## English Medium Tution Gr 06 - Gr 11

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் முன்னைய ஆங்கில பாட ஆசிரியரால் English, English Medium Maths, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் English Medium Science கற்பிக்கப்படுகிறது.

(6690)

**தொடர்புகளுக்கு :- 077 644 9899**

## ஞாயிறு முதல் வெளி வருகின்றது!

**தரம் 5 | புலமைப்பரிசில் - 2019**

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களைக் கொண்ட தொடர் பரீட்சை வினாத்தாள்

# "புலமைச்சிட்டு"

(நாவலர் வெளியீடு)

- வெளிமாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற முடியும்
- இப்பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள்.
- வினாத்தாள் தேவையான பெற்றோர், கல்விநிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் -தொடர்புகளுக்கு T.P - 077 459 8440

**1 ஆவது பரீட்சை - 09.12.2018 (ஞாயிறு)**

ஞாயிறு தோறும் விரும்பிய 6 நேரங்களில் பரீட்சை

| காலை | மாலை |
|---|---|
| 8.00 - 10.00 | 2.00 - 4.00 |
| 9.00 - 11.00 | 3.00 - 5.00 |
| 10.00 - 12.00 | 4.00 - 6.00 |

பரீட்சை நடைபெறும் இடம் :-
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

(C-4618)

## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

தென்னிலங்கையில் தீராத நோயில் படுக்கையில் இருந்தவர்களை கூட எழுந்து நடமாட செய்த அதிசயத்தை நிகழ்த்தியவர் தற்போது யாழ் மக்களுக்காகவும் சேவை வழங்க முன்வந்துள்ளார்.

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணர்களில் ஒருவர்)

**கிளினிக் நடைபெறும் திகதி**

யாழ்ப்பாணத்தில் : 08.12.2018 (நாளை)
பரந்தனில் : 15.12.2018

(C-4629)

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

**I.A.S. HOSPITAL**
இல. 125, பிரதான வீதி,
[2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்]
யாழ்ப்பாணம்.

**ஐ.ஏ.எஸ்.மருத்துவமனை**
பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம்,
பரந்தன் சந்தி, பரந்தன்.

தொடர்பு : 077 444 1082, 077 440 5969

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.